
கல்கி




KALKI ஜனவரி 25, 1953 4 அணா



"இது மெய்...

...நீங்களும் லக்ஸ் டாய்லட் சோப் உபயோகித்து அதிக அழகைப்பெறலாம்"

என்று கூறுகிறார் **சுசீலா**



நிச்சய பலனைத்தரும் ஒரு ஒழுங்கான அழகு பராமரிப்பு இதோ! சுசீலா கூறுவதாவது: "நான் லக்ஸ் டாய்லட் சோப்பின் நறுமணம் கொண்ட வெண்மையான நுரையை சருமத்தின் மேல் நன்றாகத் தேய்க்கிறேன். பிறகு கழுவி, மிருதுவான துண்டினால் துடைக்கிறேன். சருமம் புது அழகைப்பெறுகிறது."

லக்ஸ் டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களின்
அழகு தரும் சோப்

LTS. 387·X30 TM

கல்கி
பொருளடக்கம்

மலர் 12 | 1953 ஜனவரி 25 | நந்தன ௵
இதழ் 26 | | தை மீ 12உ

நேருவுக்குக் கை கொடுங்கள்!	(தலையங்கம்)	...	3
பிடிவாதம் பலிக்கவில்லை!	ரகு	...	4
எச்சரிக்கை!	(கார்ட்டூன்)	...	5
அட்டைப்பட விளக்கம்	...	...	6
யுத்தமே! வா!	...	...	7
பொன்னியின் செல்வன்	கல்கி	...	9
பூசனிக்காய் சோற்றில் மறையுமா?	ரஜனி	...	19
வித்தியாசம்	எஸ். வி. எஸ்.	...	20
அதிர்ஷ்டக் குழந்தை (பாப்பா மலர்)	விஜயம்	...	22
சித்திரக் கண்காட்சி!	...	...	24
எகிப்து நாட்டின் புரட்சித் தலைவர்	ஜெயமணி	...	25
தமிழ்க் களஞ்சியம்	டி. கே. சி.	...	27
விடு கிடைத்ததா?	"வெர்கு"	...	29
கார்த்திகைப் பரிசு	எஸ். டி. ஸ்ரீநிவாஸன்	...	35
பொருட்காட்சியில் இந்திய வைத்தியம்	....	...	40
அவசர புத்தி	எஸ். வி. நாதன்	...	43
பயம் தெளிந்தது!	அக்ஷயம்	...	46
கடற் கிளி	டி. ஜே. ஓகிலவான்—வாஞ்சி	...	49
சிரிக்கும் காந்தி	எம். எல். எஸ்.	...	55
அழகன் என்னும் உழவன்	ஆனா ஸா. குஞ்சிதபாதம்	...	58
வேலை இருக்கிறது!	கடகம்	...	68

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


1953
மற்றொரு முன்னேற்றம்
"ஹிண்ட் டிலக்ஸ்"
சைகிள் ரிம்கள்
இப்பொழுது ஒவ்வொரு ஹிண்ட் சைகிளும் "ஹிண்ட் டிலக்ஸ்" ரிம்கள் இணைக்கப்பட்டு வருகிறது என்று மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம். மிகச் சிறந்த மூலப் பொருள்களிலிருந்து தயாரிக்கப்பட்டு, ஒவ்வொரு ரிம்மும் தனிச் சிறப்புப் பெற்ற "ஹிண்ட் டிலக்ஸ்" என்ற முத்திரை பெற்றுள்ளது. நன்கு பரிசோதிக்கப்பட்டு மிகச் சிறந்ததென நிர்ணயிக்கப்பட்ட பின்னரே இப்பெயர் சேர்க்கப்பட்டுள்ளன.
"ஹிண்ட் டிலக்ஸ்" முத்திரையை வற்புறுத்துங்கள்
ஹிண்ட் சைகிள்ஸ் லிமிடெட்
இந்தியாவில் மிகப் பெரிய சைகிள் உற்பத்தியாளர்கள்
AIP/HC 64

கல்கி

மலர் 12 | தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார். | இதழ் 26

நேருவுக்குக் கை கொடுங்கள்!

இதற்கு முன்னால் நடந்திருக்கும் எத்தனையோ காங்கிரஸ்களுக்கும் இந்த வருஷம் ஹைதராபாத் நானல் நகரில் நடந்த காங்கிரஸுக்கும் ஒரு முக்கியமான வித்தியாசம் உண்டு. முன்பெல்லாம், ஒவ்வொரு தடவையும் தேச சரித்திரத்தின் மிக 'நெருக்கடியான' கட்டத்தில் காங்கிரஸ் கூடும். காங்கிரஸ் கூடப் போகிறதென்று தெரிந்து கொண்டு அந்தத் தேதியை யொட்டி எங்கிருந்தோ ஒரு நெருக்கடி வந்து குதித்து விடும். அது சர்வ தேசீய நெருக்கடியா யிருக்கலாம்; இந்தியா தேசத்து அரசியல் நிலைமை குறித்த நெருக்கடியா யிருக்கலாம்; இல்லாமற் போனால் காங்கிரஸிற் குள்ளேயாவது ஒரு பெரிய நெருக்கடி முளைத்து எழுந்து கோர பயங்கரரூபம் எடுத்துக் கொண்டு நிற்கும். சமீப காலத்தில் நடந்த காங்கிரஸ்களில் ஆச்சாரிய கிருபளானியும் பாபு புருஷோத்தம தாஸ் டாண்டனும் அத்தகைய உள் நெருக்கடிகளை உண்டு பண்ணினார்கள். எனவே, அத்தகைய நெருக்கடியான கட்டங்களிலே கூடும் காங்கிரஸுக்கு முக்கியத்துவம் ஏற்படும். அதனால் காங்கிரஸ் மகாசபை நடக்கும் பந்தலிலோ திறந்த மைதானத்திலோ இட நெருக்கடியும் அதிகமாயிருக்கும்.

ஆனால் அந்த சம்பிரதாயத்துக்கு மாறாக இந்த வருஷத்திய ஹைதராபாத் காங்கிரஸ் நெருக்கடி ஒன்றுமே இல்லாத சமயத்தில் கூடியது. அதனாலேயே இட நெருக்கடியும் அவ்வளவாக ஏற்படவில்லை என்று பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் பிரதிநிதிகள் மொத்தம் 3,600 பேரில் காங்கிரஸுக்கு வந்திருந்தவர்கள் 1,700 பேர்தான் என்றால், பார்த்துக் கொள்ளுங்களேன்!

நடவடிக்கைகளைக் கவனிப்பதற்கு வந்த பொது ஜனங்களின் கூட்டமும் கொஞ்சம் சுமாராய்த் தானிருந்தது என்று தெரிகிறது. சமீப காலத்தில் திரையிடப்பட்ட பல ஸினிமாப் படங்களின் கதி காங்கிரஸுக்கும் நேர்ந்து விட்டதோ என்று சந்தேகப்படும்படி இருந்தது. இத்தனைக்கும் "ஸினிமாவுக்குப் போக வேண்டாம்" என்று நம் அரும் பெரும் தலைவர்கள் பலர் சொன்னது போல், காங்கிரஸ் விஷயத்தில் யாரும் சொல்லவில்லை. "ஸினிமா நட்சத்திரங்களின் அணிவகுப்பைப் பகிஷ்கரியுங்கள்" என்று சில பிரபல ஸினிமாக்காரர்களே பிரசாரம் செய்தது போல் யாரும் ஹைதராபாத் காங்கிரஸைப் பகிஷ்கரிக்கும்படி பிரசாரம் செய்யவில்லை.


முற்காலத்தில் ஹரிபுரா, திரிபுரா முதலிய சின்னஞ்சிறு கிராமங்களிலே கூடிய காங்கிரஸ்களுக்கு எத்தனையோ அசௌகரியங்களைப் பொருட்படுத்தாமல் திரளான பிரதிநிதிகளும் பார்வையாளரும் விஜயம் செய்திருந்தார்கள்.

அப்படியிருக்க, நவநாகரிக நகரமாகிய ஹைதராபாத்தில் இராஜோபசார வரவேற்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தும், காங்கிரஸ் அவ்வளவு மகத்தான உற்சாகத்தை உண்டாக்கவில்லை.

இதற்குக் காரணம் என்ன? சிறிது யோசித்தால் சுலபமாகக் கண்டு பிடிக்கக் கூடியது தான். முற்காலத்தில் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி நிலவிய போது காங்கிரஸ் போராட்ட ஸ்தாபனமாயிருந்தது. ஆகையினால் காங்கிரஸ் பொது மக்களின் பக்திக்கு உரிய ஸ்தாபனமாக விளங்கியது. ஒவ்வொரு காங்கிரஸிலும் செய்யப்பட்ட தீர்மானங்களும் வெளியிடப்பட்ட திட்டங்களும் மக்களின் வாழ்வுடன் தொடர்புடையனவாயிருந்தன. தியாக சீலர்களான இந்தியாவின் தேசீயத் தலைவர்களைத் தரிசிப்பதற்கும் அவர்களுடைய பொன்மொழிகளைக் கேட்பதற்கும் மக்கள் பேராவல் கொண்டிருந்தார்கள்.

இந்தியா சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து அரசியல் முக்கியத்துவம் காங்கிரஸிலிருந்து சுதந்திர அரசாங்கத்துக்கு மாறிவிட்டது. தியாக சீலர்களான மாபெருந் தலைவர்கள் அரசாங்கத்தை நடத்துவோராகி விட்டார்கள். காங்கிரஸுக்குள் சோஷலிஸ்ட் கட்சியார் இருந்தவரையில் நடவடிக்கைகளில் கொஞ்சம் விறுவிறுப்பு இருந்தது. அவர்களும் போய் விட்டார்கள். கிருபளானியும் டாண்டனும் கிளப்பிய தகராறுகள் கொஞ்சம் பரபரப்பை ஊட்டின. அவர்களும் விலகிக் கொண்டு விட்டார்கள்.

பிடிவாதம் பலிக்கவில்லை !



ஈரான் அரசியல் போராட்டத்தில் பிரதமர் முஸாதிக் வெற்றி பெற்று விட்டார். அவருக்கு விசேஷாதிகாரம் அளிக்கப் பார்லிமெண்டு அங்கீகாரம் அளித்து விட்டது.

அரசாங்கத்தை நடத்தும் தலைவர்கள் செய்யும் காரியங்களுக்கும் அவர்கள் தயாரிக்கும் திட்டங்களுக்கும் ஒப்பம் வைக்கும் ஸ்தாபனமாகக் காங்கிரஸ் மாறி விட்டது. ஆதலின் அதன் முக்கியத்துவம் குன்றி விட்டது.

இவ்வளவுக்கும் மேலாக நேருஜி குறிப்பிட்டவை போன்ற காங்கிரஸ் ஸ்தாபனத் தேர்தல் 'தில்லு மல்லுகள்' அந்தப் பழம் பெரும் ஸ்தாபனத்தில் மக்களுக்குள்ள பக்தியை நாளுக்கு நாள் குறைத்துக் கொண்டு வருகின்றன.

இவ்வளவு காரணங்கள் இருக்கும் போது, ஹைதராபாத் காங்கிரஸ் அவ்வளவு பிரமாதமான உற்சாகத்தை ஜனங்களிடையில் எழுப்பாததில் ஆச்சரியமில்லைதானே !

* * *

இத்தகைய சூழ்நிலையில் கூடிய ஹைதராபாத் காங்கிரஸுக்கு இவ்வளவு முக்கியத்துவமேனும் ஏற்பட்டிருந்ததின் காரணம், பண்டித ஜவாஹர்லால் நேரு அம்மகா சபைக்குத் தலைமை வகித்ததே யாகும்.

"ஆறுவது தடவையாக ஒரு மனிதரே காங்கிரஸ் தலைமைப் பதவி வகிக்க வேண்டுமா! தேசத்தில் தலைவர்களுக்கு அவ்வளவு பஞ்சம் வந்து விட்டதா!" என்று சிலர் கேட்கிறார்கள்.

"அரசாங்கத்தின் தலைவரான பிரதம மந்திரியே காங்கிரஸின் தலைவராகவும் இருப்பது மிகவும் அனுசிதம்" என்று வேறு சிலர் சொல்கிறார்கள். இந்தக் கருத்துடனே ஒரு தீர்மானமும் கொண்டு வரப்பட்டு அது பின்னுக்கு ஒத்திப் போடப்பட்டிருக்கிறது.

ஆனால் நாட்டின் நிலை, அரசாங்கத்தின் நிலை, காங்கிரஸ் ஸ்தாபனத்தின் நிலை ஆகியவற்றை ஆராய்ந்து பார்க்கும்போது, அரசாங்கத்தின் தலைவரே காங்கிரஸின் தலைவராகவும் இருப்பது தான் சாலச் சிறந்தது என்று நாம் கருதுகிறோம்.

ஜவாஹர்லால்ஜியைப் போன்று இந்திய மக்களின் பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய தலைவர் இந்திய அரசாங்கப் பொறுப்பை வகிப்பது தற்சமயம் மிக முக்கியம்.

அந்தப் பொறுப்பை அவரைத் தவிர வேறு யாரிடத்தும் மாற்றிக் கொடுக்கப் பொது மக்கள் ஒப்பவும் மாட்டார்கள்.

இத்தகைய ஒப்பற்ற தலைவர் ஒருவர் அரசாங்கத்தின் பிரதம மந்திரியா யிருக்கும்போது, இரண்டாவது அல்லது மூன்றாவது தரத்தைச் சேர்ந்த தலைவர் ஒருவர் காங்கிரஸின் அக்கிராசனரா யிருந்தால், அத்தகைய காங்கிரஸ் அக்கிராசனருக்குத் தாழ்ச்சி மனப்பான்மை ஏற்பட்டு விடுகிறது. "நம்மைக் கேட்டுக் கொண்டு ஒன்றும் செய்வதில்லை" என்ற குரோதம் உண்டாகிறது. அதிலிருந்து அரசாங்கத்தின் நியாயமான செயல்களிலே கூடக் குற்றம் கண்டு பிடிக்கத் தோன்றுகிறது. இப்படி அசட்டுத்தனமான புகார்களைச் சொல்லும் காங்கிரஸ் தலைவரை அரசாங்கத் தலைவர் கண்டனம் செய்ய நேரிடுகிறது. "பார்த்தீர்களா! என்னை அலட்சியம் செய்து அவமானப்படுத்தி விட்டார்கள்" என்று காங்கிரஸ் தலைவர் மேலும் புகார் செய்கிறார். இதனால் தேசத்தின் அரசியலிலே சிறிது விருவிருப்பு ஏற்பட்டாலும், மொத்தத்தில் நிலைமை மிகவும் விரஸமாகிறது. காங்கிரஸ் தலைவருக்கும் அரசாங்கத் தலைவருக்கும் பகிரங்க வேற்றுமை ஏற்பட்டு விவகாரம் நடக்கும்போது ஜனங்களின் பாடு திண்டாட்டமாகிறது. புதிதாகச் சுதந்திரம் பெற்று, பெற்ற சுதந்திரத்தை நிலை நிறுத்திக்

கொள்ளத் திணறிக் கொண்டிருக்கும் தேசத்துக்கு இது எவ்வளவு தீமையை விளைவிக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை. ஆகவே, தற்போதைய நிலைமையில் அரசாங்கத் தலைவரே காங்கிரஸின் தலைவராகவும் இருப்பதுதான் சாலச் சிறந்ததாகும். இல்லாவிடில், தாழ்ச்சி மனப்பான்மை கொள்ளாமலும் அரசாங்க நிர்வாகங்களில் தலையிடாமலும் சமநிலையில் பிரதம மந்திரியுடன் ஒத்துழைத்து அவசியமானபோது யோசனைகள் மட்டும் சொல்லி நடத்திக் கொண்டு போகக் கூடியவர் காங்கிரஸ் தலைவரா யிருக்க வேண்டும். அப்படிப்பட்ட தலைவர் காங்கிரஸுக்குக் கிடைக்கும் வரையில் பிரதம மந்திரி நேருஜியே காங்கிரஸ் அக்கிராசன ராகவும் இருப்பதுதான் தேச நன்மைக்கு உகந்தது; காங்கிரஸ் ஸ்தாபனத்துக்கும் அதுவே பெருமை தருவதாகும்.

பாருங்கள்! நேருஜியைப் போன்ற ஒரு உத்வேகமுள்ள தலைவர் இந்திய அரசாங்கத்துக்குத்தான் வேறு யார் கிடைக்கப் போகிறார்கள்! காங்கிரஸுக்குத்தான் யார் கிடைக்கப் போகிறார்கள்! அவருடைய காங்கிரஸ் தலைமைப் பிரசங்கத்தைப் படித்துப் பாருங்கள். எல்லாம் பழைய விஷயங்கள் தான்; புதிதாக அநேகமாய் ஒன்றுமே இல்லை. பல தடவை நேருஜியே வேறு பல இடங்களில் அவற்றைக் குறித்துப் பேசி யிருக்கிறார்.

ஆயினும், அந்தப் பழைய விஷயங்களிலே எவ்வளவு உத்வேகத்தைப் புகுத்தி யிருக்கிறார்! எவ்வளவு ஆர்வத்துடன் பேசி யிருக்கிறார்! ஐந்து வருஷத் திட்டத்தைப் பற்றி அவர் பேசி யிருப்பதைக் கவனியுங்கள். ஐந்து வருஷத் திட்டம் என்பது என்ன, அதற்காக நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சற்றும் அறிந்து கொள்ளாதவர்கள் கூட ரோமாஞ்சனம் அடையும்படியாக அல்லவா பேசி யிருக்கிறார்! ஐந்து வருஷத் திட்டத்தைப் பற்றி யாராவது குறை கூறினால், "எங்கள் நேருஜியின் அருமைத் திட்டத்தைக் குறை கூறுகிறாயா!" என்று நாம் அவர்களுடன் குஸ்திக்குப் போகத் தயாராகி விடுகிறோமல்லவா!

ஆம்; நேருஜியின் தலைமைப் பிரசங்கத்தில் போலவே காங்கிரஸ் தீர்மானங்களிலேயும் ஐந்து வருஷத் திட்டந்தான் முக்கியமாயிருந்தது.

நல்லது; ஐந்து வருஷத் திட்டத்தை நாம் மனப்பூர்வமாக ஒப்புக் கொள்கிறோம். அதைக் குறித்துப் பிரமாதமாக உற்சாகம் காட்டவும் தயாரா யிருக்கிறோம். அதை வெற்றிபெறச் செய்வதற்காக ஒத்துழைப்பதற்கும் தயாராயிருக்கிறோம்.

ஆனால் எந்த அம்சத்தில், எந்த விதத்தில், எவ்வாறு நாம் ஐந்து வருஷத் திட்டத்தை நிறைவேற்ற ஒத்துழைக்கலாம் என்பதை மட்டும் காங்கிரஸ் தலைவர்களும் அரசாங்கத் தலைவர்களும் நமக்கு விளக்கிக் கூற வேண்டும்.

முன்னே யெல்லாம், காங்கிரஸ் மூலமாக மகாத்மா காந்தி வகுத்து அளித்த திட்டங்களிலே நாம் ஒவ்வொருவரும் செய்ய வேண்டியது என்பது தெளிவாக இருந்தது. அவரவர்களுடைய சக்தியானுசாரம் அந்தக் காரியங்களைச் செய்து வந்தோம்; காங்கிரஸ் திட்டங்கள் நிறைவேறுவதற்கு இயன்றவரை உதவினோம்.

ஆனால், ஐந்து வருஷத் திட்டத்தை முதலெடுப்பில் பார்க்கும்போது பெரும்பாலும் அரசாங்கத்தார் செய்வதற்குரிய காரியங்களே அதில் இடம் பெற்றிருப்பதைக் காண்கிறோம்.

ஐந்து வருஷத் திட்டத்தில் உணவு உற்பத்திப் பெருக்கத்துக்குப் பெரிதும் முக்கியத்துவம் அளித்திருக்கிறார்கள். அதற்காகப் பல அணைக்கட்டுத்

எச்சரிக்கை!



பாஷாவாரி மாகாணப் பிரிவினைக் கொள்கையை மேலும் வளர்த்துக் கொண்டே போவதால் நேரக் கூடிய அபாயங்களைக் குறித்து ஹைதராபாத் காங்கிரஸின் தலைவர்கள் எச்சரிக்கை செய்தார்கள்.

திட்டங்களை வகுத்திருக்கிறார்கள்; அத்திட்டங்களை நிறைவேற்றப் போகிறார்கள்.

இந்த அணைக்கட்டுத் திட்டங்கள் சம்பந்தமாக நாம் செய்வதற்கு என்ன இருக்கிறது! அரசாங்க என்ஜினியர்களும் அன்றாடம் கூலி வேலை செய்யும் தொழிலாளிகளும் செய்து முடிக்க வேண்டிய காரியம். அணைக்கட்டு வேலை நடக்கும் இடங்களில் நாம் போய்க் குறுக்கே படுத்துக் கொண்டு தடை செய்யாமலிருக்கலாம்! அத்தகைய உத்தேசமும் நமக்கு இல்லை! வேறு என்ன விதத்தில் நாம் அணைக்கட்டுத் திட்டங்களுக்கு உதவி செய்வது என்று விளக்கிச் சொன்னால் அல்லவா தேவலை!

பொதுவாக விவசாய வளர்ச்சிக்காக நம்மில் அநேகர் பாடுபடக் கூடும். நாட்டு மக்களில் பெரும்பாலோர் கிராமவாசிகள்; விவசாயிகள். அவர்கள் நிலத்தை உரமிட்டு வளப்படுத்தி, கிடைக்கிற தண்ணீரைச் செட்டாக உபயோகப் படுத்தி, உழைத்துப் பாடுபட்டு, விளைச்சலை ஒன்றுக்கு இரண்டு மடங்கு ஆக்கா விட்டாலும் ஒன்றரை மடங்காவது பெருக்கப் பிரயத்தனப்படலாம்.

ஆனால் இந்தக் காரியத்தில் விவசாயிகள் உற்சாகமாக ஈடுபடுவதற்கு வேண்டிய சூழ்நிலையை இந்திய அரசாங்கமும் மாகாண சர்க்கார்களும் ஏற்படுத்த வேண்டும்.

இந்த முக்கியமான விஷயத்திலேதான் ஐந்து வருஷத் திட்டம் சமைத்தவர்கள் தவறி விட்டார்கள்.

"தானியக் கண்ட்ரோல் அடிப்படையிலேதான் ஐந்து வருஷத் திட்டம் வெற்றியடைய முடியும்" என்று வற்புறுத்தினார்கள்.

விவசாயிகளின் மனப்பான்மை அறிந்தவர்கள் இதற்கு நேர் விரோதமான அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள். சர்க்கார் அணைக்கட்டுகள் கட்டலாம்; வானத்திலிருந்து மேகங்களைப் பிடித்து மழை பெய்யச் செய்யலாம்; இரசாயன உரங்கள் கொடுக்கலாம்; நல்ல விதைகள் கொடுத்து உதவலாம்; விவசாய நிபுணர்களைக் கொண்டு அருமையான யோசனைகள் கூறி உதவலாம்.

இவ்வளவும் செய்தாலும் விவசாயி விளைவிக்கும் நெல்லைப் பலவந்தமாக இன்ன விலைக்குத்தான் கொடுக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தி வாங்குவதாயிருந்தால், அவன் உற்சாகத்தை இழந்து விடுவது நிச்சயம்.

இன்றைக்குக் கலம் பத்து ரூபாய் விதம் விற்கும் நெல் நாளைக்குப் பொருளாதார மந்தம் காரணமாக அதுவாகவே ஆறு ரூபாய்க்கு விழுந்து விட்டால், அதற்காக விவசாயி அரசாங்கத்தையும் குறை கூறமாட்டான்; உற்சாகத்தையும் இழக்க மாட்டான். விலையில் நஷ்டமாவதை அதிகமாக விளைவித்து ஈடு செய்து கொள்ள முயல்வான்.

பக்கத்தில் பத்து ரூபாய்க்கு விற்க வசதி இருக்கும்போது விவசாயியிடம் சர்க்கார் ஆறு ரூபாய் விதம் கட்டாயப்படுத்தி வாங்கினால், "இதுதானா சுயராஜ்யம்! இதுதானா விடுதலை!" என்று விவசாயி வயிறு எரியத்தான் செய்வான். வேறு விதங்களில் எத்தனைதான் உதவி செய்தாலும் அவனுடைய உற்சாகம் விழுந்தது விழுந்ததுதான்! அது திரும்ப உயிர் பெறாது. மக்களின் மனோதத்துவத்தை அறிந்தவர்கள் இதை நன்குணர்வார்கள். ஐந்து வருஷத் திட்டத்தை அமைத்தவர்கள் பொருளாதாரத் தத்துவம் அறிந்தவர்களே தவிர, மக்களின் மனோதத்துவத்தை அறிந்தவர்கள் அல்ல. ஆனால் அதிர்ஷ்டவசமாக மத்திய சர்க்காரின் உணவு மந்திரி ஜனாப் கித்வாயும் மாகாண உணவு மந்திரிகளும் மேற்கூறிய மக்கள் மனோதத்துவத்தை அநுபவ பூர்வமாக உணர்ந்திருக்கிறார்கள். அவர்களுடைய வற்புறுத்தலின் பேரில் தானியக் கண்ட்ரோல் முறை படிப்படியாகத் தளர்த்தப்பட்டு வருகிறது. இது தொடர்ந்து அமுலில் இருந்தால், ஐந்து வருஷத் திட்டத்தில் விவசாய வளர்ச்சி பற்றிய பகுதி பூரணமாக நிறைவேறும் என்று எதிர்பார்க்கலாம்.

ஐந்து வருஷத் திட்டத்திலுள்ள மற்ற முக்கியமான அம்சங்கள் என்னென்ன, அவற்றைக் குறித்துப் பொது மக்களாகிய நாம் எந்தெந்த விதத்தில் உதவி செய்யலாம் என்பதை அரசாங்கத் தலைவர்களும் காங்கிரஸ் பிரதிநிதிகளும் பொது மக்களுக்கு அடிக்கடி விளக்கமாக எடுத்துச் சொல்ல வேண்டும். அவர்கள் அந்தக் காரியத்தில் அசிரத்தையாக இருந்தாலும், தேசமெங்கும் இப்போது புதிதாக ஏற்பட்டு வரும் தேசிய இளைஞர் ஸ்தாபனங்கள் மேற்படி கைங்கரியத்தில் தீவிரமாக ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இத்தகைய கைங்கரியம் செய்வதின் மூலம், இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பு, காங்கிரஸ் தலைமைப் பொறுப்பு ஆகிய இரு பெரும் பாரங்களையும் சுமந்து வரும் ஜவாஹர்லால்ஜி அவர்களுக்குக் கை கொடுத்து உதவ வேண்டும். நேருஜிக்குக் கை கொடுப்பது தேசத்துக்கே கை கொடுப்பதாகும் என்று சொல்லவும் வேண்டுமா!

அட்டைப்பட விளக்கம்

மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.
—திருவள்ளுவர்.

குறளாசிரியர் வாக்குப்படி மங்களகரமான மனை வாழ்க்கை நடத்தி வந்த சதிபதிகளுக்குப் புத்திசாலியான புதல்வன் இருந்தான்.

அவன் அன்று என்ன காரணத்தினாலோ நேரம் போவது தெரியாமல் இருந்து விட்டான். முடிவில் மணியைப் பார்த்தபோது, மணி 9-50 காட்டியது! "ஐயையோ! மணியாகி விட்டதே! பள்ளிக்கூடத்துக்கு நேரமாகி விட்டதே!" என்று துடித்தான்.

அதைக் கேட்ட அவனுடைய தகப்பனார், "மடப்பயலே! இத்தனை நாழிகை என்னடா செய்து கொண்டிருந்தாய்?" என்று அவனைக் கடிந்து கொள்ளவில்லை.

"முட்டாள்! இத்தனை நாழிகை மாடு மேய்க்கப் போயிருந்தாயா?" என்று அவன் தாயார் கடிந்து கொள்ளவில்லை.

அதற்கு மாறாக அவன் அவசரத்தை யுணர்ந்து, அவனுடைய தாயார் அவன் தலையை வாரி விட்டாள்; தகப்பனார் அவன் சட்டைப் பித்தான்களைப் போட்டு விட்டார்.

இப்படிப்பட்ட பெற்றோர்களைப் பெற்ற அந்தச் சிறுவன் பாக்கியசாலி! அந்தப் பெற்றோர்களும் கொடுத்து வைத்த பெற்றோர்கள் அல்லவா?

யுத்தமே! வா!

—அண்டை வீட்டுக்காரர் நெருப்புடன் விளையாடினால், அது அவரது சொந்த விஷயம் என்று யாராவது பார்த்துக் கொண்டிருக்க முடியுமா! அதை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருப்பது புத்திசாலித்தனம் ஆகுமா!

அடுத்த வீட்டுக்காரர் தீயுடன் விளையாடுவதைப் பேசாமல் பார்த்துக் கொண்டுதான் இருக்கவேண்டும். அதை ஆட்சேபிப்பது பிறர் விஷயங்களில் தலையிடுவதாகும் என்று பிரபல லண்டன் "டைம்ஸ்" பத்திரிகை கூறுகிறது.

அமெரிக்கா, பிரிட்டன், பாகிஸ்தான் முதலிய நாடுகளைச் சேர்ந்த பத்திரிகைகளில் சிறிது காலமாகத் திடுக்கிடத் தக்க செய்திகள் வெளியாகி வருகின்றன. மத்திய கேந்திரப் பாது காப்பு மண்டல உடன்படிக்கையில் பாகிஸ்தானும் சேர்ந்து கொள்ளத் தீர்மானித்திருக்கிறது என்பதுதான் அந்தச் செய்தியாகும்.

அதன்படி மத்திய கேந்திர நாடுகளின் பாது காப்புத் திட்டத்தில் பாகிஸ்தானும் முக்கிய பங்கு எடுத்துக் கொள்ளுமாம். அதாவது பாகிஸ்தான் இராணுவம் பலப்படுத்தப்படும்; அமெரிக்காவும் பிரிட்டனும் பாகிஸ்தானில் விமான கூடங்கள் முதலிய இராணுவத் தளங்களை அமைத்துக் கொள்ளும் என்பதுதான் அதன் அர்த்தம்.

அது இந்தியாவுக்கு மிகவும் கலக்கத்தைக் கொடுக்கக் கூடிய விஷயம் என்று ஹைதராபாத்தில் நடந்த காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் ஜவாஹர்லால்ஜி குறிப்பிட்டார்.


கொரியாவில் யுத்தம் நடந்தால் கோழிக்கோட்டில் விலைவாசிகள் விஷம்போல் ஏறுவதைப் பார்க்கிறோம். அப்படியிருக்க, தன் எல்லையை அடுத்துள்ள நாடு போர்க்களம் ஆகக்கூடிய சூழ்நிலையைப் பாரத நாடு எவ்வாறு பேசாமல் பார்த்துக் கொண்டிருக்க முடியும்!

துருக்கி, சிரியா, பாலஸ்தீனம் அல்லது இஸ்ரேல், லெபனான், டிரான்ஸ் ஜார்டன், சௌதி அரேபியா, யெமன், ஓமான், குவெயிட், எகிப்து, ஆப்கானிஸ்தான் முதலியவை மத்தியகேந்திர நாடுகள் என்று கூறப்படுகின்றன. அந்த நாடுகளுள் துருக்கியைத் தவிர வேறு எந்த நாட்டின் இராணுவ பலத்தையும் முக்கியமாகக் குறிப்பிடுவதற்கில்லை. மத்திய கேந்திரப் பிரதேசத்தின் மேற்குக் கோடியில் உள்ள துருக்கி சென்ற மகாயுத்தத்தின் போதும் அதற்குப் பிறகும் பிரிட்டன், அமெரிக்காவின் கட்சியிலேயே இருந்து வருகிறது. அந்தப் பிரதேசத்தின் கிழக்குக் கோடியில் உள்ள பாகிஸ்தானையும் மத்திய கேந்திர நாடுகளில் ஒன்றாகச் சேர்த்து, அதைத் தங்களுடைய இராணுவத் தளமாகச் செய்து விட்டால் பிறகு மத்தியகேந்திரப் பிரதேசம் முழுவதும் பிரிட்டிஷ் அதிகாரத்துக்கு உட்பட்டதாகிவிடும். அங்கிருந்து ஆப்பிரிக்கா, ஐரோப்பா, ஆசியா கண்டங்களில் கூட பிரிட்டன் தனது செல்வாக்கை வியாபித்துக் கொள்ளுவது சாத்தியமாகிவிடும்.

எனவே, இதையெல்லாம் கவனிக்கும்போது பிருத்த ஆழ்ந்த நோக்கங்கொண்டே மத்திய கேந்திரத் தற்காப்புத் திட்டம் உருவாகி வருகிறது என்று தோன்றுகிறது.

வல்லரசுகள் பிறநாடுகளைத் தங்களுடைய இராணுவத் தளமாக உபயோகிக்க முற்படும் எந்தத் திட்டமும் உலக சமாதானத்தைப் 'போ' என்று விரட்டுவதாக முடியும்; உலக மகா யுத்தத்தை 'வா' என்று அழைப்பதாகவே முடியும்.

இந்தியாவில் பிரிட்டனின் ஆதிக்கம் மறைந்ததிலிருந்து, மத்திய கேந்திர நாடுகளில் பிரிட்டனின் செல்வாக்கு அடியோடு குறைந்து விட்டது. ஈரானிலும் எகிப்திலும் பிரிட்டனுக்கு ஏற்பட்டுள்ள கடுமையான எதிர்ப்பே அதற்குச் சான்று ஆகும். அந்தப் பிரதேசங்களில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவதற்கும், ஐரோப்பா — ஆசியா — ஆப்பிரிக்க மண்டலங்களில் தங்களுடைய இராணுவ கேந்திரஸ்தானத்தைப் பலப்படுத்திக் கொள்வதற்கும் பிரிட்டன் மத்திய கேந்திரப்பாதுகாப்பு உடன்படிக்கையை உருவாக்க முற்பட்டிருக்கலாம்.



பொன்னியின் செல்வன்

கல்கி

மணியம்

அத்தியாயம் 34

இராவணனுக்கு ஆபத்து!

சுந்தரசோழர் தமது செல்வக் குமாரியைப் பார்த்து, "குந்தவை! நான் முதன் மந்திரியோடு இராஜ்ய காரியங்களைப் பற்றிக் கொஞ்சம் பேச வேண்டும். நீங்கள் போய் உங்கள் காரியங்களைப் பாருங்கள். போகும்போது இதையும் அழைத்துக் கொண்டு போங்கள்! உன் தாயார் மட்டும் இங்கே சிறிது நேரம் இருக்கட்டும்!" என்றார்.

சக்கரவர்த்தி "இதையும்" என்று குறிப்பிட்டது மந்தாகினியைத் தான். அப்படிக் குறிப்பிட்டதிலிருந்து அவள் விஷயத்தில் அவருடைய அருவருப்பு வெளியாயிற்று.

குந்தவை சிறிது ஏமாற்றத்துடன் தந்தையை நோக்கினாள். அதைக் கவனித்த சக்கரவர்த்தி, "ஆமாம்; இவள் மூட்டிக் கொண்டது சிற்ப மண்டபத்திலுள்ள கைலாச மலைதானா என்பதைத் தெரிந்து கொள்வது நல்லது! இவளை அங்கேயே அழைத்துக் கொண்டு போய்க் காட்டித் தெரிந்து கொள்ளுங்கள்! இவள் இங்கே நிற்பதை என்னால் சகிக்க முடியவில்லை!" என்றார்.

குந்தவை ஏமாற்றம் நிறைந்த முகத்தோடு மந்தாகினியைக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு புறப்பட்டாள். அப்போது மலையமான் மகள் குந்தவையின் அருகில் வந்து, அவள் காதில் மட்டும் கேட்கும்படியாக, "குழந்தாய்! இவள் இப்போது பார்க்கச் சகிக்காமல் தானே இருக்கிறாள்? அப்பாவிடம் வருத்தப்படுவதில் என்ன பயன்? உன்னுடைய அலங்காரக் கலைத் திறமையை யெல்லாம் இவளிடம் காட்டு, பார்க்கலாம்!" என்றாள்.

குந்தவை புன்னகை மூலம் தன் சம்மதியைத் தெரிவித்து விட்டு அங்கிருந்து மந்தாகினியை அழைத்துச் சென்றாள். அவர்களுடன் வானதியும் பூங்குழலியும் வெளியேறினார்கள்.

பிறகு சுந்தர சோழர் முதன் மந்திரியையும் மலையமான் மகளையும் மாறி மாறிப் பார்த்த வண்ணம், "நீங்கள் இரண்டு பேரும் சேர்ந்து இந்தக் காரியத்தை எதற்காகச் செய்தீர்கள் என்று தெரியவில்லை. எனக்கு இதனால் சந்தோஷம் உண்டாகும் என்று நீங்கள் எண்ணியிருந்தால் அது பெருந் தவறு! முதன் மந்திரி! எதற்காக நீர் இவ்வளவு பிரயத்தனப்பட்டுக் கோடிக்கரையிலிருந்து இந்தக் காட்டுமிராண்டி ஜன்மத்தைப் பிடித்துக் கொண்டு வரச் செய்தீர்? இப்போதாவது உண்மையைச் சொல்லுங்கள்! இனி மேலாவது என்னிடம் எதையும் மறைத்து வைக்க முயல வேண்டாம்!" என்றார்.

அப்போது முதன் மந்திரி அநிருத்தர் உணர்ச்சி ததும்பக் கூறினார்:—

"ஒருதடவை செய்த பிழையை மறுபடியும் செய்ய மாட்டேன். இனி எந்தக் காரியத்தையும் தங்களிடமிருந்து மறைத்து

வைக்கவும் உடன்படேன். உண்மை வெளிப்பட வேண்டுமென்பதற்காகவே இப்போது இவ்வளவு பிரயத்தனம் எடுத்துக் கொண்டேன். தங்களால் ஒரு பெண்மணி கடலில் விழுந்து இறந்ததாகத் தங்கள் மனம் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தது. அந்த சம்பவத்தைத் தாங்கள் மறந்து விட்டதாக வெகு காலம் நான் எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் நாளாக ஆக அந்த நினைவு தங்கள் உள்ளத்தின் உள்ளே பதிந்து வேதனையை அதிகப்படுத்திக் கொண்டிருந்ததாக அறிந்தேன். தூக்கத்தில் தாங்கள் அதைப் பற்றிய கனவு கண்டு பலமுறை ஓலமிட்டதாக மகாராணி சொன்னார்கள். அதனால் தங்களைக் காட்டிலும் மலையமான் மகளார் அதிக வேதனை அடைந்தார்கள். சில காலத்துக்கு முன்பு என்னிடம் யோசனை கேட்டார்கள். அதன் பேரில் நாங்கள் இந்தப் பிரயத்தனம் செய்யத் தீர்மானித்தோம். தங்கள் காரணமாக இறந்து விட்டதாகத் தாங்கள் நினைத்து வருந்திய பெண்மணியைத் தங்கள் முன்னாலேயே கொண்டு வந்து நிறுத்தி அந்த எண்ணத்தைப் போக்க உத்தேசித்தோம். நேரில் கொண்டு வந்து நிறுத்தினால் தான் தாங்கள் நம்புவீர்கள் என்று எண்ணினோம். இது குற்றமாயிருந்தால் கருணை கூர்ந்து மன்னிக்க வேண்டும்!"

இதைக் கேட்ட சக்கரவர்த்தி ஆத்திரம் பொங்கக் கூறியதாவது :—

"குற்றந்தான்! பெருங்குற்றம்! இத்தனை நாளும் இவள் பேயாக என்னைச் சுற்றிக் கொண்டிருந்தாள். கனவிலே வந்து கஷ்டப்படுத்திக்கொண்டிருந்தாள். பேய்க்குப் பதிலாகப் பிச்சியைக் கொண்டு வந்து என் முன்னால் நிறுத்தியிருக்கிறீர்கள். இது எனக்கு மகிழ்ச்சி தரும் என்று நினைத்தீர்களா? ஒரு நாளும் இல்லை. என்னிடம் முன்னதாக உண்மையைத் தெரிவித்திருந்தால் இவளை இங்கே அழைத்து வரும் யோசனையைக் கண்டிப்பாக நிராகரித்திருப்பேன். போனது போகட்டும். ஏதோ செய்தது செய்து விட்டீர்கள். வெகு கஷ்டப்பட்டு இங்கே இந்த ஊமைப் பைத்தியக்காரியை அழைத்து வந்து சேர்த்தீர்களே? திரும்பி அவளை எப்போது எப்படிப் போகச் செய்வதாக உத்தேசம்?" இவ்வாறு சுந்தரசோழர் கேட்டதும், அநிருத்தர் உண்மையிலேயே பேச்சிழந்து நின்றார்.

அப்போது சக்கரவர்த்தினி, "சுவாமி! இங்கிருந்து என் சகோதரியைத் திரும்பிப் போகச் செய்வதாகவே எனக்கு உத்தேசமில்லை. இந்த அரண்மனையில் என்னுடனேயே அவர் தங்கியிருப்பார். எனக்கு முன் பிறந்த தமக்கையைப் போல் பாவித்து இவரை நான் போற்றிப் பூசித்து வருவேன்!" என்றாள்.

"தேவி! என்னிடம் உனக்குள்ள பக்தியை இந்த மாதிரி மெய்ப்பிக்க நீ பிரயத்தனப்பட வேண்டியதில்லை. கண்ணகியைக் காட்டிலும் மேலான கற்பின் அரசி என்பதை இந்த இருபத்தைந்து ஆண்டுகளில் நான் கண்டிருக்கிறேன். நான் நோய்ப்பட்டது முதல் நீ உன் செல்வக் குழந்தைகளையும் மறந்து எனக்குப் பணிவிடைகள் செய்து வருவதையும் எனக்காக நோன்பு நோற்று வருவதையும் அறிந்து தானிருக்கிறேன். காட்டிலே திரிந்த ஊமைப் பிச்சியை அரண்மனையிலே அழைத்து வைத்து என்னிடம் உனக்குள்ள பக்தியைக் காட்ட வேண்டியதில்லை. மலையமான் மகளே! இதைக் கேள்! முதன் மந்திரி! நீங்களும் நன்றாய்க் கேட்டுக் கொள்ளுங்கள். எப்போதோ ஒரு காலத்தில் மனித சஞ்சார மற்ற தீவாந்தரத்தில் நான் தன்னந் தனியே தங்கியிருந்த போது இந்த ஊமைப் பிச்சியைப் பார்த்தேன். அச்சமயம் இவளிடத்தில் பிரியம் கொண்டதும் உண்மைதான். இல்லை என்று சொல்லவில்லை. அதனாலேயே இன்னமும் நான் இவளை நினைத்து ஏங்கித் தவிப்பதாக நீங்கள் எண்ணினால், அதை விடப் பெரிய தவறு செய்ய முடியாது. அப்போது இவள் பேரில் எனக்கு ஏற்பட்டிருந்த பிரியத்துக்கு எத்தனையோ காரணங்கள் இருந்தன. அந்தப் பிரியம் இந்த இருபத்தைந்து வருஷ காலத்தில் முற்றும் மாறித் துவேஷமாகவும் அருவருப்பாகவும் உருவெடுத்திருக்கிறது. கனவிலும் நினைவிலும் என்னை அவ்வளவாக இவள் கஷ்டப்படுத்தியிருக்கிறாள். இவள் இந்த அரண்மனையில் இருக்கிறாள் என்னும் எண்ணத்தையே என்னால் சகிக்க முடியவில்லை. உடனே இவளை இங்கிருந்து அனுப்பிவிட்டு மறு காரியம் பாருங்கள். இவளைப் பேய் என்று நினைத்தபடியால் இவள் பேரில் விளக்கை எடுத்து எறிந்தேன். உயிரோடும் உடம்போடும் இருப்பவள் என்று அறிந்திருந்தால் என்ன செய்திருப்பேனோ, தெரியாது!"

இவ்வாறு சுந்தரசோழர் குரோதம் ததும்பிய குரலில் கூறிய குரூரமான

வார்த்தைகளைக் கேட்டுச் சக்கரவர்த்தினியும் முதன் மந்திரியும் கதிகலங்கிப் போனார்கள். சக்கரவர்த்தி இவ்விதம் பேசுவார் என்று அவர்கள் எதிர்பார்க்கவே இல்லை. அநிருத்தர் தாம் செய்த பழைய குற்றத்துக்காக மட்டுமே தம்மைச் சக்கரவர்த்தி கண்டனம் செய்வார் என்று கருதியிருந்தார். மகாராணியோ சக்கரவர்த்தி வாய்விட்டு வெளிப்படையாகச் சொல்லா விட்டாலும் மனத்திற்குள் மகிழ்ந்து பூரித்துத் தன்னுடைய பெருந்தன்மையான செயலை ரொம்பவும் பாராட்டுவார் என்று எதிர்பார்த்தாள்.

சுந்தர சோழரின் கொடிய வார்த்தைகள் அவர்களுக்கு ஏமாற்றமளித்ததோடு ஓரளவு வெறுப்பையும் கோபத்தையும் உண்டாக்கின.

சக்கரவர்த்தி இத்தனை நேரம் பேசியதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல், "சீச்சீ! இந்த ஊமைப் பைத்தியக்காரி உலகில் உயிரோடு வாழ்ந்திரா விட்டால் என்ன நஷ்டம் நேர்ந்து விடும்? இவள் கடலில் விழுந்தபோது உண்மையாகவே செத்துத் தொலைந்து போயிருந்தால் எவ்வளவு நன்றாயிருந்திருக்கும்! எந்தப் பரம முட்டாள் மெனக்கட்டு இவளை எடுத்துக் காப்பாற்றினான்?" என்றார்.

இதற்குப் பிறகு மலையமான் மகளால் பொறுக்க முடியாமற் போயிற்று. உருக்கம் ததும்பிய ஆவேசத்துடன் அவள், "சுவாமி! தங்கள் வாயால் அப்படிச் சொல்லாதீர்கள்! மகா பாவம்! நன்றி மறத்தல் எவ்வளவு கொடிய பாதகம் என்று பெரியோர்கள் எத்தனையோ பேர் சொல்லியிருக்கிறார்களே? தங்கள் உயிரை இந்த மாதரசி காப்பாற்றியதை வேணுமானாலும் மறந்து விடுங்கள். ஆனால் நம் அருமைக் குமாரன் அருள்மொழிவர்மனை இவள் காப்பாற்றியதை மறக்கலாமா? தாங்கள் மறந்தாலும் நான் மறக்க முடியாது. பதினாறு ஜன்மத்துக்கும் இந்தத் தெய்வ மகளுக்கு நான் நன்றிக் கடன் பட்டிருப்பேன்!" என்று சொன்னாள்.

"தேவி! அந்தக் கதையை மறுபடியுமா சொல்லுகிறாய்?..." என்று சுந்தர சோழர் மேலும் பேசுவதற்குள் மலையமான் மகள் குறுக்கிட்டுக் கூறினாள்:—

"கதை அல்ல, சுவாமி! அருள்மொழியே என்னிடம் சொன்னான். காவேரி வெள்ளத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிய தேவிதான் ஈழத் தீவிலும் பல முறை தன்னைக் காப்பாற்றியதாகச் சொன்னான். நல்ல வேளையாக, அவன் நாகைப்பட்டினத்திற்கு வந்து சுகமாயிருக்கிறான். அவனை அழைத்து வரச் செய்யுங்கள். தாங்களே நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்!"

"ஆமாம், ஆமாம்! அருள்மொழி நாகைப் பட்டினத்தில் இருக்கிறான். ஆனால் அவன் சுகமாயிருக்கிறான் என்பது என்ன நிச்சயம்? நேற்று அடித்த பெரும் புயலில் அவனுக்கு ஆபத்து நேர்ந்ததோ என்னமோ? முதன் மந்திரி! என் உள்ளத்தில் நிம்மதி இல்லை! இனந் தெரியாத அபாயம் ஏதோ என் குலத்தை நெருங்கிக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. இந்தச் சமயத்தில் இந்த ஊமைப் பிச்சி இங்கு வந்திருப்பதும் ஓர் அபசகுனமாகவே தோன்றுகிறது..."

"சுவாமி! கரையர் குலமகள் இங்கே இச்சமயம் வந்திருப்பது அபசகுனம் இல்லை; நல்ல சகுனம். இவள் இங்கிருப்பது நம்முடைய குலத்துக்கே ஒரு பாதுகாப்பு. நான் இடைவிடாமல் பிரார்த்தனை செய்யும் துர்க்கா பரமேசுவரியே என் மீது அருள்புரிந்து இந்தத் தேவியை அனுப்பி வைத்திருக்கிறாள்......"

"இல்லவே இல்லை. துர்க்கா பரமேசுவரி அனுப்பவில்லை. சனீசுவரன் அனுப்பியிருக்கிறான். அந்தப் பிச்சியை உடனே திரும்பிப் போகச் சொல்லிவிட்டு மறு காரியம் பாருங்கள். நீங்கள் முடியாது என்றால், நானே அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டியதுதான்......"

"சுவாமி! ரொம்பவும் கருணை கூர்ந்து எனக்கு இந்த வரத்தைக் கொடுங்கள். அருள்மொழி வந்து சேருகிற வரையில் அவள் இந்த அரண்மனையில் இருப்பதற்கு அனுமதி அளியுங்கள்!" என்று சக்கரவர்த்தினி உருக்கமான குரலில் கேட்டுவிட்டுச் சுந்தர சோழரின் பாதங்களைத் தொட்டுப் பணிந்தாள்.

"முதன் மந்திரி! கேட்டீரா? வெளுத்ததெல்லாம் பால் என்று கருதும் மலையமான் மகளின் கோரிக்கையைக் கேட்டீரா? கடவுளே! இப்படியும் ஒரு கபடமற்ற சாது உலகத்தில் இருக்க முடியுமா? இவள் என்னிடம் எதுவுமே கோருவதில்லை. போயும் போயும் இப்படிப்பட்ட வரத்தைக் கேட்கிறாள். அதை மறுக்க மனம் வரவில்லை. ஆனால் அந்த ஊமைப் பைத்தியக்காரி இங்கே இருக்கும் ஒவ்வொரு நிமிஷமும் எனக்கு நரக வேதனையாக இருக்கும். ஆகையால், நாகையிலிருந்து இளவரசனை

அழைத்து வர உடனே ஏற்பாடு செய்யுங்கள்!"

"அப்படியே செய்கிறேன், ஐயா! யானைப் படைகளும் குதிரைப் படைகளும் அனுப்பிப் பகிரங்கமாக இளவரசரை அழைத்துவரச் செய்யலாமா? அல்லது......"

"மாறு வேடம் பூணச் செய்து இரகசியமாக அழைத்து வரலாமா என்று தானே கேட்கிறீர்? பகிரங்கமாக இளவரசன் வந்தால் சோழ நாட்டில் பெருங் குழப்பம் ஏற்படும் என்று எண்ணுகிறீர்கள் அல்லவா?"

"நான் எண்ணுவது மட்டும் அல்ல, பிரபு! நிச்சயமாக அறிந்திருக்கிறேன். மக்கள் பல காரணங்களினால் கொதிப்பு அடைந்திருக்கிறார்கள். ஏதாவது ஒரு வியாஜம் ஏற்பட வேண்டியதுதான்; உடனே மக்களின் உள்ளக் கொதிப்பு வெளியே பீறிக் கொண்டு வரும். பழ





வேட்டரையர்களும் மதுராந்தகத் தேவரும் என்னகதி அடைவார்கள் என்று சொல்லமுடியாது..."

"இது என்ன பேச்சு, முதன் மந்திரி! குடி மக்கள் அப்படி மூர்க்கத்தனமாக நடந்து கொண்டால், சோழ நாட்டு வீர சைன்யங்கள் எங்கே போயின?"

"சைன்யங்களிடையேதான் கொதிப்பு அதிகம், பிரபு! மக்களாவது வெறுங் கூச்சல் குழப்பத்துடன் அடங்கி விடுவார்கள். சேனா வீரர்களோ, தஞ்சைக் கோட்டையைச் சின்னா பின்னமாக்கி, பழுவேட்டரையர்களையும் மதுராந்தகத் தேவரையும் சிறையில் அடைத்து விட்டு, ஈழங்கொண்ட வீராதி வீரராகிய அருள்மொழி வர்மரைச் சிங்காதனத்தில் ஏற்றிவிட்டே மறு காரியம் பார்ப்பார்கள்..."

"அப்படி நடக்க வேண்டுமென்று நீங்களும் மனத்திற்குள் ஆசைப் பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். முட்டாள் ஜோதிடர்கள் கட்டிவிட்ட கதைகளை நம்பிக் கொண்டு குடி மக்களும் புத்தி தடுமாறி அலைகிறார்கள். ஆனால் உங்கள் மனத்தில் ஒன்று நிச்சயமாகப் பதிய வைத்துக் கொள்ளுங்கள். என் பெரிய பாட்டனார் கண்டராதித்த அடிகளின் குமாரன் மதுராந்தகனே இந்தச்



சோழ சிம்மாசனத்துக்கு உரிமை உடையவன். அவனுக்கே பட்டம் கட்டி வைப்பதென்று தீர்மானித்து விட்டேன். மக்கள் அதற்குத் தடை சொன்னாலும் சரி, தேவர்களும் மூவர்களும் வந்து தடுத்தாலும் சரி, நான் கேட்கப் போவதில்லை. என்னுடைய குமாரர்கள் அதற்குக் குறுக்கே நின்றால்......"

"சுவாமி! அப்படி ஒருநாளும் நேராது. தங்கள் விருப்பத்துக்கு மாறாகத் தங்கள் குமாரர்கள் ஒரு நாளும் தடை சொல்ல மாட்டார்கள். அருள்மொழிக்கு இராஜ்ய ஆசையே கிடையாது. இலங்கை மணிமகுடத்தை அவனுக்குக் கொடுத்தார்கள். அதை அவன் வேண்டாம் என்று மறுதளித்துவிட்டான். அப்படிப்பட்டவனா தங்கள் வார்த்தைக்கு மறு வார்த்தை கூறப் போகிறான்? கரிகாலன் மட்டும் என்ன? அவனுக்குத் தாங்களே பார்த்து யுவராஜ பட்டாபிஷேகம் செய்து வைத்தீர்கள். அதனால் ஒப்புக் கொண்டான். அவனுடைய வீர பராக்கிரமத்தைப் பற்றி நான் சொல்ல வேணுமா? அவன் ஆசைப்பட்டால் தானாகவே அவனுடைய வீரவாளின் உதவியைக் கொண்டு பெரிய இராஜ்யத்தை ஸ்தாபித்துக் கொள்ளக் கூடியவன் அல்லவா? ஆனால் அவனுக்கும் இராஜ்யம் ஆளுகிற ஆசை இல்லை. தாங்கள் அவனிடம் தங்கள் விருப்பம் இன்னதென்பது பற்றி ஒரே ஒரு வார்த்தை சொல்ல வேண்டியதுதான்..."

"அந்த வார்த்தை நான் சொல்லிவிடப் போகிறேனே, அவன் காதில் விழுந்து விடப்போகிறதே என்பதற்காகத்தானே எத்தனை சொல்லி அனுப்பியும் இங்கே வராமல் ஆட்டம் போடுகிறான்?"

"சக்கரவர்த்தி! பட்டத்து இளவரசர் காஞ்சியில் அற்புதமான பொன் மாளிகை நிர்மாணித்துவிட்டுத் தங்களின் வருகைக்காகக் காத்திருக்கிறார்......"

"எதற்காகக் காத்திருக்கிறான் என்று எனக்குத் தெரியும். கம்ஸன் அவனுடைய பெற்றோர்களைச் சிறை வைத்தது போல் எங்களைச் சிறை வைத்துவிட்டுச் சோழ சிம்மாசனம் ஏறக் காத்திருக்கிறான். அவன் கட்டியிருப்பது பொன் மாளிகையோ, அல்லது அரக்கு மாளிகைதானோ. யாருக்குத் தெரியும்?"

"சுவாமி! கரிகாலனைப் பற்றித் தாங்கள் இவ்வாறு சொல்வது மிகக் கொடுமை!" என்றாள் மலையமான் மகள்.

"சக்கரவர்த்தியின் உள்ளத்தை அவ்வளவு தூரம் விஷமாக்கி வைத்திருக்கிறார்கள்!" என்றார் முதன் மந்திரி.

"வேறு யாரும் இல்லை; என் மனத்தில் விஷம் ஏற்றியவன் கரிகாலனேதான். அவன் எனக்கு உண்மையான மகனாயிருந்தால் எத்தனை தடவை சொல்லி அனுப்பியும் ஏன் வரவில்லை?" என்று சுந்தர சோழர் கேட்டார்.

"அதற்கு வேறு சரியான காரணங்களும் இருக்கலாம் அல்லவா?"

"நீங்கள்தான் ஒரு காரணத்தை ஊகித்துச் சொல்லுவதுதானே?"

"கரிகாலன் கொள்ளிடத்துக்கு இப்பாஃ வந்தால் பழுவேட்டரையர்கள் அவனைச் சிறைப்படுத்தி விடுவார்கள் என்று நாடெல்லாம் பேச்சாயிருக்கிறது......"

"அம்மாதிரி சொல்லி என் மகனுடைய மனத்தை யாரோ கெடுத்திருக்கிறார்கள்! இவனுடைய தகப்பன் திருக்கோவலூர் மலையமான் ஒருவன்; கொடும்பாளூர் வேளான் ஒருவன். நீங்களும் அவர்களோடு சேர்ந்து கொண்டீர்களோ, என்னமோ, தெரியவில்லை......"

"சுவாமி! நான் யாரைப் பற்றியும் அவர்களுக்குப் பின்னால் பேசும் வழக்கமில்லை. சற்று முன் தாங்களே அபாயத்தைப் பற்றிப் பேசினீர்கள். தங்கள் உள்ளத்தில் அவ்விதம் தோன்றுவதாகச் சொன்னீர்கள். தங்கள் உள்ளத்தில் தோன்றுவது முற்றிலும் உண்மை. சோழர் குலத்துக்கு அபாயம் நெருங்கிக் கொண்டுதானிருக்கிறது. அது இரண்டு வழியாக வருகிறது. இந்த நாட்டில் இப்போது இரண்டுவிதமான சதிகள் நடைபெற்று வருகின்றன. பழுவேட்டரையர்களும் சம்புவரையர்களும்......"

"முதன் மந்திரி அநிருத்தரே! நிறுத்துங்கள். பழுவூர் வம்சத்தார் நூறு ஆண்டு காலமாகச் சோழ குலத்துக்குத் தொண்டு செய்து வந்தவர்கள். பெரிய பழுவேட்டரையர் இருபத்து நாலு போர் முனைகளில் போரிட்டுத் தமது மேனியில் அறுபத்து நாலு புண்களைச் சுமந்து கொண்டிருக்கிறார். அப்படிப்பட்டவர் இன்று சோழகுலத்துக்கு எதிராகச் சதி செய்கிறார் என்று சொல்வதைக் காட்டிலும், சூரியன் இருட்டாகி விட்டது என்றும், கடல் நீரில் தீப்பிடித்துக் கொண்டு விட்டது என்றும் சொல்லுவதை நம்பலாம்......"

"சக்கரவர்த்தி! சூரியனையும் கிரஹணம் பிடிக்கிறது. கடல் நீரில் வடவாமுகாக்கினி கொழுந்து விட்டெரிகிறது. ஆனால் அதைப்பற்றி நான் சொல்ல வரவில்லை. பழுவேட்டரையர்கள் சோழ குலத்துக்கு எதிராகச் சதி செய்வதாக நான் கூறவே இல்லை. மதுராந்தகருக்குப் பட்டம் கட்டுவதற்காக அவர்கள் மிகுந்த பிரயத்தனம் செய்து வருகிறார்கள்......"

"மகா சிவபக்தராகிய கண்டராதித்தருடைய புதல்வருக்குப் பட்டம் கட்ட எண்ணுவதில் என்ன தவறு? சிம்மாசன உரிமை நியாயமாக மதுராந்தகனுக்குத் தானே உரியது?" என்றார் சக்கரவர்த்தி.

"நானும் அதையேதான் சொல்லுகிறேன். மேலும் தாங்களே மனமுவந்து மதுராந்தகத் தேவருக்குச் சோழகுலத்து மணி மகுடத்தை அளிக்கத் தீர்மானித்து விட்டீர்கள். அப்படியிருக்கும்போது பழுவேட்டரையர்கள் மீது குற்றம் என்ன? தங்கள் விருப்பத்தை நிறைவேற்றி வைக்கவே அவர்கள் பிரயத்தனப் படுகிறார்கள்......"

"ஆகையினால் என்னுடைய நன்றியறிதலுக்கு மேலும் அவர்கள் பாத்திரமாகி யிருக்கிறார்கள்."

"ஆனால், சக்கரவர்த்தி, தங்களுடைய சம்மதம் பெறாத சில காரியங்களையும் செய்கிறார்கள். சோழ ராஜ்யத்தை இரண்டாகப் பங்கு போட்டுக் காவேரிக்குத் தெற்கேயுள்ளதை மதுராந்தகத் தேவருக்கும் வடக்கே உள்ள பகுதியைக் கரிகாலருக்கும் கொடுத்து விடுவதென்று யோசனை செய்து வருகிறார்கள். சம்புவரையர் மாளிகையில் இன்றைய தினம் அந்தப் பேச்சு நடந்து வருகிறது. சக்கரவர்த்தி! நூறு வருஷ காலமாகத் தங்கள் முன்னோர்கள் பாடுபட்டு விஸ்தரித்த ராஜ்யத்தை, — விஜயாலய சோழரும் ஆதித்த சோழரும் மகா பராந்தக சக்கரவர்த்தியும் ஈழம் முதல் கோதாவரி வரையில் நிலைநாட்டிய சோழ மகா ராஜ்யத்தை இரண்டாகப் பிளந்து பங்கு போடுவது தங்களுக்குச் சம்மதமா?"

"முதன் மந்திரி! ஒரு நாளும் அதற்கு நான் சம்மதம் கொடேன். சோழ இராஜ்யத்தைப் பிளப்பதற்கு முன்னால் என்னை வெட்டிப் பிளந்து விடுங்கள் என்று சொல்லுவேன். பழுவேட்டரையர் அத்தகைய முயற்சியில் இறங்கி யிருப்பார் என்று நான் நம்பவில்லை. ஒரு வேளை எனக்கு அது பிரியமா யிருக்கலாம், என் மகனுக்குப் பாதி இராஜ்யமாவது கொடுக்க நான் ஆசைப்படலாம் என்ற எண்ணத்தினால் அவர் இந்த யோசனைக்கு இணங்கி யிருப்பார். அது எனக்கு விருப்பமில்லை யென்று தெரிந்தால் கைவிட்டு விடுவார். முதன் மந்திரி! இந்தச் சோழ சாம்ராஜ்யத்தில் ஒரு அங்குல விஸ்தீரணம் கூடக் குறையாமல் மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டி வைப்பேன். அதை என் மக்கள் எதிர்த்தாலும் சரி, பழுவேட்டரையரே எதிர்த்தாலும் சரி, நான் கேட்கப் போவதில்லை."

"சக்கரவர்த்தி! பழுவேட்டரையர் எதிர்த்தால் பொருட்படுத்த வேண்டியதில்லை. தங்கள் புதல்வர்களோ எதிர்க்கப் போவதில்லை. ஆனால் மதுராந்தகருக்குப் பட்டம் கட்டுவதற்குத் தடை இவையெல்லாம் அல்ல. அந்தத் தடை இன்னும் பெரிய இடத்திலிருந்து வருகிறது. தாங்களும் நானும் இந்தச் சோழநாட்டு மக்கள் அனைவரும் போற்றி வணங்கும் தெய்வப் பெண்மணியிடமிருந்து அந்தத் தடை வருகிறது. சில நாளைக்கு முன்பு கூட அவரிடம் பேசிப் பார்த்தேன்......"

"செம்பியன் மாதேவியை நீங்கள் குறிப்பிடுகிறீர்கள். அந்த மாதரசியின் மனத்தையும் யாரோ கெடுத்திருக்கிறார்கள். நான் என் புதல்வர்களுக்குப் பட்டம் கட்ட ஆசைப்படுவதாக பெரிய பிராட்டி கருதி வருகிறார். முதன் மந்திரி! அவரை உடனே இங்கு அழைத்து வருவதற்கு ஏற்பாடு செய்யுங்கள். நான் அவருடைய மனதை மாற்றி விடுகிறேன்..."

"சக்கரவர்த்தி! அது அவ்வளவு சுலபம் அல்ல. மகான் கண்டராதித்தர் தமது தர்மபத்தினிக்கு அவ்விதம் கட்டளை யிட்டுச் சென்றிருக்கிறார். அவருடைய மரணத் தறுவாயில் நான் அவர் அருகில் இருந்தேன். 'மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டக்கூடாது என்பதற்கு முக்கிய காரணம் இருக்கிறது; அது என் துணைவிக்குத் தெரியும்' என்று தங்கள் பெரிய பாட்டனார் சொன்னார்..."

"முதன் மந்திரி! அப்படிப்பட்ட தடை உண்மையில் இருக்கிறதா? அது இன்னதென்று உங்களுக்குத் தெரியுமா?"

"தெரிந்திருந்தால், தாங்கள் கேட்கும் வரையில் காத்துக் கொண்டிருப்பேனா? பெரிய பிராட்டியை அழைத்து வரச் செய்து தாங்கள்தான் அதைப் பற்றிக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்."

"ஆமாம்; அந்த ஒரு விஷயந்தான் எனக்கும் தொல்லை கொடுத்து வருகிறது. பெரிய பிராட்டியை உடனே அழைத்து வருவதற்கு ஏற்பாடு செய்யுங்கள். எப்பேர்ப்பட்ட தடையா யிருந்தாலும் அதை நான் நிவர்த்தி செய்கிறேன். அவரை அழைத்து வருவதற்கு யாரை அனுப்பலாம்? ஏன்? என் குமாரியையே அனுப்புகிறேன். தேவி! குந்தவையை உடனே இங்கு அழைத்து வா!" என்று சுந்தர சோழர் மலையமான் மகளைப் பார்த்துக் கூறினார்.

சக்கரவர்த்திக்கும் முதன் மந்திரிக்கும் நடந்த சம்பாஷணையை வானமா தேவி ஒரு காதினால் கேட்டுக் கொண்டிருந்தாலும், அவளுடைய கவனமெல்

ளம் சற்று முன் அங்கிருந்து சென்ற ஊமை ராணியின் பேரிலேயே இருந்தது. ஆதலின் சக்கரவர்த்தி குந்தவையை அழைத்து வரும்படி சொன்னதும் மலையமான் மகள் அங்கிருந்து அந்தப்புரத்துக்கு விரைந்து சென்றாள்.

அவள் அந்தப்புரத்தை அடைந்த போது குந்தவை, வானதி, பூங்குழலி ஆகியவர்கள் பெருங் கலக்கத்தில் ஆழ்ந்திருந்தார்கள். அதற்குக் காரணத்தையும் மகாராணி உடனே தெரிந்துகொண்டாள். ஊமை ராணியை அங்கே காணவில்லை. எங்கே என்று கவலையுடன் கேட்டபோது குந்தவை கூறியதாவது:—

“அம்மா! தங்கள் கட்டளையை நிறைவேற்றுவது சுலபமான காரியமாக இல்லை. ஆயினும் நாங்கள் மூன்று பேருமாகச் சேர்ந்து வற்புறுத்தி மந்தாகினி தேவியைக் குளிப்பாட்டினோம். பிறகு புதிய ஆடைகள் அணிவித்தோம். வானதி அவருடைய கூந்தலை வாரி முடிந்து கொண்டிருந்தாள். பூங்குழலி பூத்தொடுத்துக்கொண்டிருந்தாள். ஆபரணங்கள் எடுத்து வருவதற்காக நான் அடுத்த அறைக்குப் போனேன். ஆபரணங்கள் எடுத்துக் கொண்டிருந்த போதே இவளுடைய கூச்சல் கேட்டது. திரும்பி வந்து பார்த்தால் மந்தாகினி தேவியைக் காணவில்லை. கூந்தலை வாரி முடி போட்டவுடனே திடீரென்று அவர் திமிறிக் கொண்டு ஓடிப் போனாராம். அக்கம் பக்கத்து அறைகளில் எங்கேயும் காணவில்லை. இன்னமும் தேடிக் கொண்டிருக்கிறோம்!”

இதைக் கேட்டு மலையமான் மகள் புன்னகைபுரிந்தாள். “அவருக்கு அலங்காரம் செய்தபோது எதிரில் கண்ணாடி இருந்ததா?” என்று கேட்டாள். “இருந்தது; சற்றுத் தூரத்தில் இருந்தது” என்றாள் வானதி. “அவருடைய அலங்கரித்த உருவத்தைத் தற்செயலாகக் கண்ணாடியில் பார்த்திருப்பார். அது அவருக்கு வெட்கத்தை உண்டாக்கியிருக்கும். அதனால் ஓடி எங்கேயாவது மறைந்து கொண்டிருப்பார். இன்னும் நன்றாகத் தேடிப் பாருங்கள். ஒருவேளை அந்தப்புரத்துப் பூங்காவிற்குச் சென்று ஒளிந்து கொண்டிருந்தாலும் இருப்பார். மதில் ஏறிக் குதிப்பது, பலகணி வழியாகக் குதிப்பது போன்ற காரியங்கள்தான் அவருக்கு வழக்கமானவை ஆயிற்றே?” என்றாள் சக்கரவர்த்தினி.


பிறகு எல்லாருமாக நந்தவனத்துக்குச் சென்று தேடினார்கள். அங்கும் ஊமை ராணி அகப்படவில்லை. அவர்களுடைய கவலை அதிகமாயிற்று. முதன் மந்திரியிடமும் சக்கரவர்த்தியிடமும் போய்த் தெரிவிக்கலாமா என்று அவர்கள் எண்ணத் தொடங்கிய போது எங்கிருந்தோ ‘டணார்’ ‘டணார்’ என்று ஒரு சத்தம் வந்தது. கருங்கல்லில் இரும்பு உளியினால் ஓங்கி அடிப்பது போன்ற ஓசை அது. எங்கிருந்து அந்த ஓசை வருகிறது என்று காது கொடுத்துக் கவனமாகக் கேட்டார்கள். சிற்ப மண்டபத்திலிருந்து வருகிறதென்று தெரிந்தது. உடனே ஒரு தாதிப் பெண்ணைத் தீபம் எடுத்துக் கொண்டு வரும்படி சொல்லி விட்டு எல்லாரும் சிற்ப மண்டபத்துக்குச் சென்றார்கள். சிற்ப மண்டபத்துக்குள்ளே அவர்கள் ஒரு விந்தையான காட்சியைக் கண்டார்கள். ஓரளவு ஆடை அலங்காரங்கள் அணிந்து விளங்கிய மந்தாகினி கையில் ஒரு நீண்ட பிடியுள்ள சுத்தியை வைத்துக் கொண்டு கைலாச மலையைத் தாங்கிக் கொண்டிருந்த இராவணேசுவரனுடைய கரங்களை ஓங்கி ஓங்கி அடித்துக் கொண்டிருந்தாள். மிக உறுதியான கல்லினால் செய்யப்பட்ட சிற்பமாதலால் அந்தத் தாக்குதலுக்கு இராவணன் அது வரையில் அசைந்து கொடுக்கவில்லை. ஆனாலும் சீக்கிரத்தில் அவனுக்கு ஆபத்து வந்து விடலாம் என்ற நிலைமை ஏற்பட்டிருந்தது. கைலாச மலையைத் தாங்கிக் கொண்டிருந்த இராவணனுடைய கரங்களில் இரண்டு மூன்று கைகள் ஒடிந்து விட்டால் மலையே இடம் பெயர்ந்து அவன் தலைகளின் மீது இன்னும் நன்றாக உட்கார்ந்து விடக்கூடும்! தலைகள் சுக்குநூறாக நொறுங்கி விடக்கூடும்! அத்தகைய ஆபத்தான நெருக்கடியிலே தான் குந்தவை முதலியவர்கள் சிற்ப மண்டபத்துக்குள் பிரவேசித்தார்கள்.

அவர்களுடைய வரவைப் பார்த்ததும் மந்தாகினி தன்னுடைய கையில் பிடித்திருந்த சுத்தியைக் கீழே போட்டு விட்டு வந்தவர்களைப் பார்த்துப் புன்னகை புரிந்து கொண்டு நின்றாள்.

மண்டபத்துக்குள் பிரவேசித்தவர்களில் பூங்குழலியைத் தவிர மற்றவர்களின் உள்ளங்களில் “இவள் ஒரு பைத்தியக்காரப் பிச்சிதான்! சக்கரவர்த்தி இவளைக் கண்டு அருவருப்பு அடைவதில் வியப்பு ஒன்றுமில்லை!” என்ற எண்ணம் தோன்றியது.

மலையமான் மகள் மற்றவர்களைப் பார்த்து, “பெண்களே! இதைப் பற்றிச் சக்கரவர்த்தியின் முன்னிலையில் யாரும் பிரஸ்தாபிக்க வேண்டாம்!” என்று எச்சரிக்கை செய்தாள். (தொடரும்)

பொத்தானை அழுத்தவேண்டியதே...
நல்ல படங்கள் பிடிக்க சுலபமானவழி இதோ!



முதல்தரப் படங்கள் எடுக்கக்கூடிய ஒரு எளிய காமிராவா உங்களுக்கு வேண்டும்? இச்சிறப்பான 'கோடக்' மாடல்களுள் ஒன்றை தேர்ந்தெடுங்கள். அவற்றின் பெரிய வியூ பைண்டர் மூலம் அநேகமாக பிழைகள் ஏற்பட வழியில்லை. உங்கள் கோடக் வியாபாரியே உங்களுக்கு பிலிமும் போட்டுக்கொடுப்பார் - பின்பு பொத்தானை அழுத்தி, குறிவைத்தால் இருக்கவேண்டியதே— படம் பிடித்தாகிவிட்டது!







உங்கள் ஆல்பத்தை அலங்கரிக்க சிறந்த ஸ்னாப்புகள்—
குடும்பத்தோருமினர், கட்டிடங்கள், கிலப்பரப்புக்காட்சிகள்யாவும் தெள்ளத்தெளிவாக, மிகப்பெரிதாக்க ஏற்றவகையில் படம் பிடிக்கலாம்.

உபயோகிக்க மிக எளிதானது
லென்ஸ் துவாரங்களோ ஷட்டர் வேகங்களோ சரிசெய்யத்தேவையில்லை. உருவத்தை நோக்கி காமிராவைப் பிடித்து ஷட்டர் பொத்தானை அழுத்த வேண்டியதே.

வெளிச்சக்குறைவின் தொந்தரவில்லை
வீட்டினுள் அல்லது இருட்டியபின்பு மலிவான ப்ளாஷ் பல்புகள் மூலம் போதுமான அளவு வெளிச்சம்எங்கும் கிடைக்கும். விளையாடும் குழந்தைகள், தேக்கச்சேரிகள், உத்ஸவங்கள் எதையுமே படம் பிடிக்க இந்த 'கோடக்' காமிராக்களுடன் நீங்கள் எப்பொழுதும் தயார்தான்.

'கோடக்' டுவாப்ளெக்ஸ் காமிரா
'கோடக்' 620 பிலிம் ஒவ்வொரு சுருளிலும் $2\frac{1}{4}$" சதுரத்தில் 12 படங்கள் எடுக்கலாம்--காமிராவில் எதையும் சரிப்படுத்தத்தேவையில்லை. 8 அடி கிட்டத்திலிருந்து வானளாவிய தூரம்வரை எந்த காட்சியையும் ஸ்னாப் எடுத்துவிடலாம்.
விலை ரூ. 59/-

எவர்ரெடி கேஸ் விலை ரூ. 11/-

'பிரோனி' ரிப்ளெக்ஸ் காமிரா
'கோடக்' 127 பிலிம் ஒவ்வொரு சுருளிலும் $1\frac{5}{8}$" சதுரம் பன்னிரண்டு ஆல்பம் சைஸ் ஸ்னாப்புகளை எடுக்கலாம். இன்டிடு அல்லது அதற்கும் அப்பால் நகர்ந்து செல்லுகொண்டு பிரகாசமானது. வியூ பைண்டரில் உருவத்தின் பிம்பத்தை கவனித்து பொத்தானை அழுத்துங்கள் . . எவ்வளவு சுலபம் இல்லையா? விலை ரூ. 45/- கேஸுடன்.

இவ்விலைகளில் விற்பனை வரி சேராது

இன்றே உங்கள் கோடக் வியாபாரியைக் காணுங்கள்

கோடக் லிட. (இங்கிலாந்தில் இணைக்கப்பெற்றது) பம்பாய் - கல்கத்தா - டில்லி - மதராஸ்

K. 7637

பூசனிக்காய் சோற்றில் மறையுமா?

ரஜனி

—கொழும்பு ஜனவரி மீ 16உ

உண்மையைச் சொன்னால் உடம்பெரிச்சல் ஏற்படுவது இயற்கை. சத்தியத்தையும் தர்மத்தையும் கடைப்பிடிப்பவர்களுக்குக் கூடக் கசப்பான உண்மையைக் கேட்க நேரிடும் பொழுது கோபம் வருகிறது. ஆனால் சத்தியத்தைச் சந்தியில் இழுத்து நிறுத்துவதே வேலையாக இருப்பவர்களைப் பற்றிக் கேட்கவேண்டியதே யில்லை.

இலங்கையின் சமீபகால விபரீத நடவடிக்கைகளை இந்திய அரசாங்கம் எடுத்துக் காட்டி, இவையெல்லாம் இந்தியர்களை விரட்டியடிக்கும் கட்டுப்பாடான சதியென்று தீர்ப்புக் கூறியது டில்லியி லிருக்கும் இலங்கை ஹைக் கமிஷனருக்குப் பொறுக்கவில்லை. இலங்கையில் இந்தியத் துவேஷமே இல்லை யென்றும் இந்தியப் பத்திரிகைகள் இலங்கை மீது அபாண்டமாகத் துவேஷக் கூச்சல்களைக் கிளப்புகின்றன வென்றும் ஒரு அறிக்கையை விடுவித்தார். தமிழரான இலங்கை ஹைக் கமிஷனர் ஸ்ரீ குமாரஸ்வாமிக்கு இலங்கையில் நிலவும் கடும் இந்தியத் துவேஷம் தெரியாம லிருப்பதற்கில்லை. ஆயினும், பாவம், அவர் என்ன செய்வார்!

இலங்கை இந்திய காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ எஸ். தொண்டமான மேற்படி அறிக்கைக்குப் பதில் சொல்லும் முறையில் விடுத்திருக்கும் ஒரு அறிக்கையில் இந்தியர்களை இம்சித்து விரட்ட அடுத்தடுத்து இலங்கை அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகளை வரிசைக் கிரமமாகச் சுட்டிக் காட்டி இலங்கையின் விபரீதப் போக்கை மூடி மறைக்க முயற்சிப்பது முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைப்பதைப் போலத்தானிருக்கு மென்கிறார்.

நிற்க. இந்தியர்களுக்கு ரேஷன் அரிசி கொடுக்க மறுக்கப்படுவது இந்தியர் மீது அரசாங்கம் தொடுத்திருக்கும் பிரம்மாஸ்திரமாகப் பல வட்டாரங்களிலும் கருதப்படுகிறது. அடுத்தடுத்து எடுக்கப்பட்டிருக்கும் இந்தியத் துவேஷ நடவடிக்கைகளை யெல்லாம் வயிற்றிலடிக்கும் "ரேஷன் மறுப்பு" நடவடிக்கை மிஞ்சிவிட்ட தென்றாலும் இன்னும் கோரமான பாசுபதாஸ்திரம் ஏதேனும் அரசாங்கத்தினிடமிருக்குமா என்று இந்தியச் சமூகம் கதிகலங்கி நிற்கின்றது. இப்பொழுது பெரும்பாலோருடைய கோபதாபங்கள் இங்குள்ள இந்திய ஹைக் கமிஷன் மீது திரும்பியிருக்கிறது. கண்ணெதிரில் நடக்கும் அக்கிரமங்களை யெல்லாம் ஹைக் கமிஷன் எப்படிப் பார்த்துச் சகித்துக் கொண்டிருக்கிறது! என்று பலரும் கேட்கிறார்கள். உண்மையில் ஹைக் கமிஷன் தன்னால் இயன்றதைச் செய்து ஒன்றும் பயன்படாமற் போயிருக்கலாம். ஹைக் கமிஷன் இதுவரை என்ன செய்துள்ள தென்பதைப் பற்றி பொது ஜனங்களுக்குக் கவலையில்லை. அந்த நடவடிக்கைகள் பூஜ்யமா யிருப்பதைப் பற்றியே இந்தியச் சமூகம் கவலையும் கிலேசமு மடைந்திருக்கிறது.

சிங்களக் கவிகள்

ராஜா எவ்வழியோ பிள்ளைகளும் அவ்வழி யென்பார்கள். அதைப் போல அரசாங்கத்தின் போக்கை யறிந்து சிங்களக் கவிவாணர்கள் தங்களுடைய சொல் நயம், பொருள் நயம், கவிநயம் எல்லாவற்றையும் துவேஷத்தை வளர்க்கும் தெருப் பாட்டுகளை இயற்றி, சந்திக்குச் சந்தி தொண்டை கிழியக் கத்திக் காசாக்குவதில் முனைந்திருக்கிறார்கள். இலங்கையின் தொல்லைகளுக்கெல்லாம் இந்தியப் படையெடுப்புத்தான் காரணமென்றும் இந்தியர் இங்கிருக்கும் வரை இலங்கை முன்னேற முடியாதென்றும் மிக மிகப் படுமோசமான சொற்களைப் பிரயோகித்து இயற்றப்பட்டிருக்கின்றன இப் பாடல்கள். இந்தத் துவேஷக் கூச்சலை அரசாங்கமும் தலையிட்டு நிறுத்துவதாயில்லை. தேர்தல் காலத்தில் மந்திரிகள் கிளப்பிய துவேஷப் பிரசாரங்கள் தான் கவிவாணர்களுக்குக் காசு சம்பாதிக்கும் இந்த குறுக்கு வழியைக் கற்றுக் கொடுத்திருக்க வேண்டும்.

காங்கிரஸ் மகாநாடு

இலங்கை இந்திய காங்கிரசின் 13-வது வருடாந்திர மகாநாட்டை ஏப்ரல் மாதம் 17, 18, 19-ம் தேதிகளில் நாவலப்பிட்டியில் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு இவ்வாரம் வரவேற்புக் கமிட்டி அங்கத்தினர்கள் நாவலப்பிட்டியில் தேர்ந்தெடுக்கப்பட விருக்கிறார்கள். மிகுந்த சோதனையான தருணத்தில் நடைபெறும் அடுத்த காங்கிரஸ் மகாநாடு அதி முக்கியமானதா யிருக்கும்.

வித்தியாசம்



எஸ்.வி.எஸ்

எங்கள் ஊருக்கு இரண்டு வருஷம் கழித்து இப்போதுதான் சென்றேன்.

இந்த இரண்டு வருஷங்களில் எங்கள் ஊரில் எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டிருந்தன. முதலில் கப்பி ரோடாக இருந்த எங்கள் தெரு நல்ல கல் ரோடாக மாறியிருந்தது. சாயந்திரமானால் இருளின் ஆட்சி நடந்து வந்த எங்கள் ஊரில் மின்சார விளக்குகள் ஜகஜ் ஜோதியாகப் பிரகாசித்து வந்தன. இப்படி எத்தனையோ மாறுதல்கள். இவை எல்லாவற்றையும் விட என் கவனத்தைக் கவர்ந்தது கடைத் தெருவில் புதிதாகத் தோன்றியிருந்த 'சேகர் ஷாப்' தான்—முழுவதும் கண்ணாடிச் சாமான் கடை.

புது முகப்புடன் மிகவும் கவர்ச்சிகரமாக விளங்கியது கடை. 'யாரப்பா இது! நம்ம ஊர்க் கடைத் தெருவில் புதிதாகக் கடை வைத்திருப்பது?', என்று எண்ணிக் கல்லாப் பெட்டி பண்டை யார் உட்கார்ந்திருக்கிறார்கள் என்று பார்த்தேன். பழைய மளிகைக் கடை மாணிக்கம் செட்டியாரின் மகன் மணவாளன். எனக்குச் சிறு வயது முதல் அவனுடன் நெருங்கிய பழக்கமுண்டு. ஒன்றாக விளையாடி, ஒன்றாகப் படித்தவர்கள் நாங்கள். ஆகவே, கடைக்குள் நுழைந்து குசலம் விசாரிக்கலாம் என்று போனேன். "என்னப்பா! சௌக்கியமா?'' என்று விசாரித்தேன்.

"அடாடா, வா! வா! ரொம்ப நாள் ஆச்சு. வா, அப்பா! சௌக்கியமாக இருக்கிறாயா? எங்கே இருக்கிறாய்?'' என்று என்னைக் கேட்டான்.

"எல்லாம் சௌக்கியம்தான். தற்சமயம் சென்னையில் சர்க்கார் காரியாலயத்தில் வேலையாக இருக்கிறேன். அது சரி, இது என்ன இப்போது மளிகைக் கடை இல்லையா? கண்ணாடிச் சாமான் கடை வைத்திருக்கிறாய்?'' என்று விசாரித்தேன்.

"மளிகைக் கடை, ஊரிலே ஒன்றுக்குப் பதில் பத்தாகப் போய் விட்டது. அதனால்தான் லாபமும் குறைஞ்சு போச்சு! மேலும் மாசம் ஒரு தரம் சாமான் வாங்கினால், அடுத்தாற்போல் அடுத்த மாசம் தான் சாமான் வாங்க வருகிறார்கள். நடுவில் சாமான் தட்டு ஏற்பட்டாலும் கூடிய வரையில் கடைக்கு வந்து சாமான் வாங்காமல் சமாளிக்க முயல்கிறார்கள். அதுவே கண்ணாடி சாமானாக இருந்தால், அடிக்கடி உடைய ஏது வுண்டு. உடைந்தால் உடனே வாங்க வேண்டிய நிர்ப்பந்தமும் உண்டு. ஹரிகேன் விளக்கின் சிம்னி உடைந்து போய் விட்டால், உன்னால் வாங்காமல் சமாளிக்க முடியாது அல்லவா? மேலும் கண்ணாடி வியாபாரத்தில் இன்னும் எத்தனையோ ரகசியங்கள் உண்டு. நம்ம ஊரில் செய்த கண்ணாடி சாமானை வைத்துக் கொண்டு ஜெர்மனியிலிருந்து வந்தது என்று சொல்லி விட்டால், ஜனங்கள் நாம் என்ன விலையைக் கேட்டாலும் கொடுக்கத் தயாராய் இருப்பார்கள். நம்ம ஊரில் விளையும் புளியை அமெரிக்காவிலிருந்து வந்தது என்று சொன்னால் யாராகிலும் நம்புவார்களா?......''

இப்படிச் சொல்லிக் கொண்டே வந்தான். அவன் கூறியவை யெல்லாம் என்னை ஒரே அடியாய் ஆச்சரியக் கடலில் மூழ்க வைத்தன.

இந்தச் சமயத்தில் "ஜோடு ரிப்பேர்'' என்று தெருவோடு கத்திக் கொண்டு போனான். அவன் கோலம் பரிதாபமாக இருந்தது. வயிறு ஒட்டியிருந்தது. முகத்தில் இரண்டங்குலத்துக்குத் தாடி வளர்ந்திருந்தது. இடுப்பில் அழுக்குத் துணி. ஆனால் அவன் கண்களில் மட்டும் நம்பிக்கை ஒளி வீசியது.

அவன் குரல் கேட்டதும் என் நண்பன் மணவாளனுக்குத் தன் கால் செருப்பில் வார் ஒன்று அறுந்து போயிருப்பது ஞாபகம் வந்தது. உடனே அவனைக் கூப்பிட்டான்.

"இந்தாப்பா இந்த 'வாரை'த் தைத்துக் கொடு'' என்று சொல்லி அவன் தன் செருப்பை விட்டெறிந்தான்.

ஜோடு ரிப்பேர் செய்பவன் தெருவோரமாக உட்கார்ந்து பத்து நிமிஷத்தில் தைத்துக் கொடுத்தான்.

நண்பன் செருப்பைக் காலில் போட்டுப் பார்த்தான். முகத்தில் திருப்திக் குறி தட்டுப் பட்டது. தன் கல்லாப் பெட்டியைத் திறந்து அரையணா எடுத்து அவன் முன் எறிந்தான்.

அந்தக் காசைக் கையில் எடுத்துக் கொண்ட அவன், "சாமி, சாமி! ஓரணு கொடுங்க. வார் தைப்பதற்கு எங்கேயும் ஓரணுக் கூலி தான் ஏற்பட்டதுங்க" என்றான்.

"என்ன ஓரணு கேட்கிறாய்? நீ போட்டிருக்கிற தையல் நாளைக்கே பிய்த்துக் கொண்டு வந்துவிடப் போகிறது. இதற்கு ஓரணு தர வேண்டுமா...?" என்றான்.

"செருப்பு தேய்ந்தாலும் தேயுமே ஒழிய என் தையல் விடாது சாமி, மாசம் ஒன்றானாலும்......" என்றான் அவன்.

"விட்டால்......" என்றான் என் நண்பன்.

"நான் தோழிலாளி இல்லே, சாமி!" என்று பெருமிதமாகக் கூறிக் கொண்டான்.

இதற்குள் கடைக்குள் யாரோ சாமான் வாங்க வரவே, "சரி, சரி உன்னோடு பேசிக் கொண்டிக்க நேரமில்லே. இந்தா, இந்தக் காசை எடுத்துக் கொண்டு போ" என்று இன்னொரு அரையணாவை விட்டெறிந்து விட்டு, வந்தவர்களிடம் "என்ன ஸார்? என்ன வேணும் உங்களுக்கு?" என்று கேட்டான்.

வந்தவர், "ஒரு கிளாஸ் டம்ளர் வேண்டும், ஸார்!" என்றார்.

மணவாளன் ஒரு கிளாஸ் டம்ளர் எடுத்துக் கொடுத்தான்.

"நன்றாகக் கெட்டியாக இருக்குமோ!" என்றார் அவர்.

"பேஷாக இருக்கும், ஸார்!"

"ஒரு மாசமாகிலும்......"

"ஒரு மாசம் என்ன ஸார்! ஒரு வருஷம் கூட இருக்கும், ஸார்!" என்றான் என் நண்பன் மணவாளன்.

பிறகு அவர் ஏதோ விலை பேசி வாங்கிக் கொண்டு போனார். நானும் என் நண்பனிடம் விடை பெற்றுக் கொண்டேன்.

* * *

பத்து நாள் கழித்து மறுபடியும் அவன் கடைக்குச் சற்று நேரம் பேசிக் கொண்டிருப்போம் என்று போனேன்.

அன்று கண்ணாடி டம்ளர் வாங்கிச் சென்ற அதே நபர் மறுபடியும் வந்தார்.

"ஸார், பத்து நாளைக்கு முன்பு ஒரு கிளாஸ் டம்ளர் வாங்கிப் போனேனே, அது கை தவறி விழுந்து உடைந்து விட்டது. அதே மாதிரி இன்னொன்று கொடுங்கள்" என்றார்.

"தருகிறேன், ஸார்!" என்று சொல்லி இன்னொரு டம்ளர் எடுத்துக் கொடுத்தார்.

அதை ஏதோ தட்டிப் பார்த்தார். பிறகு எடுத்து வைத்துக்கொண்டார். தம் சட்டைப் பையிலிருந்து மணிபர்ஸை எடுத்து ஒரு ரூபாய் கொடுத்தார்.

"ஒரு ரூபாய் இரண்டணு, ஸார்!" என்றான் மணவாளன்.

"ஒரு ரூபாய்தானே, ஸார், போன தடவை கொடுத்து வாங்கிக்கொண்டு போனேன்."


"ஆமாம் ஸார். இப்போ விலை ஏறிப் போச்சு" என்றான்.

"அது எப்படி ஸார்?"

"இந்தத் தடவை எதிர் பார்த்த கப்பல் வரவில்லை. சாமான்கள் விலை யெல்லாம் ஏறிப் போச்சு......" என்றான் மணவாளன்.

"என்னமோ, நீங்கள் சொல்வதைத்தான் நம்ப வேண்டியிருக்கிறது. சரி, இந்தாருங்கள் இரண்டணு!" என்று சொல்லிக் கொடுத்து விட்டு. அவர் டம்ளரை எடுத்துக் கொண்டு போனார்.

"என்னப்பா, மணவாளன்! இந்த டம்ளர் எல்லாம் சென்னையில் அல்லவா செய்கிறார்கள். இதற்குப் போய், 'கப்பல் வரவில்லை' என்று ஒரு கதை கட்டி விட்



டாயே! போதாதற்கு இந்த டம்ளர் எல்லாம் பட்டணத்தில் ரூபாய்க்கு மூன்று என்று சேருகிறது. நீ ரூபாய்க்கு ஒன்று கூடத் தர மறுக்கிறாயே......" என்றேன்.

"இதுதானப்பா, வியாபாரம்!" என்றான்.

அந்தச் சமயம், "ஜோடு ரிப்பேர், ஜோடு ரிப்பேர்" என்று பழைய குரல் வந்தது. அவன், "சாமி, ஏதாகிலும் ரிப்பேர் வேலையிருக்கிறதா?" என்றான்.

மணவாளன் "ஒன்றும் இல்லையப்பா" என்றான், தன் செருப்பில் அவன் முன்பு போட்ட தையல் சரியாக இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டே!

"ஐயா செருப்பில் நீ போட்ட தையல் இன்னும் விடவில்லையப்பா! நீதான் தொழிலாளி என்று முன்னமே சொல்லியிருக்கிறாயே!" என்று சொல்லிக் கொண்டே அவன் கடையை விட்டு வெளியேறினேன்.



அதிர்ஷ்டக் குழந்தை

விஜயம்

1. அரசன் பிறந்தான்

ஏழைக் குடியானவன் கந்தன் வீட்டில் அன்று ஒரே குதூகலமாயிருந்தது. காரணம் அவனுக்கு ஆண் குழந்தை பிறந்திருந்ததுதான். அதுவும் அந்த ஆண் குழந்தை மற்றக் குடியானவக் குழந்தைகளைப் போல் இல்லாமல், மிகவும் அழகாயிருந்தது. குழந்தையைப் பார்ப்பதற்குக் கிராமத்து ஜனங்கள் சதா அவன் வீட்டுக்கு வந்த வண்ணம் இருந்தனர்.

குழந்தைக்கு ஒரு வயது ஆயிற்று. அவன் ஆண்டு நிறைவைக் கிராமத்து ஜனங்களெல்லாம் ஒன்று சேர்ந்து திருவிழா மாதிரி கொண்டாடினார்கள்.

ஆண்டு நிறைவு அன்றைக்குக் கந்தன் வீட்டுக்கு ஒரு பெரியவர் வந்தார். அவரது தூய தும்பைப் பூவைப் போன்ற வெள்ளைத் தாடி எல்லோரையும் அவரிடம் மதிப்பும் மரியாதையும் கொள்ளும்படி செய்தது; அவர் அணிந்திருந்த விபூதியும் உருத்திராட்ச மாலையும் பார்ப்பவர்களைப் பரவசப் படுத்தியது. கந்தன் அந்தப் பெரியவரை மரியாதையுடன் வரவேற்று, மனையில் உட்காரச் சொல்லி வணங்கினான். பெரியவர் அவனை வாழ்த்திக் குழந்தைக்கும் வாழ்த்துக் கூறினார்.

குழந்தை அவரைப் பார்த்துச் சிரித்தான். எப்பொழுதும் புன்னகையுடன் விளங்கும் அவன் முகம் அப்பொழுது அதிக மலர்ச்சியுடன் விளங்கியது. குழந்தை சிரிக்கும் போது அவன் கன்னத்தில் விழுந்த குழி பார்ப்பதற்கு மிகவும் அழகாயிருந்தது.

பெரியவர் குழந்தையின் குழிந்த கன்னங்களைப் பார்த்து மிகவும் சந்தோஷப் பட்டார்.

"கந்தா, நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி. உன்னைவிட அதிர்ஷ்டசாலி இந்தக் குழந்தை. இந்தக் தேசத்து ராஜாவையே நீ உன் மகனாகப் பெற்று விட்டாய்! இந்தப் பயல் பெரியவனானதும் இந்தத் தேசத்து அரசனாவான். இவன் மணந்து கொள்ளப் போகும் ராஜகுமாரி, இந்தத் தேசத்து அரசனின் மூத்த ராணிக்குப் பிறக்கப் போகிறாள். இன்னும் பல வருஷங்களுக்குப் பிறகு நடக்கப் போகும் சம்பவங்களைப் பற்றிச் சொன்னால் உங்களுக்கெல்லாம் அதிசயமாகத்தான் இருக்கும். என் பேச்சை நம்பக்கூட மாட்டார்கள். ஆனால் நான் சொல்லுவதில் ஒரு வார்த்தை கூடப் பிசகாது. குழந்தையின் முகத்தில் இருக்கும் ராஜ களையைப் பார்த்துச் சொல்லுகிறேன். இவன் அரண்மனையில் ராஜபோகங்களுடன் வாழ வேண்டியவன். இவனை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள். இவனுக்குத் தேவசேனாபதி என்று பெயர் வை!" என்று கூறிவிட்டுப் பெரியவர் போய் விட்டார்.

இதைக் கேட்டதும் கந்தனும் அவன் மனைவியும் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்

லேயே இல்லை. குழந்தையை வாரி அணைத்து முத்தம் இட்டனர். கிராமத்து ஜனங்களெல்லோரும் சொல்லி முடியாத ஆனந்தத்தில் ஆழ்ந்தனர். தங்கள் கிராமத்தில் பிறந்த குழந்தை அரசனாகப் போகிறான் என்பதில் அவர்கள் அடைந்த ஆனந்தம் அவர்களை ஒரேயடியாக வெறி கொள்ளச் செய்தது! குழந்தையின் ஆண்டு நிறைவைச் சிறப்பாய்க் கொண்டாடுவதற்காக ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்தனர்.

காட்டில் வேட்டையாடி விட்டு அலுப்போடு திரும்பிய அந்தத் தேசத்து அரசன் வீரவர்மன் அந்தக் கிராமத்து ஆற்றங்கரையில் தங்கிச் சிறிது நேரம் இளைப்பாறினான்.

பாட்டும் கூத்தும் குதூகலமுமாக இருந்த அந்தக் கிராமத்து ஜனங்களைப் பார்த்ததும் அரசன் வீரவர்மனுக்கு அதிசயமாயிருந்தது.

"மந்திரி, இன்றைக்கு இந்தக் கிராமத்தில் என்ன விசேஷம்? தேர், திருவிழா மாதிரி ஜனங்களெல்லோரும் ஒரே குதூகலமாயிருக்கிறார்களே! கூட்டம் கூட்டமாக எங்கேயோ போகிறார்களே! என்ன விசேஷம் என்று விசாரியுங்கள் பார்க்கலாம்" என்று கூறி மந்திரியை அனுப்பி வைத்தான்.

மந்திரி அரண்மனைச் சேவகன் ஒருவனை அனுப்பிக் கிராம அதிகாரியை அழைத்து வரச் சொன்னான்.

அரண்மனைச் சேவகனைக் கண்டதும் கிராம அதிகாரி மிகவும் பயபக்தியுடன் சந்தனம், பழம், பாக்கு வெற்றிலை முதலிய வைகளை யெல்லாம் எடுத்துக் கொண்டு, கிராமத்து முக்கிய ஜனங்களுடன் அரசனைப் பார்க்கப் புறப்பட்டான்.

அரண்மனைச் சேவகன், அரசன் தங்கியிருந்த கூடாரத்துக்கு முன்னதாக வந்து மந்திரியிடம் கிராம அதிகாரியை அறிமுகம் செய்து வைத்தான்.

மந்திரி கிராம அதிகாரியை அரசனிடம் அழைத்துச் சென்றான். கிராம அதிகாரி அரசனை வணங்கினான். அரசன் அவனை வரவேற்று ஆசனத்தில் அமரச் சொன்னான்.

"நீர் இக் கிராமத்துக்கு அதிகாரியா?"

"ஆமாம், அரசே!"

"இன்று இந்த ஊரில் என்ன விசேஷம்? ஒரே குதூகலமும் கொண்டாட்டமுமாயிருக்கிறதே!" என்று கேட்டான் அரசன்.

"மகாராஜா, இந்த ஊரில் கந்தன் என்று ஒரு குடியானவன் இருக்கிறான். அவனுக்கு வெகு நாட்களாகக் குழந்தையே இல்லாமலிருந்து போன வருஷம் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு இன்று ஆண்டு நிறைவு. இன்று காலை ஒரு பெரியவர் வந்தார். அவர் குழந்தையைப் பார்த்து, 'இந்தக் குழந்தை மிகவும் ராஜபோகத்தில் வாழ்வான். தக்க வயதை அடைந்ததும் இந்தத் தேசத்து ராஜகுமாரியைக் கல்யாணம் செய்து கொண்டு இந்தத் தேசத்துக்கு அரசனாவான். இவனுக்கு ராணியாகப் போகிறவள் அரசனின் மூத்த ராணிக்குப் பிறக்கப் போகிறாள்!' என்று சொன்னார். அதைக் கேட்ட கிராமத்து ஜனங்களுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. கொண்டாட்டத்துக்குக் காரணம் இது தான்!" என்று கிராம அதிகாரி கூறினான்.

உடனே அரசன், "மந்திரி, நம் குதிரையைக் கொண்டுவரச் சொல்லுங்கள். அந்த அதிர்ஷ்டக் குழந்தையைப் போய்ப் பார்த்துவிட்டு வரலாம்!" என்றான்.

அடுத்த நிமிஷம் அரசனுடைய உயர்ந்த அராபி தேசத்துக் குதிரை கம்பீரமாகக் கூடாரத்து வாசலில் வந்து நின்றது. கூடவே மந்திரியின் குதிரையும் வந்தது.

அரசனும் மந்திரியும், தங்கள் பரிவாரங்கள் புடை சூழ ஏழைக் குடியானவன் கந்தன் வீட்டுக்குப் புறப்பட்டார்கள்.

குடியானவன் வீட்டு வாசலில் அரசனும் மந்திரியும் குதிரையில் வந்து இறங்குவதைப் பார்த்துக் கிராமத்து ஜனங்கள் அதிசயப் பட்டுப் போனார்கள். கந்தனும் அவன் மனைவியும் வீட்டு வாசலில் வந்து அரசனை வணங்கினார்கள்.

அரசன் குடிசைக்குள் புகுந்து குழந்தையைப் பார்த்தான். எளிய குடிசையில் மண் தரையில் கந்தல் துணியில் விடப்பட்டிருந்த அந்தக் குழந்தையைப் பார்த்து அரசன் ஆச்சரியம் அடைந்தான். சிரிக்கும் போது குழந்தையின் கன்னத்தில் விழுந்த குழியைப் பார்த்து அரசன் சிறிது நேரம் தன்னை மறந்து விட்டான்.

ஆனால் இந்தச் சந்தோஷம் அவன் மனதில் கொஞ்ச நேரம்தான் இடம் பெற்றிருக்



சித்திரக் கண்காட்சி!



தமிழ் நாட்டின் ஆரம்பப் பள்ளியிலிருந்து கல்லூரி வரை படிக்கும் தமிழ் மாணவர்களின் பேச்சு ஆர்வம், சித்திரம் எழுதும் ஆர்வம், நாடகம் நடிக்கும் ஆர்வம், இசை பாடும் ஆர்வம் — முதலிய பலதிறப்பட்ட ஆர்வங்களை ஊக்கி, பரிசுகள் வழங்கி, விழாக் கொண்டாடிச் சென்ற இருபத்தொரு ஆண்டுகளாக அருந்தொண்டு செய்து வருகிறார்கள் சென்னை மாணவர் மன்றத்தினர்.

அந்த மன்றத்தின் இருபத்தோராவது ஆண்டு விழா 13-1-53 அன்று கோகலே மண்டபத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழா அன்று காலை சென்னை நகர மேயர் திரு டி. செங்கல்வராயன் மாணவர்களின் சித்திரக் கலைக் கண்காட்சியைத் திறந்து வைத்தார்.

அந்தக் காட்சியில், பல மாணவர்கள் வரைந்த நமது மதிப்புக்குரிய தலைவர்களான நேருஜி, ராஜாஜி, ராஜன் பாபு முதலியவர்களுடைய உயிர் ஓவியங்கள் இருந்தன. இன்னொரு பக்கத்தில் இயற்கைக் காட்சிகள் இருந்தன. மொத்தத்தில் மாணவர்கள் சித்திரக் கலையில் எவ்வளவு ஆர்வம் கொண்டுள்ளனர் என்பதை எடுத்துக் காட்டுவதாக அமைந்திருந்தது கண் காட்சி.

ந்தது. சிறிது நேரத்துக் கெல்லாம் அவனுக்குக் குழந்தையிடம் கோபமும் வெறுப்பும் தோன்றிவிட்டன. தன் ராஜ்யத்தை அபகரிக்க வந்த சத்துருவாகக் குழந்தையைக் கருதினான்.

"என்ன, மகாராஜா! குழந்தையைப் பார்த்ததும் யோசனையில் ஆழ்ந்து விட்டீர்களே!" என்றான் குடியானவன் கந்தன்.

உடனே அரசன் சமாளித்துக் கொண்டு, வெளியில் தன் கோபத்தையும் வெறுப்பையும் காட்டிக் கொள்ளாமல், முகத்தில் சந்தோஷத்தை வரவழைத்துக் கொண்டு, "குழந்தை ரொம்ப நன்றாக இருக்கிறது. தேவசேனாபதி என்பது பொருத்தமான பெயர். அரண்மனையில் அரசபோகத்தில் வாழவேண்டிய குழந்தையை இந்தச் சின்னக்கிராமத்தில் வைத்துக்கொண்டிருந்தால் என்ன பிரயோஜனம்? பெரியவர் சொன்னபடி பிற்காலத்தில் அவன் அரசனாக வேண்டுமானால், நாம் அந்தச் சூழ்நிலையிலேயே அவனை வளர்க்க வேண்டும். [illegible] ஒரு குடியானவனுடைய மகன் அரசனாவது முடிகிற காரியமா? ஆகையினால் இந்தக் குழந்தையை என்னிடம் ஒப்புவித்து விடு. கந்தா, உனக்கு ஆயிரம் பவுன் பரிசாக அளிக்கிறேன்!" என்று சொன்னான்.

அருமையாகப் பெற்ற குழந்தையைவிட்டுப் பிரியக் கந்தனும் அவன் மனைவியும் இலேசில் சம்மதிக்கவில்லை. அரசனுடைய விருப்பத்துக்கு விரோதமாக நடக்கவும் அவர்களால் முடியவில்லை.

அப்பொழுது குதிரை வீரர்கள் இருவர் இரண்டு அழகிய பட்டுப் பைகளில் ஆயிரம் பவுன்களை எடுத்துக் கொண்டு வந்து கந்தனிடம் கொடுத்தார்கள். கந்தனும் அவன் மனைவியும் ஆச்சரியத்தினால் அயர்ந்து போனார்கள். (தொடரும்)

எகிப்து நாட்டின் புரட்சித் தலைவர்

ஜெயமணி

படிப்பு விஷயமாகத் தந்தைக்கும் மகனுக்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டது. ஒன்று சட்டப் பரீட்சைக்கு வாசிக்க வேண்டும்; இல்லாவிடில் உபாத்தியாயர் வேலைக்காவது படிக்க வேண்டும் என்று வற்புறுத்தினார் தந்தை. அந்த இரு துறைகளில் ஒன்றிலாவது மகனின் கவனம் செல்லவில்லை.

புலி தன் குட்டியைப் பார்த்து, "புலியாக இருந்து எனக்குச் சலித்துப் போய் விட்டது. இனி நீயாவது புலியாகி விடாமல் பூனையாகத்தான் இருக்க வேண்டும்" என்று சொல்வதுபோல் இருந்தது மகனுக்கு!

இரவில் எல்லோரும் தூங்கிக் கொண்டிருக்கையில், மகன் ஒருவருக்கும் தெரியாமல் வீட்டை விட்டுப் புறப்பட்டான். பல நாட்கள் வரையில் கால் நடையாகச் சென்றான். இறுதியில் தன் ஊரிலிருந்து ஆயிரம் மைல் தூரத்துக்கு அப்பால் உள்ள நகரில் இருக்கும் இராணுவக் கல்லூரிக்குப் போய்ச் சேர்ந்தான்.

அந்தக் கல்லூரியில் சேருவோர் குறைந்த பட்சம் ஐந்து அடி ஏழு அங்குல உயரமாவது இருக்கவேண்டும். ஆனால் மேற்படி மாணவன் ஐந்து அடி ஆறு அங்குல உயரம்தான் இருந்தான். எனவே அவனை இராணுவக் கல்லூரியில் சேர்த்துக் கொள்ள அதிகாரிகள் மறுத்து விட்டனர்.

அவனுக்குத் தன் வாழ்க்கையின் இலட்சியமே சிதைந்து விட்டதுபோல் தோன்றியது. இருந்தாலும் அவன் சோர்ந்துபோய் முயற்சியைக் கைவிடவில்லை. வீட்டுக்குத் திரும்பி வந்து, தன் உயரத்தை அதிகப்படுத்திக் கொள்வதற்காகத் தேகப் பயிற்சி செய்யத் தொடங்கினான். இராணுவக் கல்லூரியில் தனக்கு எப்படியாவது இடம் கிடைக்க வேண்டும் என்று தினசரி ஆண்டவனையும் தொழுது வந்தான்.

ஒரு வருஷம் கழித்துப் பார்த்தபோது அவனது உயரம் ஐந்து அடி ஆறரை அங்குலம் இருந்தது. ஒரு வருஷப் பிரயாசையின் பலனாக அவன் அரை அங்குலம்தான் உயர்ந்திருந்தான்.

மறுபடியும் அவன் ஆயிரம் மைல பிரயாணம் செய்து இராணுவக் கல்லூரிக்குச் சென்றபோது, அவனது விடா முயற்சியைக் கண்டு கல்லூரி அதிகாரிகள் அதிசயித்தனர். உயரத்தைப் பற்றிய விதியிலிருந்து அவனுக்கு மாத்திரம் விலக்கு அளித்தனர். கல்லூரி அதிகாரிகள் அவ்விதம் விலக்கு அளித்தது மிகவும் புத்திசாலித்தனமான காரியம் என்பதை மேற்படி மாணவன் நிரூபித்து விட்டான். இராணுவ தந்திரம், ஒழுங்கு, இராணுவச் சட்டம், சரித்திரம் முதலிய பாடங்கள் அடங்கிய இரண்டரை வருஷப் படிப்பை ஒன்பதே மாதங்களில் முடித்து அவன் பட்டம் பெற்று விட்டான்! அதன் பலனாக அவன் தன்னுடைய பத்தொன்பதாவது வயதிலேயே இராணுவ அதிகாரி பதவிக்கு வந்து விட்டான்!

சென்ற சில மாதங்களுக்குள் அகில உலகிலும் புகழ் பெற்று விளங்கும் எகிப்து நாட்டின் புரட்சித் தலைவரும் பிரதம மந்திரியுமான ஜெனரல் முகமது நாஜிபின் பால்ய வாழ்க்கை வரலாறு இதுதான்.

ஜெனரல் நாஜிபின் முன்னோர்கள் பரம்பரையாகச் சிப்பாய்களாக இருந்தவர்கள் என்றே தெரிகிறது. அவரது பாட்டனார் போர்க்களத்தில் மாண்டார். நாஜிபின் தந்தை காப்டன் யூசப் நாஜிப் 1896-ம் ஆண்டு சூடானில் நடந்த யுத்தத்தில் பிரபல தளபதி லார்டு கிச்னரின் தலைமையில் போராடியவர். அப்போதுதான் சூடான் பிரிட்டிஷாரின் வசமாயிற்று. அந்தப் போரில்தான் தற்போது பிரிட்டிஷ் பிரதம மந்திரியாக இருக்கும் வின்ஸ்டன் சர்ச்சில் பிரிட்டிஷ் பத்திரிகை ஒன்றின் யுத்த நிருபராக வேலை பார்த்து வந்தார்.

* * *

ஜெனரல் நாஜிபின் திறமையும், தைரியமும் ஒருபுறமிருக்க, அதிர்ஷ்டமும் அவர் பக்கம் இருந்தது என்பதற்கு அவரது வாழ்க்கையில் பல சம்பவங்கள் நிகழ்ந்தது உண்டு.



ஜெனரல் முகமது நாஜிப்

பாலஸ்தீனம் யாரைச் சேர்ந்தது என்பதை நிர்ணயிப்பதற்காக அராபியர்களுக்கும் யூதர்களுக்கும் நாலு ஆண்டுகளுக்கு முன் யுத்தம் நடந்தது அல்லவா? அந்த யுத்தத்தில் யூதர்கள் வெற்றிபெற்ற போது போர்க்களத்தில் பின் வாங்கிய அராபியர்களைத் தவிர மற்றவர்கள் யாவரும் மடிந்தனர். ஜெனரல் நாஜிப் மாத்திரம் இரண்டு, மூன்று இடங்களில் குண்டு பட்டு குற்றுயிரும் குலையுயிருமாகக் கிடந்தார். அப்போது முகமது நாஜிபின் இளைய சகோதரரான டாக்டர் நாஜிப் அவரைத் தூக்கிக்கொண்டு வந்து காப்பாற்றினாராம்.

படைகளின் பிரிவுத் தலைவர்கள் பின்புறம் இருந்து கொண்டே தங்கள் படைகளை நடத்துவது வழக்கம். ஆனால் ஜெனரல் நாஜீப் தமது உயிரைத் துச்சமாகக் கருதி சிப்பாய்களுடன் சேர்ந்து தாமும் ஒரு சாதாரண சிப்பாயைப் போலவே போர் செய்வார். அதனால்தான் அவர் எகிப்து இராணுவத்தின் மதிப்புக்குப்பாத்திரமாகி இருக்கிறார்.

தாம் மயிரிழையில் உயிர் தப்பிய பாலஸ்தீனப் போர்முனையை ஜெனரல் நாஜீப் மறப்பதே இல்லை. எகிப்தில் உள்ள சில முதலாளிகள் உருப்படாத ஆயுதங்களை இராணுவத்தினிடம் விற்றுவிட்டு லட்சம் லட்சமாகக் கொள்ளையடித்து விட்டார்கள்; அதனால்தான் எகிப்தியப் படைகள் இஸ்ரேலியர்களிடம் தோல்வியுற்றன என்று எகிப்து தேசபக்தர்கள் கூறுகின்றனர்.

மேற்படி போரில் எகிப்து அடைந்த தோல்வியிலிருந்துதான் ஜெனரல் நாஜீபின் மனக்கொதிப்பு அதிகமாயிற்று. மேலே குறிப்பிட்ட ஆயுதக் கொள்ளைக்குப் பரூக் மன்னரும் உடந்தையாக இருந்தார் என்பது நாஜீப் உள்பட எகிப்து தேசபக்தர்களின் அபிப்பிராயம். எகிப்து நாட்டின் புரட்சிக்கு அதுதான் முக்கிய காரணம்.

* * *

சென்ற வருஷம் ஜூலை மாதம் 23-ந் தேதி யன்று இரவு நடுநிசிக்கு எகிப்து தேசம் முழுதும் அமைதியாகத் துயிலில் ஆழ்ந்திருந்தது. சுகபோக வாழ்க்கைக்கான சகல அம்சங்களும் நிறைந்த மாளிகையில் பரூக் மன்னர் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தார். ஆனால் இரவு ஒரு மணிக்கு, ஜெனரல் நாஜீப் வகுத்திருந்த இரகசியத் திட்டம் வெகு துரிதமாக அமுலுக்கு வரத் தொடங்கியது.

அவரது ஆட்கள் பரூக் மன்னரின் மாளிகையைச் சூழ்ந்து கொண்டார்கள். எகிப்தின் தலைநகரான கெய்ரோவுக்குச் செல்லும் பாதைகளையும் நாஜீபின் சிப்பாய்கள் ஆக்கிரமித்துக் கொண்டனர். ஏழைகளைச் சுரண்டி வந்த எகிப்து முதலாளிகளுக்கும் மன்னருக்கும் உடந்தையாக இருந்த இராணுவ அதிகாரிகள் யாவரும் இரவுக்கு இரவே அவரவருடைய வீடுகளில் கைது செய்யப்பட்டனர்.

மறுநாள் காலையில் பரூக் மன்னர் விழித்துக்கொண்டு பார்த்தபோது, தாம் தம்முடைய மாளிகைக்குள்ளேயே கைதியாகி யிருப்பதையும், எகிப்தின் நிர்வாக அதிகாரம் புரட்சிக்காரர்களின் கைக்கு மாறி விட்டதையும் கண்டார். இவ்வாறாக, ஜெனரல் நாஜீப் ஒரு துளி இரத்தமும் சிந்தாமல் எகிப்தில் முடியாட்சியைக் கவிழ்த்து விட்டார்!

"நான் எகிப்தின் சர்வாதிகாரியாக இருக்க விரும்பவில்லை. எந்த நிமிஷத்திலும் பிரதம மந்திரி பதவியிலிருந்து விலகுவதற்குத் தயாராக இருந்து வருகிறேன். எனினும் புரட்சியில் வெற்றி பெற்றதைப் போல், எகிப்தில் ஏழைகளை வாட்டும் பஞ்சத்தையும் அதிகார வர்க்கத்தினரை ஆட்கொண்டிருக்கும் லஞ்சத்தையும் அடியோடு ஒழித்து, எகிப்திய அரசாங்க நிர்வாகத்தைச் சீர்திருத்தும் வரையில் பதவியிலிருந்து விலகும் உத்தேசம் எனக்குச் சிறிதும் இல்லை."

இவ்வாறு ஜெனரல் நாஜீப் தமது கொள்கையையும் இலட்சியத்தையும் இரத்தினச் சுருக்கமாக வெளியிட்டிருக்கிறார்.

* * *

நாம் எகிப்தின் சர்வாதிகாரியாக இருக்க விரும்ப வில்லை என்று ஜெனரல் நாஜீப் கூறினாலும், இன்று அவர் கையில்தான் எகிப்து சர்க்காரின் சர்வ அதிகாரமும் இருந்து வருகிறது. அவரது கட்டளைக்கு இணங்க சென்ற வாரம் எகிப்தில் உள்ள சகல அரசியல் கட்சிகளும் கலைக்கப் பட்டு விட்டன. அக்கட்சிகளின் நிதிகளையும் நாஜீப் சர்க்கார் பறிமுதல் செய்து விட்டார்கள்.

சில மாதங்களுக்கு முன் எகிப்தில் புரட்சி வெற்றி அடைந்ததும் ஜெனரல் நாஜீப் கூறிய வார்த்தைகள் ஞாபகம் இருக்கலாம்.

"புரட்சியை வெற்றிகரமாக நடத்தி பரூக் மன்னரை நாட்டிலிருந்து விரட்டியதுடன் என் கடமை முடிந்து விட்டது. எகிப்து அரசியலில் தலையிடும் உத்தேசம் எனக்கு இல்லை" என்று நாஜீப் கூறினார்.

ஆனால் அவ்விதம் கூறிய சில நாட்களுக்குள் அவர் அரசியலில் குதித்துப் பிரதம மந்திரி பதவியை ஏற்றுக் கொண்டு விட்டார்.

இப்போது தாம் சர்வாதிகாரியாக இருக்க விரும்ப வில்லை என்று ஜெனரல் நாஜீப் உறுதி கூறுகிறார். ஆனால் இந்த வாக்குறுதியையாவது அவர் நிறைவேற்றி, எகிப்தியப் பிரச்னைகளைச் சுமுகமாகவும் சமயோசிதமாகவும் சமாளிக்க முடியுமா என்பது இனிமேல்தான் தெரிய வேண்டும்.

மூன்று கோத்ரெஜ் பரிசுகள்

சுதேசி இயக்கத்துக்கு வெகு காலமாகத் தொண்டு செய்து வருகிறவர்களும், முக்கியமாக சுதேசி சோப்பு உற்பத்தித் தொழிலுக்கு வழிகாட்டியாக இருந்து புகழ் பெற்றவர்களுமான கோத்ரெஜ் கம்பெனியார் மூன்று புதிய பொருள்களைச் சமீபத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். இவை ஸிந்தால் மருந்து சோப்பு, ஆரோக்ய க்ஷவர சோப்பு, ஆரோக்ய கேசத் தைலம் ஆகியவை. அமெரிக்காவில் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கும் ஜி-11 என்னும் மருந்துப் பொருள் இவற்றில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் தேக ஆரோக்கியத்துக்கு மிக்க உகந்தவை. அத்துடன் இனிய மணம் பொருந்தியும் விளங்குகின்றன.

இந்த மூன்று பொருள்களை நேயர்கள் பரீட்சார்த்தமாக உபயோகித்துப் பார்த்தால் நிச்சயமாகத் திருப்தியடைவார்கள் என்று நம்பிக்கையுடன் அவற்றைச் சிபார்சு செய்கிறோம்.

தமிழ்க் களஞ்சியம்

டி.கே.சி

20. வளையலைக் காணோமே!

திருவலஞ்சுழி என்பது ஒரு அழகான சிவஸ்தலம். கும்பகோணத்துக்குப் பக்கத்தில் காவேரிக் கரையில் அமைந்திருக்கிறது கோயில். அங்குள்ள மூர்த்தியைப் பற்றி ஒரு பாடல்.

ஒரு பெண் அங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமானது அழகில் ஈடுபட்டவளாய்க் காதல் வெறிக்கு உள்ளாய் விடுகிறாள்.

சதா இறைவனையே சிந்தித்துக்கொண்டிருக்கிறாள். பகலெல்லாம் அதே சிந்தனை. இரவும் அதே சிந்தனை. கேட்பானேன்; கனவிலும் எப்படி எல்லாமோ வந்து ஊடாடிப் போகிறான் இறைவன்.

ஒருநாள், கனவில் நிகழ்ந்த நிகழ்ச்சியைக் காலையில்த் தன்னைப் பார்க்க வந்த தோழியிடம் சொல்லுகிறாள் :

"வந்தார் சிவபெருமான். பிச்சை கேட்கிற பாவனையில் வந்தார். வீட்டுக்குள்ளும் நுழைந்து விட்டார்.

"ஆளைப் பார்த்தால் கோடீஸ்வரப் பிரபுவாய் ஜோராய் இருக்கிறார். பிச்சை எடுக்க வருவானேன்! சரி, சரி! கொஞ்சம் பைத்தியம் போயிருக்கிறது என்று சந்தேகித்தேன். ஏதாவது வார்த்தை பேசி மெள்ள வெளியே அனுப்பிவிட வேண்டும் என்று ஒரு யுக்தி பண்ணினேன். 'ஏதோ தெரியாத்தனமாக வீட்டுக்குள் வந்துவிட்டீர், போகட்டும்! உம்முடைய ஊர் எது என்று தயவுசெய்து சொல்லும்' என்று கேட்டேன்.

'பொருள்த்தக்கீர் சில்பலிக்கென்(று)
இல்புகுந்தீர் ஏனும்,
மருள்த்தக்கீர், யாதும் ஊர்'
என்றேன்.

அவர் பதில்ச் சொன்னார்.

"ஊர் எது என்று கேட்கிறாய்? மாமறையம் என்னுடைய ஊர்."

மாமறையம் என்றால் மறைகள், அரிய பாடல்கள் என்று பொருள். உயர்ந்த பக்தி மயமான பாடல்களில்த்தான் இறைவன் தங்குகிறான். இந்த அரிய உண்மையைக் குறித்தே "மாமறையம்" ஊர் என்றார்.

'பொருள்த்தக்கீர் சில்பலிக்கென்(று)
இல்புகுந்தீர் ஏனும்
மருள்த்தக்கீர் யாதும்ஊர்'
என்றேன்—'மருள்த்தக்க
மாமறையம்' என்றார்
'வலஞ்சுழிநம் வாழ்வென்றார்'
தாம்மறைந்தார் காணேன்கைச்
சங்கு.

[பொருள் தக்கீர் : பெரும் செல்வவானாக இருந்தும்; சில்பலிக்கென்று: சாமான்ய பிச்சைக்கென்று வந்தீர்; இல் புகுந்தீர் ஏனும்: வீட்டுக்குள் பிரவேசிக்கக் கூடாது தான், ஆனாலும் உள்ளே வந்து விட்டீர்; மருள்த்தக்கீர் : விவரம் தெரியாமல் வந்து விட்டீர், இருக்கட்டும்; யாது உம் ஊர் என்றேன் : உம்முடைய ஊர் இன்னதென்றுதான் சொல்லுமே.

பதில்ச் சொல்லுகிறார் இறைவன் :

மருள்த்தக்க மாமறையம் என்றார் : இன்பமான மயக்கத்தைத் தரக்கூடிய பாடல்கள் என்றார்; வலஞ்சுழி நம் வாழ்வென்றார்: வலஞ்சுழிக் கோயில் தான் வீடென்றார்.

அவ்வளவுதான் சொன்னார் :—

தாம் மறைந்தார்: அப்படியே மறைந்து போய்விட்டார்; காணேன் கைச் சங்கு: பிரிவினால் எனக்கு உடல், உள்ளமெல்லாம் அப்படியே சோர்ந்து போய்விட்டது. கையில் இருந்த வளையல்கள் (சங்கு) எங்கெல்லாமோ கழன்று போய் விட்டன.]

கனவில் நிகழ்ந்த காரியம். ஏமாற்றம், என்பது கனவின் முடிவு. ஆனாலும் பெண்ணுக்கு மிக்க எக்களிப்பு. சந்தோஷத்தைத் தோழியுடன் பங்கிட்டுக் கொள்கிறாள்.

காதல் வெறி காட்டுகிற விசித்திரக் காட்சிகளில் இது ஒன்று.

கோலினஸ்

இயற்கையின் அற்புதப் பச்சை-

க்ளோரோபில் சேர்ந்தது

...உங்கள் பல் சுத்திகரிப்பில் இதுவரை ஏற்படாத மாபெரும் அபிவிருத்தி!

செடிகொடிகளை பசுமையுடன் வைத்திருக்கும் பொருளாகிய இயற்கையின் சிருஷ்டி க்ளோரோபில் உதவியால் நாள் முழுதும் வாய் துர்நாற்றத்தை அகற்றுங்கள்....பல் சிதைவும் சாதாரண ஈறுக்கோளாறுகளும் ஏற்படாமல் தடுங்கள்!

உங்கள் பல் பராமரிப்புக்கு இதுவரை இல்லாத முறையில் மிகப் பயன்படக்கூடிய மார்க்கம் இதுவே. சந்தேகமில்லை. க்ளோரோபில் சேர்ந்த அற்புதமான கோலினஸ் பல் சிதைவையும் நோய்க் கிருமிகளையும் நேரடியாகத் தாக்குவது மட்டுமின்றி, வாய் துர்நாற்றத்தையும் நாள் முழுவதிலும் ஒழித்து விடுகிறது. இதற்குக் காரணம் இந்தப் பச்சை க்ளோரோபில் தான் — தாவரங்களை பசுமையுடன் வைத்திருக்க இயற்கையால் சிருஷ்டிக்கப்பட்ட அற்புத ரசாயனப் பொருள்!

க்ளோரோபில் சேர்ந்த கோலினஸ் விசேஷ பலனளிப்பது தவிர, சிக்கனமானதுங்கூட—ஈரமில்லாத பிரஷ் மீது அரையங்குலமே போதுமானது. பச்சை அட்டைப் பெட்டியில் எல்லா ஸ்டோர்களிலும் கிடைக்கும். இன்றே வாங்கி, தந்த விஞ்ஞானத்தில் இதுவரை இல்லாத இம்மகோன்னத அபிவிருத்தியின் பயனை அடையுங்கள்!

புதிய பச்சை அட்டைப் பெட்டியை கவனியுங்கள்
ஸ்டாண்டர்ட் கோலினஸ் (மஞ்சள் லேபில்) கூட கிடைக்கும்

2000 அமெரிக்க பல் நோயாளிகள் க்ளோரோபில்லின் குணநிசயங்களை நிரூபிக்கின்றனர்

நான்கு வருட ஆராய்ச்சி மற்றும் சுமார் 2000 அமெரிக்க பல் நோயாளிகளைக்கொண்டு நடத்தப்பட்ட மிக விரிவான சோதனைகள்....இவைகளின் பலனாக நிரூபணமான முறையில், க்ளோரோபிலுடன் கூடிய பேஸ்ட் பல் கிரீம்:—

- வழக்கமான சகல வகை ஈறுக் கோளாறுகளையும் நிறுத்துகிறது.
- நாள் பூராவும் வாயில் துர்நாற்றம் ஏற்படாமல் தடுக்கிறது.
- பல் சிதைவுக்குக் காரணமான கிருமிகளை ஒழித்து அகற்றுகிறது.

உங்கள் பல் டாக்டர் இச்சோதனைகளைப்பற்றி அறிவார்....அவற்றின் பலன்களையும் ஊர்ஜிதம் செய்வார்.





'கோலினஸ்' புன்னகையில் ஆரோக்யம் ததும்புகிறது!

இந்தியாவில் தயாரிப்பவர்கள்:
ஜியோப்ரே மானர்ஸ் & கோ., லிட்., பம்பாய் 1. கிளைகள்: கல்கத்தா — மதராஸ் — டில்லி



வீடு கிடைக்குமா?

"வெங்கு"

எனக்கு ஒரு வீடு வேண்டியிருந்தது. எனவே, எங்கேயாகிலும் காலி வீடு இருக்குமா என்று தேடிக்கொண்டு புறப்பட்டேன்.

ஏதோ ஒரு தெருவில் போய் நின்றுகொண்டேன். அந்தத் தெருவில் போகிறவர் வருகிறவர்களைக் கவனித்தேன். கடைசியாக ஒருவர் முகம் மட்டும், இவரைக் கேட்டால் வீடு இந்தத் தெருவில் காலியாக இருக்கிறதா என்ற விவரம் தெரியவரும் என்ற நம்பிக்கையை அளித்தது. அவரைக் கேட்டேன்.

என் கேள்வி அவரைச் சிந்தனையில் ஆழ்த்தியது. "இந்தத் தெருவில் காலி வீடு இருப்பதாகத் தெரியவில்லையே......நான்கு நாட்களுக்கு முன்பு இந்தத் தெருவில் குடியிருந்த ராமானுஜய்யங்கார் வீட்டைக் காலி பண்ணினார்...ஆமாம். ஒரு வேளை அந்த வீட்டிற்கும் அதற்குள் யாராகிலும் குடி வந்து விட்டார்களோ என்னமோ! எதற்கும் நீங்கள் போய் விசாரியுங்கள்!" என்றார் அவர்.

"எந்த வீடு? என்ன நம்பர்? ஒன்றும் சொல்லாமல் திடீர் என்று விசாரியுங்கள் என்றால் எப்படி ஸார் விசாரிக்கிறது?" என்று கேட்டேன்.

"ஆமாம். விலாசம் சொல்ல மறந்து விட்டேனே! இந்தத் தெருவில் வலது கைப் புறம். நம்பர் சரியாக ஞாபகமில்லை. பதினேழோ, பதினெட்டோ இருக்க வேண்டும். அதெல்லாம் எதற்கு? இப்படியே நேரே போனீர்களானால் 'கிருஷ்ண விலாஸ்' என்று ஒரு வீட்டு வாசலில் போட்டிருக்கும். அந்த வீட்டுக்கு அடுத்த வீடுதான்" என்றார்.

அங்கே போய் விசாரித்தேன். அந்த வீட்டுக்குப் புதுக் குடித்தனம் வந்து இரண்டு நாள்தான் ஆகிறது என்று அறிந்தேன். ஆனால் புதிதாக அந்த வீட்டில் குடியேறியிருந்தவர், என் நிலைமையைக் கேட்டு அறிந்து ரொம்பவும் பச்சாத்தாபப்பட்டார். அந்தப் பச்சாத்தாபத்தில் தாம் காலி செய்து விட்டு வந்த வீட்டு விலாசத்தைக் கொடுத்தார். "உங்கள் அதிர்ஷ்டம், அந்த வீடு இன்னும் காலியாக இருக்கிறதோ என்னமோ பாருங்கள்!" என்றார்.

அங்கே போய் விசாரித்தேன். விசாரித்ததில் அந்த வீடும் காலியில்லை என்பதை அறிந்தேன். ஆனால் அந்த வீட்டுக்காரரும், மிக்க அனுதாபத்துடன், இன்னொரு விலாசத்தைக் கொடுத்து "அங்கே விசாரியுங்கள்!" என்று கூறி யனுப்பினார்.

எங்கே விசாரித்தும் ஒரு பயனுமில்லை. அன்று காலை பத்து மணிக்கே வீடு வேட்டைக்குக் கிளம்பினேன். இரண்டு மணி வரை வெய்யிலில் அலைந்ததுதான் மிச்சம் என்று தீர்மானிக்கையில் "என்ன ஸார்? உங்களுக்கு வீடு வேண்டுமா?" என்று நம்பிக்கை யளிக்கும் குரல் வந்தது!

திரும்பிப் பார்த்தேன். யாரோ முன்பின் தெரியாத ஒருவர், "உங்களைப் பார்த்தால் வீடு தேடிக்கொண்டு அலைபவர்களாகத் தெரிகிறது! இந்தக் காலத்திலே வீடு கிடைப்பது குதிரைக் கொம்பாக வல்லவா இருக்கிறது. ஆயினும் பாருங்கள், ஒரு வீடு காலியாக இருக்கிறது. தனி வீடு, ஒரு பெரிய குடும்பம் இருக்கலாம். மின்சார விளக்கு வசதி யிருக்கிறது; குழாய் இருக்கிறது. வாடகை கூட அதிகமில்லை முப்பத்தெட்டு ரூபாய்தான்..." என்று சொல்லிக் கொண்டு வந்தார்.

எனக்கு உற்சாகம் தாங்கவில்லை; இத்தனை நாழிகை அலைந்ததற்குப் பலனில்லாமல் போய்விடவில்லை. இந்த இடத்தை எப்படியும் பிடித்துவிட வேண்டியதுதான் என்றெல்லாம் தீர்மானித்துக் கொண்டேன். அந்த மனுஷர் பேசிக் கொண்டிருக்கையிலேயே! கடைசியில் அந்த மனுஷர், "ஆனால்" என்று ஒரு அணு குண்டைப் போட்டார்.

"என்ன ஸ்வாமி? ஆனால்......?" என்று அலறிப் புடைத்துக் கொண்டு கேட்டேன்.

"அந்த வீட்டில் பேயோ பிசாசோ இருப்பதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். அதனால் அந்த வீட்டுக்குக் குடிவர யாரும் பயப்படுகிறார்கள். உங்களுக்குத் தைரியமிருந்தால்

தேன். என்னால் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை.

கடைசியில், இனி இந்த வீட்டுப் பிரச்னை சம்பந்தமாக இத்தனை நாழிகை குழப்பிக் கொண்டது போதும். வேறு எதிலாவதும் மனசைச் செலுத்தலாம் என்று புஸ்தகாலயத்துக்குப் போனேன். அங்கே போய் ஆங்கிலச் சிறு கதைப் புஸ்தகம் ஒன்றை எடுத்து வைத்துக் கொண்டு படிக்க ஆரம்பித்தேன். நான் படித்த முதல் கதை இதுதான்:

அந்த வீடு

அவன் சொன்னான்: நான் இரண்டு வருஷங்களுக்கு முன்பு நோய் வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையில் கிடந்தேனல்லவா? அப்பொழுது தினம் இரவில் ஒரே மாதிரியான கனவு கண்டு வந்தேன். நான் ஏதோ ஒரு கிராமத்தில் நடக்கிறதாகவும் அந்தப் பாதையிலிருந்து நீண்ட நெடுந் தூரத்தில் எலுமிச்சைத் தோட்டத்தின் நடுவில் வெள்ளை வெளேர் என்று ஒரு சிறு வீடு இருப்பதாகவும் கனவு கண்டு வந்தேன்.

கனவில், அந்த வீடு என்னை ரொம்பவும் கவர்ந்தது. எனவே அந்த வீடு வரைக்கும் நடந்து போய் வந்தும் இருக்கிறேன் — கனவில்தான்.

அந்த வீட்டுக்கு ஒரு வெள்ளை 'கேட்' இருந்தது. கேட்டிலிருந்து நேரே வீட்டு வாசல் வரை செல்லும் பாதையிருந்தது. அந்தப் பாதையின் இரு பக்கங்களிலும் வண்ண வண்ண புஷ்பச் செடிகள் இருந்தன. அந்தப் புஷ்பங்களை நான் தொட்ட மாத்திரத்தில் ஏனோ வாடி விடும்.



இந்தப் படத்தைப் பார்த்தவுடனேயே இது ஒரு கைத்தறி நெசவாளர் குடும்பம் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். நம் மாகாணத்தில் இது போல ஆயிரக் கணக்கான நெசவாளர் குடும்பங்கள் அல்லல்பட்டு அவதியுறுகின்றனர். அந்தக் குடும்பங்களுக்கு உதவி புரிய வேண்டியது நம்முடைய கடமையாகும்.

"அல்லற்பட் டாற்று தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை"

என்ற வள்ளுவரின் குறளுக்கு விளக்கமாக விளங்கும் இந்தச் சித்திரத்தைச் சுவர் ஒட்டி விளம்பரத் தயாரிப்பாளர்களான பானு பிரதர்ஸார் வண்ண ஓவியமாகத் தீட்டி சென்னை தேனாம்பேட்டையில் நடந்து வரும் பொருட் காட்சியில் உள்ள கலைக் காட்சியில் வைத்திருக்கிறார்கள்.

நீங்கள் போய் இருங்கள்" என்று சொல்லி அந்த வீட்டின் விலாசத்தையும் கொடுத்தார். எனக்கு என்ன பதில் சொல்வது என்றே தெரியவில்லை. எனக்குத் தைரியமிருப்பதாகவும் தெரியவில்லை. இல்லாதது போலவும் தெரியவில்லை. யோசித்து யோசித்துப் பார்த்

வீடு வெள்ளைச் சலவைக் கற்களால் கட்டப்பட்டிருந்தது. கூரை மட்டும் சிவப்பு நிறத்தில் இருந்தது. வீட்டு வாசல் கதவு நல்ல வேலைப்பாடு செய்யப்பட்ட கதவாக இருந்தது. அந்தக் கதவை அடையப் பூமி மட்டத்திலிருந்து ஏழு எட்டுப் படிகள்

ஏறிச் செல்ல வேண்டிய படிக் கட்டுகள் இருந்தன. நான் வீட்டுக்குள் நுழைந்து யார் இருக்கிறார்கள் என்று பார்க்க விரும்பினேன். ஆனால் யாரும் என் கதவு தட்டும் சத்தம் கேட்டு ஏன் என்று கேட்கவில்லை. எனக்குப் பெருத்த ஏமாற்றமாகப் போய் விட்டது சரி, பலத்த குரலில் கூப்பிடுவோம் என்று குரல் கொடுத்தேன். அந்த முயற்சியில் நான் தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டதுதான் ஏற்பட்ட பலன்.

இதுதான் என் கனவு. இந்தக் கனவு உடம்பு குணமான பிறகும் மாதக் தவறாமல் வரத் தொடங்கியது. அதன் விளைவாக, சிறு வயது முதலே எனக்கு அந்தத் தோட்டமும் வீடும் தெரியும் என்று நானே நம்பத் தொடங்கினேன். ஆனால் நனவில், அந்த வீட்டையும் தோட்டத்தையும் ஞாபகப் படுத்திக் கொள்ள எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. எனினும், அந்த வீட்டைத் தேடிக் கண்டு பிடிக்க வேண்டும் என்ற எண்ணம் என் உள்ளத்தில் வெறியாக மாறத் தொடங்கியது. நானே கார் ஓட்டத் தெரிந்து கொண்டவுடன், கோடை விடு முறையில் என் காரை எடுத்துக் கொண்டு எங்கள் நாட்டுக் கிராமாந்திரங்களில் அந்த வீட்டைத் தேடிக் கொண்டு சுற்றி யலைவது என்று நிர்மானித்துக் கொண்டேன்.

என் அலைச்சலையெல்லாம் நான் சொல்லப் போவதில்லை. நான் அலைந்ததுதான் மிச்சமே தவிர பலன் ஒன்றுமில்லை. அந்த வீடு கிடைக்கவே இல்லை! என் இருப்பிடத்துக்குத் திரும்பி வந்து சேர்ந்தேன். மறுபடியும் அந்தப் பளிங்கு வீட்டைப் பற்றிக் கனவு காண ஆரம்பித்தேன்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு மறுபடியும் என் யாத்திரையைத் தொடங்கினேன். ஒரு நாள் நான் காரில் போய்க் கொண்டிருந்த போது, எனக்கு இன்ப மயமான அதிர்ச்சி ஏற்பட்டது. ஆம், மிகவும் பிடித்தமான இடத்தையோ, அல்லது மிகவும் நெருங்கிய நண்பரையோ நீண்ட நாட்களுக்குப் பிறகு சந்திக்க நேர்ந்தால், எத்தகைய இன்ப உணர்ச்சி ஏற்படுமோ அதே உணர்ச்சி தான் எனக்கும் ஏற்பட்டது.

இதற்கு முன்பு, இந்தப் பகுதிக்கு வந்ததில்லை என்றாலும், எப்பொழுதோ இப்பகுதியில் வந்திருப்பது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. ஒவ்வொரு மரமும், ஒவ்வொரு செடியும் எனக்கு நன்கு அறிமுகமானது போல் தோன்றியது. தூரத்தே எலுமிச்சைச் செடிகளினூடே வீடு மெள்ளத் தெரியலாயிற்று. உடனே, என் கனவு வீட்டைக் கண்டு பிடித்து விட்டேன் என்ற உறுதி எனக்கு ஏற்பட்டு விட்டது. நூறு கஜ தூரம் போனால், பிரதான சாலையிலிருந்து ஒரு குறுகிய பாதை வீட்டை நோக்கிச் செல்லும் என்பது எனக்குத் தெரியும். அப்படியே இருக்கவும் செய்தது. அந்தக் குறுகிய பாதை



"சாமா! உனக்காக என் உயிரைக் கொடுக்கவும் தயாராயிருக்கிறேன்!"

"ஆமாம். அப்படித்தான் சொல்வீர்! செய்கிறதுதான் இல்லை! போகட்டும்: உங்களிடமிருக்கும் அசோகா பொட்டலத்தைக் கொடுங்கள். அது போதும்!"

"ஐயையோ! என்னிடம் ஒரே ஒரு பொட்டலந்தான் இருக்கிறது! அது எனக்கு அவசியம் வேண்டும்!"

வழியே சென்றேன். அந்தப் பளிங்கு வீட்டின் வெள்ளை 'கேட்'டை அடைந்தேன்.

கேட்டைத் திறந்து கொண்டு, வீட்டு வாசலை அடையும் பாதையில்—நான் எத்தனையோ தடவை கனவில் சென்ற அப்பாதையில்—சென்றேன். வழியெல்லாம் அழகழகான புஷ்பங்கள் மலர்ந்திருந்தன. அதைப் பார்த்து வியந்து கொண்டே போய், வீட்டுவாசற்படி ஏறிக் கதவைத் தட்டினேன்.

என் சத்தத்துக்கு யாரும் வந்து கதவைத் திறக்க மாட்டார்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் என்ன ஆச்சரியம்! ஒரு கிழ வேலைக்காரன், முகத்தில் சோகக் குறி படர, வந்தான். என்னைப் பார்த்ததில் அவனுக்கு ஒரே வியப்பாய்ப் போயிருக்க வேண்டும். இல்லையெனில் ஏன் என்னை விழுங்கி விடுபவன் போல் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் அப்படிப் பார்க்க வேண்டும்!

நான் வேலைக்காரனிடம், "அப்பா, எனக்கு இந்த வீட்டுக்காரர்கள் யார் என்று தெரியாது. ஆனால் எனக்கு இந்த வீட்டுக்குள் நுழைந்து பார்க்க வேண்டும் போல் ஆசையாயிருக்கிறது. அதற்கு அவர்கள் அனுமதித்தார்களானால் எனக்கு எவ்வளவோ சந்தோஷமாக இருக்கும்" என்றேன்.

இதைக் கேட்டதும் அவன் குரலில் வருத்தம் தொனிக்க, "இந்த வீடு வாடகைக்கு விடத்தான் இருக்கிறது. நானும், இந்த வீட்டைப் பார்க்க வருபவர்களுக்குக் காண்பிக்கத் தான் இருக்கிறேன்" என்றான்.

இதைக் கேட்டதும் எனக்கு வியப்பாகப் போய்விட்டது. "என்ன, வாடகைக்கு விடப்படுமா! என்ன அதிர்ஷ்டம் என் அதிர்ஷ்டம்! ஆகா! இவ்வளவு அழகிய வீட்டில் வீட்டுக்காரர்கள் ஏன் இருக்கக் கூடாது?" என்றேன்.

"அவர்கள் இந்த வீட்டில் இருக்கத்தான் செய்தார்கள், தாயே! ஆனால் இந்த வீடு பிசாசு பிடித்த வீடு என்று தெரிந்ததும், இந்த வீட்டைக் காலி செய்து கொண்டு போய் விட்டார்கள்" என்றான்.

"என்ன! வீட்டுக்குப் பிசாசு பிடித்திருக்கிறதா! இந்தத் தேசத்தில் இன்னுமா ஜனங்கள் வீட்டுக்குப் பிசாசு பிடித்திருக்கிறது என்றால் நம்புகிறார்கள்!...யார் எப்படிப் போனால் என்ன? இந்த வீட்டுக்குப் பிசாசு பிடித்திருக்கிறது என்பதனால் நான் இந்த வீட்டைக் கைவிடப் போவதில்லை. நான் இந்த வீட்டில் குடியேறத்தான் போகிறேன்" என்றேன்.

தோட்டக்காரன் "அவர்கள் பேச்சை நான் கூட நம்பியிருக்க மாட்டேன், தாயே! ஆனால் பின்னர் நானே நம்பும்படியாகிவிட்டது. என் எசமானரைத் துரத்திய அந்தப் பேயுருவத்தை இந்தத் தோட்டத்தில் நானே இந்தக் கண்களாலேயே பார்த்தேன்!" என்று கூறினான்.

"என்ன கட்டுக் கதை!" என்று சொல்லி மெல்லச் சிரித்தேன்.

தோட்டக்காரன், "சிரிக்கக் கூடிய கதை அல்ல தாயே! ஏனெனில் அந்தப் பேயுருவம் உங்கள் உருவமாகவே இருந்தது!" என்றான்.

*

இந்தக் கதையைப் படித்ததும், எனக்கு மேற்கொண்டு வேறொன்றையும் படிக்கத் தோன்றவில்லை. புஸ்தகத்தை மூடி மேஜை மீது வைத்தேன். பின்னர் கண்களை மூடிக் கொண்டு சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்தேன். மறுபடியும் புஸ்தகத்தைத் திறந்து வேறொரு கதை படிக்க முயன்றேன். கண்கள் எழுத்துக்களை வரிவரியாகப் பார்த்தனவே தவிர, மதி பொருளை கிரகிக்கவில்லை. எனவே, புஸ்தகத்தை அப்படியே போட்டு விட்டு, புஸ்தகாலயத்தை விட்டு வீட்டை நோக்கி வந்தேன்.

வீட்டுக்கு வந்ததும், "என்ன போன காரியம் ஜெயமா? வீடு ஏதாகிலும் கிடைத்ததா?" என்று மனைவி விசாரித்தாள்.

"வீடு..." என்று இழுத்து விட்டு மறுபடியும் யோசனையில் ஆழ்ந்து விட்டேன்.

"என்ன வீடு...என்று யோசிக்கிறீர்கள்! வீடு கிடைக்கவில்லையா?" என்றாள்.

"ஆமாம், வீடு கிடைக்கவில்லை. ஆனால் கதை கிடைத்தது!" என்றேன்.

கடாவ்
வாயில்



ஸ்ரீ கடாவ் மகன்ஜி ஸ்பின்னிங் & வீவிங் கம்பனி லிமிடெட்.
மில்: பைகுலா, பம்பாய் - ஆபீஸ்: லக்ஷ்மி பில்டிங், பல்லார்ட் பியர், பம்பாய். ஜவுளிக்கடை: மூல்ஜி ஜேதா மார்க்கெட், கோவிந்த் சேனக், பம்பாய் 2.

KM(S) 73-TAMIL

உங்களூர் சில்லரை விற்பனை கடை:

கடாவ் மில்ஸ் ஷோரூம்

216, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு, மதராஸ்-1

கார்த்திகைப் பரிசு

எஸ். டி. ஸ்ரீநிவாஸன்

"ஹேமா......!"

இந்தக் குரல் குழாயடியில் முகம் கழுவிக் கொண்டிருந்த ஹேமாவதியைக் காந்த சக்தி போல் இழுத்தது. அவள் அவசர அவசரமாகத் தன் முகத்தைத் துடைத்துக் கொண்டு மாடிக்கு ஓடிவந்தாள். ரங்கராஜன் அவளிடம் ஒரு பொட்டலத்தை நீட்டினான்.

"என்ன இது?" என்று ஆவலோடு கேட்டாள்.

"பிரித்துப் பாரேன், தெரியும்!"

"ஓ! புடவையா......!" பொட்டலத்தைப் பிரித்துக் கொண்டே சொன்னாள் அவள்.

மஞ்சள் உடலில் அழகான கறுப்பு நிற காலேஜ் பார்டர் போடப்பட்டிருந்தது.

"அண்ணா வாங்கிக் கொடுத்தார். மன்னிக்குக் கொண்டு போய்க் காட்டு."

புடவையை அப்படியே காகிதத்தில் வைத்துச் சுருட்டி எடுத்துக் கொண்டு கீழே சமையற் கட்டுக்கு ஓடினாள் ஹேமாவதி.

"மன்னி! இதோ புடவை வந்து விட்டது. பாருங்கோ!" என்றாள்.

சமைத்துக் கொண்டே இருந்த கௌரி தன் சமையல் வேலையை விட்டு விட்டுப் புடவையைக் கையில் வாங்கிக் கொண்டாள்.

"நன்று யிருக்கிறதா, மன்னி!" என்று ஆவலோடு கேட்டாள் ஹேமாவதி.

"உனக்குப் பிடித்திருக்கிறதா!"

"உங்களுக்குப் பிடித்திருக்கிறதோ!"

"கட்டிக்கப் போகிறவள் நீ. உனக்குத்தானே பிடிக்கணும்...... எனக்கு இது ரொம்பப் பிடித்திருக்கிறது!"

"அப்போ, எனக்கும் பிடித்திருக்கிறது."

"உன் சிவப்பு உடம்புக்கு இந்தக் 'கலர்' ரொம்ப நன்று யிருக்கும். இந்தா, இதை பீரோவில் கொண்டு போய் வை......" புடவையை அப்படியே பொட்டலத்தோடு ஹேமாவதியின் கையில் கொடுத்தாள் கௌரி. ஹேமாவதி பெருமையோடு அதை எடுத்துக் கொண்டு, கொத்துச் சாவியுடன் ரேழியிலிருந்த பீரோவை நோக்கிச் சென்றாள்.

* * *

அன்று காலையில் கௌரி தன் கணவனுக்குக் காப்பி கொடுக்கும்போது, சிரித்துக் கொண்டே, "இன்னும் நாலு நாளிலே கார்த்திகை வருகிறது. நம்ம ஹேமாவதிக்கு ஒரு புடவை வாங்கிக் கொடுக்கணும்......" என்றாள்.

"கார்த்திகைக்கா ......! நாம்...... உனக்கு வேண்டாமா!" என்று கேட்டான் நாராயணன்.

"இந்த மாசம்தான் ஏகப்பட்ட செலவு என்கிறீர்களே! எனக்கு இப்போ புடவை அவசியம் இல்லே. கல்யாணம் ஆகி இது தான் அவளுக்கு முதல் கார்த்திகை. நம்ம அகத்திலே சுபமாக விளக்கு ஏற்றுகிற போது நாம் அவளுக்கு ஒரு புடவை வாங்கிக் கொடுக்க வேண்டும்" என்றாள் கௌரி.

"சரி! வாங்கிக் கொடுத்தால் போகிறது. சாயங்காலம் அவளையும் கடைக்கு அழைத்துக் கொண்டு போய் நீயே ஒரு புடவை வாங்கிக் கொண்டு வந்துவிடேன்" என்றான்.

அவர்கள் சம்பாஷணையைச் சமையல் அறையில் இருந்த ஹேமாவதி கேட்டுக் கொண்டிருந்தாள். கௌரி சமையல் கட்டுக்கு வந்ததும், "மன்னி! பீரோ நிறைய எனக்குப் பட்டுப் புடவையும், நூல் புடவையுமாக டஜன் கணக்கிலே இருக்கிறது. இப்போ எதுக்காக எனக்குப் புதிதாக இன்னொன்று வாங்கணும்! வீண் செலவு என்னத்துக்கு மன்னி! அதுவும் உங்களுக்கு வாங்காமல் எனக்கு மாத்திரம் எதுக்கு! வாங்கினால் ரெண்டு பேருக்கும் வாங்கணும்" என்றாள்.

கௌரி சிரித்துக் கொண்டே, "கல்யாணம் ஆன முதல் வருஷம் மாட்டுப் பெண்கள் புக்ககத்திலே விளக்கேற்றினால், புதுப் புடவை வாங்கிக் கொடுக்கிறது வழக்கம். சாஸ்திரத்தைக் குறைப் பானேன் என்கிறதுதான் எனக்கு......" என்றாள்.

"அப்படியானால் எனக்கு ஒரு சாதாரண நூல் புடவை போதும். அண்ணாவையே நல்லதாக ஏதாவது ஒரு புடவை பார்த்து வாங்கிக்கொண்டு வரச் சொல்லி விடுங்கள். நாம் எதுக்காகக் கடைக்குப் போகிறது!" என்றாள்.

கௌரி, நாராயணன் ஆபீஸுக்குக் கிளம்பும் போது, அவனையே ஒரு புடவை வாங்கிக்கொண்டு வரும்படி சொல்லி அனுப்பினாள். அவன் புடவையை வாங்கி ரங்கராஜனிடம் கொடுத்தனுப்பினான். புடவை எல்லோருக்கும் பிடித்திருந்தது. முக்கியமாக ஹேமாவதிக்கு அந்தப் புடவை ரொம்பப் பிடித்திருந்தது.

ரங்கராஜனைக் காட்டிலும் எட்டு வருஷங்கள் பெரியவன் நாராயணன். தந்தை ஸ்தானத்தில் இருந்து வளர்த்து, ரங்கராஜனுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுத்து, அவனை ஒரு நல்ல உத்தியோகத்தில் அமர்த்தினான் நாராயணன். தாய் தந்தை



"மரியாதையாய் வேறு எங்கேயாவது போய் நின்று கொள். இல்லாவிட்டால் உனக்கும் எனக்கும் சிநேகம் அடியோடு கெட்டு விடும்!"

யின்,மறைவுக்குப் பின் ரங்கராஜனுக்கு நாராயணனும் கௌரியும்தான் அவர்கள் ஸ்தானத்தில் இருந்து அவனை வளர்த்தனர். ரங்கராஜன் எஸ். எஸ். எல்.ஸி. படிக்கும்போது, ஏழைக் குடும்பத்துப் பெண்ணான கௌரி நாராயணனை மணந்து, குடும்ப பாரத்தை ஏற்றுக்கொண்டாள். தன் கணவனுக்குக் கிடைத்த சொற்ப வருமானத்தில், செட்டாகக் குடித்தனத்தை நடத்தி ரங்கராஜன் ஹானர்ஸ் படிக்க வசதி செய்தாள். அவளிடம் ரங்கராஜனுக்கு அபார விசுவாசம். எப்பொழுது பார்த்தாலும் 'மன்னி, மன்னி' என்று சின்னஞ் சிறு குழந்தைபோல் அவளையே சுற்றிச் சுற்றி வருவான்.

ரங்கராஜனின் படிப்பு முடிந்ததும் ஒரு கம்பெனியில் அவனுக்கு உத்தியோகம் கிடைத்தது. தான் வாங்கும் சம்பளத்தை அப்படியே அவன் மன்னியிடம் கொண்டு வந்து கொடுத்துவிடுவான். அவனுக்காக வேண்டிய எந்தச் செலவும், அன்று மன்னிதான் செய்ய வேண்டும். தனக்கென்று பாங்கியில் கணக்கோ, பெட்டியில் பணமோ அவன் வைத்துக் கொண்டது கிடையாது.

அவனுக்குக் கல்யாணம் செய்துவைக்க முனைந்தான் நாராயணன். தனக்கு வரப்போகும் மனைவி நன்றாகப் படித்தவளாகவோ, பேரழகியாகவோ, இருக்க வேண்டும் என்றோ அல்லது நிறைய சீருடன் வரவேண்டும் என்றோ ஆசைப்படவில்லை ரங்கராஜன். தன் தாய் ஸ்தானத்தில் இருந்து தன்னை வளர்த்த தன் மன்னியின் மனம் கோணாமல் நடக்கக்கூடிய, தன் மன்னிக்குப் பிடிக்கக்கூடிய—ஒரு அடக்கமான பெண்தான் தனக்கு மனைவியாக வாய்க்க வேண்டும் என்று விரும்பினான். பல பெண்களின் ஜாதகங்கள் வந்தன. நாராயணனுக்கும் கௌரிக்கும் ஹேமாவதியைத்தான் பிடித்தது. ஹேமாவை ரங்கராஜனுக்கும் பிடித்திருந்தது: ஆனால் அவள் ரொம்பப் பணக்காரி. தன் மன்னிக்கு அடங்கி நடக்காமல் போய் விட்டால் என்ன செய்வது என்ற கவலை சிறிது இருந்தது அவனுக்கு. ஆனால் கௌரி ரொம்ப வற்புறுத்தியதின் மேல் ஹேமாவதியையே மணந்து கொண்டான் அவன்.

ஹேமாவதி தன்னுடன் குடித்தனம் செய்ய வந்ததும், தன் மன்னியின் மனம் கோணாமல் நடப்பதைத்தான் அவள் தன் லட்சியமாகக் கொள்ள வேண்டும் என்று அவளை எச்சரித்தான் ரங்கராஜன். ஆனால் அவன் சொல்லாமலேயே ஹேமாவதிக்குக் கௌரியிடம் ஒரு பற்றுதல் ஏற்பட்டு விட்டது. கௌரியும் ஹேமாவதியைத் தன் சொந்தத் தங்கை போல் நடத்தி வந்தாள். எங்கெந்த விதங்களில்ஹேமா–ரங்கராஜனின் தாம்பத்ய வாழ்க்கையை மலரச் செய்யலாமோ அதற்கெல்லாம் வேண்டிய சௌகரியங்களை ஹேமாவுக்கும் ரங்கராஜனுக்கும் செய்து கொடுத்தாள் கௌரி. அவர்களுடைய அன்யோன்யத்தைக் கண்டு ஊரில் எல்லோரும் ஆச்சரியப்பட்டனர். தன் மன்னியுடன் ஒத்துப் போகும் தன் மனைவி ஹேமாவதியின் குணத்தைக் கண்டு ரங்கராஜனே பெருமைப் பட்டான்.

தலை தீபாவளிக்கு ஹேமா தன் கணவனுடன் தன் பிறந்தகத்திற்குச் சென்றிருந்த போதுகூட, மன்னியைப் பற்றிப் பிறந்தகத்துப் பேர்களிடம் அடித்துக் கொண்ட பெருமை கணக்கில்லை.

கார்த்திகை நெருங்கிக் கொண்டிருந்தது. குடும்பத்தின் பொருளாதார நிலையை உத்தேசித்து, தனக்குக் கூட இல்லாமல் ஹேமாவுக்கு ஒரு புடவை வாங்க வேண்டும் என்று சொல்லித் தன் கணவனை வாங்கச் செய்த கௌரியின் பெருந்தன்மையைப் பற்றி எண்ணி ஆச்சரிய மடைந்தது ஹேமாவின் உள்ளம்.

மறு நாள் மாலை நாலரை மணி இருக்கும். காலை பத்து மணிக்குச் சாப்பிட்டு விட்டுத் தன் சிநேகிதி ஒருத்தியைப் பார்க்கச் சென்ற ஹேமாவதி அப்பொழுதுதான் வீட்டிற்கு வந்தாள். அவள் வந்த சமயம் கௌரியும் நாராயணனும் கூடத்தில் பீரோவண்டை நின்று கொண்டு ஏதோ பேசிக் கொண்டிருந்தனர். கௌரியின் கையில் ஒரு காகிதப் பொட்டலம் இருந்தது. ஹேமாவதியைக் கண்டதும் கௌரியும் நாராயணனும் தங்கள் சம்பாஷணையை நிறுத்தி விட்டனர்; கௌரி அவசர அவசரமாக அந்தப் பொட்டலத்தைத் தன் பீரோவில் வைத்துப் பூட்டி விட்டுச் சாவியை இடுப்பில் செருகிக் கொண்டு சமையல் கட்டுக்குப் போய் விட்டாள்.

கௌரி அப்பொழுது நடந்து கொண்ட விதம் ஹேமாவதிக்கு ஏதோ ஒருவிதமாகப்பட்டது. அந்தப் பொட்டலத்தில் என்ன இருக்கிறது என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்று அவளுடைய பெண் உள்ளம் துடித்தது.



சுமார் ஆறு மணிக்குக் கௌரி கோயிலுக்குப் புறப்பட்டாள். நாராயணனும் எங்கோவெளியே கிளம்பிவிட்டான். ஹேமாவதி மெதுவாகத் தன் மன்னியின் அறைக்குள் சென்றாள். ஆணியில் பீரோவின் சாவி மாட்டப் பட்டிருந்தது. அதை எடுத்துப் பீரோவைத் திறந்தாள். அந்தப் பொட்டலத்தை எடுத்துப் பிரித்தாள். அழகான பட்டுப் புடவை, மாந்துளிர் நிறத்தில்! மேலே ரூ. 110 என்று ஒரு சீட்டு ஒட்டி இருந்தது. ஹேமாவதியின் இதயத்தின் அடியில் இருந்து ஒரு பெருமூச்சு எழுந்தது. அப்படியே அதை வைத்துப் பீரோவைப் பூட்டி விட்டுச் சாவியை அது இருந்த இடத்திலேயே மாட்டினாள்.



என்றும் உங்கள் கூட்டாளி

நீங்கள் வெளியே செல்லும் போதும், வீட்டிலே தங்கும்போதும் ஐடியால் உங்களுக்கு க்ஷேமத்தை யளிக்கும் கூட்டாளியாக விளங்கும். நீங்கள் அதை பூர்ண நம்பிக்கையுடன் உபயோகிக்கலாம். நோய் நிவாரணி. கிருமி நாசினி, நறுமணத்துடன் கூடியது. விஷக் கலப்பற்றது.

தயாரிப்பாளர் :
தி மைசூர் இண்டஸ்ட்ரியல் & டெஸ்டிங் லாபரேட்டரி லிமிடெட்
மல்லேஸ்வரம், பெங்களூர்

விநியோக ஏஜண்டுகள் :
பெஸ்ட் அண்ட் கம்பெனி லிமிடெட்
தபால் பெட்டி நெ. 63, சென்னை

35 TM.



தவணைச் சலுகையில்


உங்கள் புதிய சைகிளை வாங்குங்கள்

ரூ. 1,96,000/- மதிப்புள்ள சைக்கிள்கள் இது வரை டெலிவரி செய்யப் பட்டுள்ளது. இது நியாயான விலைக் குறைவு இது தான். சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்.



ஒரு அரிய சலுகை. 25% முன்னதாக செலுத்தி பாக்கித் தொகையை ஆறு மாத தவணைகளில் செலுத்த வேண்டும். இங்கிலீஷ் சைகிள்கள் ரூ. 195/-, ஹிந்த் ரூ. 155/-, ஹெர்குலஸ் ரூ. 245/-, பி. எஸ். ஏ. ரூ. 265/-, பிலிப்ஸ் ரூ. 235/-, ராலே க்ரீன் ரூ. 360/- டைனமோ செட் 30/- நிபந்தனைகளின்படி உடனடியான டெலிவரி. புத்தம் புதிய சரக்குகள். ஒரிஜினல் பாகங்கள். டன்லப் டயர்கள், திட்டுக்கு உத்திரவாதம். முழு விலாசத்துடன் அருகாமையிலுள்ள ரயில்வே ஸ்டேஷன் பெயரையும் குறிப்பிட்டு உடனே எழுதுங்கள்.

தவணைச் சலுகையில்



ரேடியோக்களும், கிராமபோன்களும்

தவணைச் சலுகையில், உயர்ந்த ரக எல்லா வேவ் ரேடியோக்களும் கிராமபோன்களும் இப்பொழுது எங்களிடமிருந்து வாங்கலாம்.

காட்லாகிற்கும் நிபந்தனைகளுக்கும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்

MIDLAND TRADING CO., LTD., POST BAG 1987, BOMBAY-1

'பட்டுப் புடவை! ஏது இது! மன்னிக்குத்தான். அண்ணாதான் வாங்கிக் கொடுத்திருக்கிறார். இதில் ஏதோ விஷமம் இருக்கிறது. விஷயம் நமக்குத் தெரியவே கூடாது என்று மன்னி விரும்புகிறாள். அதனால் தான் நாம் வந்தவுடன் இதை மறைத்து விட்டாள். தனக்குப் புடவையே வேண்டாம். எனக்கு மாத்திரம் வாங்கினால் போதும் என்று நேற்று சொன்னவள் இன்று தனக்குப் பட்டுப் புடவை வாங்கிக் கொண்டிருக்கிறாள்! அவ்வளவும் வெளி வேஷம். சிரித்துச் சிரித்துப் பேசி நம்மை இருவரும் வஞ்சிக்கிறார்கள். இவர்கள் பேச்சை நம்பி நம் கணவர் ஏமாறுகிறார். இன்று பட்டுப் புடவையைப் பத்திரமாக மூடி பீரோவுக்குள் வைத்து விட்டால் என்றைக்குமே அது நமக்குத் தெரியாமல் போய்விடுமோ!' ஹேமாவதியின் உள்ளம் குமுறியது. இதுவரையில் மன்னியின் மேல் இருந்த நல்ல அபிப்பிராயம் ஒரு நொடியில் மறைந்து விட்டது.



அன்றிரவெல்லாம் அவளுக்குச் சரியாகத் தூக்கமே வரவில்லை. அடுத்த அறையில் நாராயணனும் கௌரியும் ஏதோ தாழ்ந்த குரலில் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தது அவள் காதுகளில் விழுந்தது. விஷயம் ஒன்றும் அறியாத ரங்கராஜன் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தான்.

இருபத்தி நான்கு மணி நேரத்திற்குமேல் ஹேமாவதியால் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. மறு நாள் மாலை ரங்கராஜன் சீக்கிரமே ஆபீஸிலிருந்து வந்து விட்டான். நாராயணன் வரவில்லை. கௌரி வழக்கம்போல் கோயிலுக்குச் சென்றிருந்தாள்.

கணவனுக்குக் காப்பி எடுத்துச் சென்ற ஹேமாவதி, "இதுமாதிரி அநியாயம் நான் இந்த வீட்டில் நடக்குமென்று துளிக்கூட எதிர்பார்க்கவில்லை!" என்றாள்.

ரங்கராஜனுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

"என்ன ஹேமா! இன்றைக்கு உன் பேச்சு ஒரு மாதிரியாக இருக்கிறதே! யார் என்ன சொன்னார்கள்!" என்று பரபரப்புடன் கேட்டான் அவன்.

"எல்லாம் உங்க அண்ணாவையும், மன்னியையும் தான் சொல்கிறேன். ரொம்ப நல்லவர்கள் போல் வேஷம் போடுகிறார்கள். உள்ளுக்குள்ளே அவ்வளவும் விஷம். பசப்பு வார்த்தைகளை நீங்களும் நம்புகிறீர்கள். இத்தனை நாள் தெரியாது விஷயம். கையிலே பணமே இல்லாதது போல் நடித்து, 'நைஸா'கப் பேசி முதலிலே எனக்கு ஒரு நூல் புடவை வாங்கி உள்ளே வைத்து விட்டாள் மன்னி. நேற்று உங்க அண்ணாவோடு போய்த் தனக்கு ஒரு பட்டுப் புடவை வாங்கிக்கொண்டு வந்திருக்கிறாள். எனக்குத் தெரியாமல் பீரோவிலே பத்திரமாக வைத்துப் பூட்டி விட்டாள்!"

"ஹேமா! நீ ஏதோ தவறான விஷயத்தைச் சொல்லுகிறாய். அண்ணாவிடம் இப்போ பணம் இல்லை, எனக்குத் தெரியும். பட்டுப் புடவை வாங்கி இருக்க முடியாது......" என்று உறுதியோடு சொன்னான் அவன்.

ஹேமாவதி 'விடு விடு' வென்று தன் மன்னியின் அறைக்குச் சென்றாள். பீரோவைத் திறந்து அந்த மாந்தளிர்ப் பட்டுப் புடவையை எடுத்து வந்தாள்.

"இது என்னவென்று பார்த்துவிட்டு அப்புறம் பேசுங்கோ.."—ஹேமாவதியின் முகத்தில் கோபம் தாண்டவமாடியது.

அவன் கண்களை அவனால் நம்ப முடியவில்லை. பட்டுப் புடவை. விலை ரூ. 110. முதல் நாள் தான் அது வாங்கப்பட்டது என்பதற்குப் 'பில்' வேறு இருந்தது.

அடுத்த கணம் அதை அவன் மௌனமாக அவள் கையில் கொடுத்தான். அவள் அதைப் பீரோவில் வைத்து விட்டுத் திரும்பி வந்தாள்.

"அண்ணாவிடம் பணமே இல்லையே......"

"அண்ணாவிடம் பணம் இருக்க வேண்டாம். மன்னியிடம் இருந்தது, வாங்கினாள்."

"மன்னியிடம் மாத்திரம் பணம் ஏது!"

"நீங்கள் உங்கள் சம்பளம் ரூ. 125ஐ அப்படியே மன்னியிடம் கொடுக்கிறீர்கள். அண்ணாவும் தம் சம்பளம் நூறு ரூபாயை அப்படியே அவளிடம் கொடுக்கிறார். மன்னி பொய்க் கணக்கு எழுதி விட்டு அதில் மாதம் கொஞ்சம் திருடிக் கொள்கிறாள். இப்பொழுது ஆற அமர யோசித்துப் பார்த்தால்தான் மன்னியின் காரியம் ஒவ்வொன்றுக்கும் அர்த்தம் எனக்கு விளங்குகிறது. நானும் இங்கு குடித்தனம் செய்ய வந்து நான்கு மாதங்களாகிறதே, ஒரு மாதமாவது பால்காரனுக்கோ, காய் கறிக்காரிக்கோ, மளிகைக் கடைக்காரனுக்கோ, கட்டைக் கடைக்காரனுக்கோ என் எதிரில் பணத்தைக் கொடுத்ததில்லை.

"என் கிட்டே, 'நான் ஒரு பட்டுப் புடவை வாங்கிக்கப் போறேன்' என்று சொன்னால் நான் என்ன வேண்டாம் என்று சொல்லப் போகிறேனா! ஏன் இந்தப் 'புனை சுருட்'டெல்லாம் பண்ணணும்! நீங்கள் இந்த விஷயத்தைப் பற்றிக் கட்டாயம் அண்ணாவைக் கேட்கத்தான் வேணும்."

ரங்கராஜனின் மனமும் சிந்தனையில் ஆழ்ந்தது. தன் மன்னியும் அண்ணாவும் இவ்வளவு நெஞ்சழுத்தக்காரர்களாக இருப்பார்கள் என்று அவன் துளிக்கூட நினைக்கவில்லை. ஆயினும் அண்ணாவிடம் இதையெல்லாம் பற்றிக் கேட்க அவன் விரும்பவில்லை. இன்னும் கொஞ்ச நாள் இருந்து விட்டு, பிறகு சிநேக பாவத்துடனேயே பிரிந்து தனிக்குடித்தனம் போய்விடுவதென்று முடிவு செய்துகொண்டது அவன் மனம்.

அன்று முதல் ஹேமாவதி கௌரியிடம் நடந்து கொண்டது ஒரு மாதிரியாக இருந்தது. ரங்கராஜனும் நாராயணனிடம் அவ்வளவு பிடிமானத்துடன் நடந்து கொள்ளவில்லை.

அன்று கார்த்திகை. விளக்கு வைக்க இன்னும் சிறிது நேரம் இருந்தது. கௌரி ஸ்வாமிக்குக் குத்து விளக்கை ஏற்றி வைத்து விட்டு, பூஜை அறையில் ஒரு பலகையைப் போட்டு அதன் மேல் அகல்களை யெல்லாம் எடுத்து வைத்து, எண்ணெய் ஊற்றித் திரிகளைப் போட்டாள். ரங்கராஜன் ஆபீஸில் இருந்து வந்துவிடவே, ஹேமாவதி அவனுக்குக் காப்பி கொடுக்கச் சென்றாள். அவன் கீழே வந்ததும் கௌரி, "ஹேமா! இங்கே வா!"

என்று கூப்பிட்டாள். ஹேமா பூஜை அறைக்குள் வந்ததும், கௌரி எழுந்து அலமாரியைத் திறந்து ஒரு தட்டை எடுத்தாள். அந்தத் தட்டில் வெற்றிலை பாக்கும், மாந்துளிர்ப் பட்டுப் புடவையும், புடவையின்மேல் ஒரு 'வாயில்' ஜாக்கெட்டும் அதன்மேல் ஒரு சிறு அட்டைப் பெட்டியும் இருந்தன.

ஒன்றும் புரியாமல் விழிக்கும் ஹேமாவைப் பார்த்து கௌரி, "இந்தா, இந்தப் பட்டுப் புடவையை உடுத்திக்கொள்..." என்று தட்டை அவளிடம் நீட்டினாள். தட்டை ஹேமா கையில் வாங்கியதும், கௌரி ஜாக்கெட்டின் மேல் இருந்த அட்டைப் பெட்டியை எடுத்து அதைத் திறந்தாள். அதில் ஒரு அழகிய மாங்காய் மாலை இருந்தது. அதையும் ஹேமாவிடம் கொடுத்துக் கொண்டே, "இதையும் போட்டுக்கொள். கல்யாணத்தின்போது உங்கள் வீட்டிலே முந்நூறு ரூபாய் எங்கள் செலவுக்கென்று கொடுத்தார்கள். அதற்கு அப்படியே நான் உனக்கு ஏதாவது நகை வாங்கிப் போடணும் என்று சொன்னேன். ஆனால் அது அப்போது சில்லறை சில்லறையாகச் செலவழிந்துவிட்டது......எனக்கு மாத்திரம் மனசிலே அது என்னமோமாதிரி உறுத்திக்கொண்டே இருந்தது. நீ குடித்தனம் செய்ய வந்த பிறகு சீக்கிரத்திலேயே உனக்கு ஒரு நகை பண்ணி விடணும் என்று தீர்மானித்துவிட்டேன். இந்த நாலு மாசமாக வீட்டுச் செலவைக் குறைத்து முந்நூறு ரூபாய் மிகுதியாக்கினேன். கார்த்திகையின் போது கொடுத்து விடலாம் என்று தீர்மானித்துப் பத்து நாளைக்கு முந்தி, நானும் அண்ணாவும் கடைக்குப் போய் இந்த மாங்காய்மாலையை வாங்கினோம். அதை வாங்கினதனாலே பட்டுப்புடவைக்குப் பணம் இல்லாமல் போய் விட்டது. நூல் புடவை வாங்கினேன். ஆனால் நூல் புடவை வாங்கின மறுநாள் எங்க அண்ணா எனக்கு நூற்றிருபத்தைந்து ரூபாய் அனுப்பினான். இத்தனை நாள் சாதாரணமாக வியாபாரம் ஆன அவன் கடையிலே இந்த வருஷம் ஏகப்பட்ட லாபம் கிடைச்சதாம். அந்தப் பணத்தைக் கொண்டு உனக்கு என்று இந்த மாந்துளிர்ப் பட்டுப் புடவையை வாங்கினேன்!" என்றாள்.

ஹேமா தட்டைக் கீழே வைத்து விட்டு மன்னியின் கைகளைப் பிடித்துக் கொண்டு, "மன்னி! நான் பெரிய பாவி! நீங்கள் அன்று பட்டுப் புடவையை வாங்கி பீரோவுக்குள் வைத்ததைப் பார்த்துவிட்டு நான் உங்களைப்பற்றி ரொம்பத் தவறாக நினைத்துக்கொண்டு விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்!" என்று கதறிக்குலுங்கினாள்.

"அட அசடே! நீ ஒரு தப்பும் செய்ய வில்லை. போய்ப் புடவையைக் கட்டிக் கொண்டு, நகையையும் போட்டுக் கொண்டு ஸ்வாமிக்கு நமஸ்காரம் பண்ணு" என்றாள் கௌரி. தன் கண்களைத் துடைத்துக் கொண்டு கையில் பட்டுப் புடவை, மாங்காய் மாலையுடன் செல்லும் ஹேமாவைப் பார்த்து ரங்கராஜன் பெருமூச்சு விட்டான். தாயாக இருந்து தன்னை வளர்த்த தன் மன்னியைப் பற்றித் தானும் தவறாக நினைத்து விட்டதற்காக அவன் மானசீகமாகக் கௌரியிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருந்தான்.

பொருட் காட்சியில் இந்திய வைத்தியம்

இந்திய மண்ணுக்கு வேறு எந்த நாட்டு மண்ணிலும் இல்லாத ஒரு சிறப்பியல்பு இருக்கிறது. இசை ஆகட்டும், இலக்கியம் ஆகட்டும், கலை ஆகட்டும் இந்தியாவுக்கு ஈடு இணை சொல்லி முடியாது. அதேபோல் வைத்திய சாஸ்திரத்திலும் இந்தியா தன் நிகர் அற்றுத்தான் விளங்கி வருகிறது. வேதகாலந் தொட்டு 'ஆயுர்வேதம்' என்னும் இந்திய வைத்திய சிகிச்சை முறை இங்கே கையாளப்பட்டு வருகிறது.

இந்திய வைத்தியம் என்று கூறும்போது சித்த வைத்தியமும் யுனானி வைத்தியமும் அதற்குள் அடங்கி யிருக்கின்றன. இந்திய வைத்திய முறைகளின் அடிப்படையில்தான் மற்ற வைத்திய முறைகள் வளர்ந்திருக்கின்றன என்று கூறினால் கூட மிகையாகாது.

இந்த நாட்டில் எந்த நோய்க்கும் மருந்துண்டு. வியாதியின் பயங்கரப் பெயரைக் கேட்டுப் பயந்து போய் வெளிநாட்டுக்குத் தரிகெட்டு ஓட வேண்டியதில்லை. இயற்கை அன்னை இந்திய மண்ணில் ஏராளமான அபூர்வ மூலிகைகளை வளர்த்திருக்கிறாள். நாம் மிக மிகத் துச்சமாக நினைக்கும் சிற்சில செடி கொடிகள் தீராத நோயையும் தீர்த்து வைக்கும் திறன் பெற்றிருக்கின்றன.

இதன் உண்மை தேனாம்பேட்டைக் காங்கிரஸ் மைதானத்தில் நடக்கும் கண்காட்சியில் சென்னை அரசாங்க வைத்தியக் கல்லூரியினர் சார்பாக வைத்திருக்கும் காட்சிப் பொருள்களிலிருந்து தெரிய வருகிறது.

இங்கே குடும்ப வைத்தியத்துக் கேற்ற சாதாரண மருந்து மூலிகைகளுடன், சிகிச்சை முறையில் விசேஷ ஆராய்ச்சி செய்பவர்களுக்கு உபயோகப்படக் கூடிய மருந்துகளும் மூலிகைகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. மூல மருந்துப் பொருள்களை எப்படி எப்படிப் பாடம் செய்து, சுத்தம் செய்து படிப்படியாக உபயோகிக்கும் மருந்துகளாக்குகிறார்கள் என்பதையும் தெளிவாக எடுத்துக் காட்டி யிருக்கிறார்கள்.


எந்த எந்த வியாதிகள் எந்த எந்த ரீதியில் எத்தனை சத விகிதம் குணப் படுத்தப் பட்டிருக்கின்றன என்பது போன்ற விவரங்களையும் எல்லோரும் புரிந்து கொள்ளும் வகையில் இங்கே வைத்துள்ள குறிப்புப் படங்கள் கூறுகின்றன. இவற்றின் மூலம் குஷ்டம், காசம் போன்ற நோய்கள் எவ்விதம் குணம் ஆகியிருக்கின்றன என்பதையும் அறிய முடிகிறது.

ஆங்கிலத்திலே 'ருமாடிஸம்' என்கிறார்களே, அது ஆயுர்வேதத்தில் ஆமவாதம், ரக்த வாதம் என்று இரு வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது என்பதையும், நாம் சர்வ சாதாரணமாக அறிந்திருக்கும் சிற்றரத்தை என்னும் மருந்துப் பொருள் ஆமவாதத்தை எவ்வளவு சதவிகிதம் ஆச்சரியகரமான முறையில் குணப்படுத்தி யிருக்கிறது என்பதையும் அனுபவ பூர்வமாக ஆராய்ச்சி செய்து வெளியிட்டிருக்கிறார்கள்.

இன்னும் ஆகாரத்தையும் ஆரோக்கியத்தையும் பற்றிக் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் டாக்டர் எம். வி. வெங்கடராகவனைப் போன்ற பேராசிரியர்கள் தகுந்த ஆலோசனை கூறி வருகிறார்கள்.

யுத்த காலத்தில் வெளி நாட்டு மருந்துகள் கிடைக்காத பொழுது இந்திய மருந்துகளும் மூலிகைகளும் மிகவும் பயன் பட்டன.

அரசாங்கத்தார் செய்யும் இந்தச் சேவைக்கு மக்களாகிய நாமும் ஆதரவு கொடுத்தால், நம் நாட்டு வைத்திய முறை நமக்கு நல்வாழ்வு அருளும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.


'விஸ்டம்' உபயோகித்து பற்களை பாதுகாருங்கள். நீடித்து உழைக்கும் டூத் ப்ரஷ்!
SAVE YOUR TEETH WITH 'WISDOM'- THE LONG-LASTING TOOTHBRUSH!
చిరకాలము మను టూత్ బ్రష్ 'విజ్ డమ్' తో మీ దంతములను కాపాడుకొనుడు.
எம்மொழியிலும் விஸ்டம் கேட்பது விவேகமாகும் — அது நீடித்து உழைக்கும், சரியான வடிவமுள்ள நைலன் டூத் ப்ரஷ்
In any language, it's wise to ask for WISDOM — the long-lasting, correct-shape nylon toothbrush.
ఏ భాషలోనైనా 'విజ్ డమ్' అని అడగటం వివేకమైనది. చిరకాలం మను సరైన ఆకారంగల ప్లాస్టిక్ పండ్ల కుంచె.
Wisdom REGD.
Wisdom
made with NYLON tufts
Wisdom



எஸ். வி. நாதன்

அன்று ஆபீஸ் விட்டதும் கடற்கரைக்குப் போய் விட்டான் ராமு. வீடு திரும்பும்போது நன்கு இருட்டி விட்டது. வாசற்படி ஏறியவன் உள்ளே நடைபெற்ற சம்பாஷணை காதில் விழவும் தயங்கி நின்றான், அதை முழுதும் கேட்கும் எண்ணத்துடன்.

"ஏண்டி, ரமா! ராமுவுக்கு என்னடி குறைச்சல்?" என்று அவன் அத்தை தன் பெண்ணைக் கேட்டாள்.

"எல்லாம் நிறைந்து இருக்கிறது!" என்றாள் அவளுடைய புதல்வி ரமா.

"பின்னே அவனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளமாட்டேன் என்று ஏன் மறுக்கிறாய்?"

"அம்மா! நீ பேசாமலிருக்க மாட்டாய்?"

"எதற்கடி இவ்வளவு ஆத்திரப்படுகிறாய்? அவன் உன்னைக் கல்யாணம் செய்து கொள்வதற்கு ஒற்றைக் காலால் நிற்கிறான்!"

"அம்மா! வீணாக என் வாயைப் பிடுங்கி வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளாதே! அந்த ராமு தலையால் வேண்டுமானாலும் நிற்கட்டும். அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. அவன் முகமும், அசட்டுத்தனமும்! இது விஷயமாய்ப் பேச்செடுத்தால் எனக்குக் கெட்ட கோபம் வரும்!"

"சும்மா விளையாட்டுக்குக் கேட்டால் அவனுடைய முகத்தையும், அசட்டுத்தனத்தையும் பற்றி வர்ணிக்க ஆரம்பித்துவிட்டாயே!" என்று கேட்டு விட்டு அத்தை நகைத்தாள் பெரிதாக. அதைத் தொடர்ந்தாற்போல ரமாவின் 'கலீ'ரென்ற சிரிப்பு எதிரொலித்தது.

வாசற்படியில் நின்ற ராமுவின் இதயமே நின்று விட்டதுபோலிருந்தது, மேற்படி சம்பாஷணையைக் கேட்டதும். அதன் முடிவில் எழுந்த சிரிப்பொலி அலை அலையாக வந்து ஆயிரமாயிரம் ஈட்டிகளை அவன் நெஞ்சில் செருகியது போலிருந்தது. கணநேரம் சிலைபோல் நின்ற அவன் வேதனையால் விம்மும் நெஞ்சுடன் உள்ளே நுழையாமலே மீண்டும் தெருவில் இறங்கிச் சென்றான்.

* * *

ராமு ஏழு வயதாக இருக்கும்போதே பெற்றோர்களைப் பறிகொடுத்து விட்டான். அவனுடைய அத்தை ருக்மிணி அவனைத் தன் வீட்டில் வைத்துக்கொண்டு ஆதரித்து வளர்த்தாள். அத்தைக்கு ரமா ஒரே புதல்வி. ஆண் குழந்தை இல்லாத ருக்மிணியும் அவள் கணவரும் ராமுவின் மீது அளவற்ற அன்பைச் சொரிந்து சொந்தப் புதல்வனைப்போல் நடத்தினார்கள். ரமாவும் அவன் மேல் தன் உயிரையே வைத்திருந்தாள்.

ராமு படிப்பை முடித்துவிட்டு அவ்வூரிலேயே ஓர் உத்தியோகத்திலமர்ந்தான். ரமா யுவதிப் பருவத்தை அடைந்து அப்ஸரஸ் போல் விளங்கினாள். ராமுவிடம் எப்போதும்போல் அன்பும் செலுத்தி வந்தாள். அந்தத் தேவ கன்னிகை தன்னுடையவளாகப் போகும் காலம் அதிக தூரத்திலில்லை என்று எண்ணி எண்ணி மகிழ்ந்தான் அவன். அவளுடைய பெற்றோர்களும் ரமாவை அவனுக்குக் கொடுப்பதில் சந்தோஷமே கொள்வார்கள் என்றும் அவன் எதிர்பார்த்தான்.

* * *

ராமு தெருவில் இறங்கிப் போனான். போய்க் கொண்டே இருந்தான், யாதொரு லக்ஷ்யமுமின்றி. அவனுள்ளத்திலே ஆத்திரம், அவமானம், வேதனை ஆகிய உணர்ச்சிகள் போட்டியிட்டுக் கொண்டு குமுறின. ரமா தன்னை நிராகரிப்பாள், கல்யாணம் செய்து கொள்ள மறுப்பாள் என்று அந்தக் கணம் வரை அவன் கனவிலேகூட எண்ணியதில்லை. ஆகவே, அவனுக்கு அது எதிர்பாராத பேரிடியாக இருந்தது. அதன் கொடூரத்தைத் தாங்க முடியாமல் நிலை குலைந்து போய் அவன் ஏதேதோ யோசித்தவாறே பித்தனைப்போல் தெருவோடு போய்க் கொண்டிருந்தான்.

'கடைசியில் ரமா இந்த அபிப்பிராயத்தையா கொண்டிருக்கிறாள்! என்னென்னவோ மனக்கோட்டை கட்டிக்கொண்டிருந்தோமே! இப்படியா தரைமட்ட மாகிவிட வேண்டும் எல்லாம்! ஊ...ம், தவறு நம்மீது தான். ரமா சிறு வயது முதல் நம்மோடு ஒன்றாக ஆடிப்பாடி விளையாடி வளர்ந்தவள். எனவே, நம்மீது அவளுக்கு ஒருவிதமான சகோதர பாசம் ஏற்பட்டிருக்கிறது. அந்தப்

பாசத்தை நாம் காதல் என்று தவறாக எடுத்துக் கொண்டு வீண் மனோராஜ்யம் செய்து கொண்டிருந்தோம். இருந்தாலும் அவளை இழந்துவிட மனசு வருமா?' — இப்படி ஒரு சிந்தனைத் தொடர்.

அடுத்தபடியாக அவன் மனத்தில ஆத்திரம் குமுறும். 'நம் முகத்தையும் அசட்டுத்தனத்தையும் குறிப்பிட்டு இகழ்ச்சியாகப் பேசினாளே அவள்! நம் முகத்துக்கு என்ன? நாம் அசடா? என்ன அசட்டுத்தனம் பண்ணியிருக்கிறோம் இதுவரை! இந்த ரமாவை ஏதோ கிடைத்தற்கரிய பொருள் என்று எண்ணி, அவளுடைய அற்ப குணத்தைத் தெரிந்து கொள்ளாமல் பெரிதாகக் கருதியிருந்தோமே! அது வேண்டுமானால் முதல் நம்பர் அசட்டுத்தனம்! அத்தைக்குக்கூட ரமாவை எனக்குக் கொடுக்கும் எண்ணமில்லை போலல்லவா இருக்கிறது? என்னை இழிவாகப் பேசிவிட்டுத் தாயும் மகளும் பெரிதாகச் சிரிக்கிறார்களே! இப்படிப்பட்ட மனிதர்களா இவர்கள்!.......அவர்களைப் பற்றிக் குறைவாக எண்ணுவது கூடாது. ஏனெனில் அநாதையான நம்மை ஆதரித்து முன்னுக்குக் கொண்டு வந்ததற்காகவாவது நாம் அவர்களுக்கு நன்றி பாராட்ட வேண்டாமா?' என்று சமாதானம் செய்து கொள்வான்.

அந்த வீட்டிற்குள் மீண்டும் அடிவைக்க அவனுக்கு இஷ்டமில்லை. தன் முகத்தைக் குறித்தும், அசட்டுத்தனத்தைப் பற்றியும் எள்ளி நகையாடுவதைக் காதால் கேட்டுவிட்ட பிறகு அந்த வீட்டில் நுழைய அவன் எப்படிச் சம்மதிப்பான்? அதுவும் தவிர ரமா தன்னுடையவள் இல்லை என்ற எண்ணத்தைச் சகித்துக் கொண்டு அவ் வீட்டிலிருக்க முடியாது என்று தோன்றியது. இன்னொருவன் அவள் கரம் பற்றுவதைப் பார்த்து உயிர் வாழ்வதுகூட அசாத்தியமாகப் பட்டது. எனவே பலவாறு யோசனை செய்த பிறகு அவ் வீட்டைத் துறந்து அவ்வூரையே துறந்து உத்தியோகத்தையும் துறந்து எங்காகிலும் கண்காணாத இடத்திற்குப் போய் விடுவதென்று தீர்மானித்தான். அன்று முதல் தேதியாகையால் ஆபீஸில் சம்பளம் வாங்கிய பணம் நூற்றுச் சொச்சம் ரூபாய் அவன் கையில் இருந்தது. எனவே துணிந்து அன்றிரவே ரயிலேறிச் சென்னைக்கு வந்தான். அங்கிருந்து ஆபீஸுக்கு ஒரு ராஜிநாமாக் கடிதம் எழுதிப் போட்டான். தனக்கு மனச் சாந்தி இல்லாததால் ஊரை விட்டுக் கிளம்பி விட்டதாகவும், தன்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாமென்றும், வீணாகத் தேட முயல வேண்டாமென்றும், தான் எங்கிருந்தாலும் அத்தை குடும்பத்தினரின் க்ஷேமத்துக்காகப் பிரார்த்தனை செய்வதுதான் தன் வேலையாயிருக்குமென்றும் வீட்டுக்கு ஓர் கடிதம் எழுதி விட்டுஅன்றே பம்பாய்க்குப்பிரயாணமானான்.

பம்பாயிலிருந்த அவன் நண்பன் ஒருவன் உதவியால் ஒரு மாதத்திற்குள்ளாகவே அவனுக்கு வேலை கிடைத்தது. அத்தை குடும்பத்தைப் பற்றி நினைக்காமலிருக்கப் பெரு முயற்சி எடுத்துக் கொண்டான்.

ஒரு நாள் மாலை செய்திப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்த ராமுவின் கண்களில் ஓர் விளம்பரம் தென்பட்டது. ஆச்சர்யத்துடனும் பரபரப்புடனும் அதன்மீது கண்களை ஓட்டினான். அவ்விளம்பரமாவது :

'ராமு! உனக்கு என்ன கோபம்? எதற்காகச் சொல்லாமல் மறைந்து விட்டாய்? நாங்கள் எவ்வளவு துயரப்படுவோம் என்பது உனக்குத் தெரியாதா? அத்தையும் நானும் பரிதவிக்கிறோம். உன் பிரிவினால் ரமா உருகுகிறாள். உடனே கிளம்பி வந்து விடு.

சேஷசாயி.'

அது தன்னைப் பற்றிய விளம்பரந்தான் என்பதைக் கண்டு கொண்ட ராமுவின் மனம் சற்றே இளகியது. அநாதையான தன்னைச் சொந்தக் குழந்தையைப் போல் பாராட்டிச் சீராட்டி வளர்த்த அத்தை, அத்தையின் கணவர், இவர்களுக்குத் தான் செய்யும் கைம்மாறு இது இல்லை, அவர்களை இப்படி வருந்தும்படி செய்யக் கூடாது என்று தோன்றியது. ஆயினும் உடனேயே அன்று அத்தைக்கும் ரமாவுக்கும் நடந்த சம்பாஷணை அவன் காதில் ரீங்காரம் செய்தது. ஆத்திரத்துடன் பல்லைக் கடித்தான்.

'ரமா உருகுகிறாளாம்! ஐயோ பாவம்! எதற்காக இந்தக் கரிசனம்! என்னுடைய முகத்



''அதாவது நான் என்ன கேட்கிறேன் என்றால், முதல் தேதி சம்பளம் வாங்கி எவ்வளவு ரூபாய், நீ வீட்டிற்குள் எடுத்துப் போகிறாய்?''

''வீட்டிற்குள் நான் காசணா எடுத்துப் போவதில்லை. வீட்டு வாசலிலேயே என் மனைவி வாங்கிக் கொண்டு விடுகிறாள்!''

னுக்கும், அசட்டுத்தனத்துக்கும் எதற்காக இவ்வளவு கருணை! உடனே கிளம்பி வந்துவிட வேண்டுமாம்! என்ன நேர்ந்தாலும் நேரட்டும்! நான் போகப் போவதில்லை' என்று தன் மனத்தைக் கல்லாக்கிக் கொண்டான்.

மேலும் பத்து தினங்கள் வரை அவ்விளம்பரம் முக்கியமான பத்திரிகைகளிலெல்லாம் வெளி வந்து கொண்டிருந்தது. அப்புறம் நின்று விட்டது. ராமு தன் முடிவை எள்ளளவும் மாற்றிக் கொள்ளவில்லை.

இரண்டு மாதங்கள் கழிந்தன. ராமு ஒரு நாள் மாலை காரியாலயத்திலிருந்து டிராமில் தான் வசிக்கும் இடத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்தான். திடீரென்று, 'ராமுவா? இங்கேயா இருக்கிறாய்?'' என்ற ஆச்சரிய பாவம் தொனித்த குரலில் யாரோ கேட்பதைப் பார்த்துத் திரும்பினான். ஊரில் அத்தை வீட்டுக்கு அடுத்த வீட்டுக்காரரின் குமாரனான குருசாமிதான்! அவன் பூனாவில் 'மிலிடரி அக்கௌண்ட்ஸ்' இலாகாவில் வேலையாக இருக்கிறான் என்பது ராமுவுக்குத் தெரியும்.



"மிஸ்டர், சந்தான கோபால கிருஷ்ணன்! கொஞ்சம் தனியாக வருகிறீர்களா? ஒரு ரகஸ்யம் சொல்ல வேண்டும்."

"நான் தனியாகத்தானே இருக்கிறேன். சொல்லுங்களேன்!"

"நீங்கள் தனியாக இல்லையே. மூன்று பேரோடு அல்லவா இருக்கிறீர்கள்?

"என்ன குருசாமி! எங்கே வந்தாய்?'' என்று அவனுடைய கேள்விக்குப் பதிலளிக்காமல் பேச்சை மாற்ற முயன்றான் ராமு.

குருசாமி விடுவதாயில்லை. "சும்மாதான் ஒரு நண்பனைப் பார்ப்பதற்காக வந்தேன். பூனாவிற்கு மாலை ரயிலில் போகப் போகிறேன். அதிருக்கட்டும்! ஒரு மாதத்துக்கு முந்திப் பதினைந்து நாள் லீவில் ஊருக்குப் போயிருந்தேன். உன் விஷயத்தைக் கேள்விப்பட்டேன். உன் வீட்டார் எல்லாரும் எவ்வளவு துயரப்படுகிறார்கள், தெரியுமா? எதற்காக இப்படித் திடீரென்று ஊரை விட்டு ஓடி வந்துவிட்டாய்?'' என்று கேட்டான்.

ராமுவின் முகத்தில் அசடு வழிந்தது. உண்மைக் காரணத்தை எப்படிக் கூறுவான் அவன்? எனவே 'ஒன்றுமில்லையப்பா! எனக்கு அவ்வூர் பிடிக்கவில்லை. பம்பாய் போன்ற பெரிய நகரத்தில் உத்தியோகம் பார்க்க வேண்டுமென்ற எண்ணம். இதை என் அத்தை முதலியவர்களிடத்தில் சொன்னால் ஆட்சேபிப்பார்கள். ஆகவே, சொல்லாமல் வந்து விட்டேன். நான் இங்கிருப்பது தெரிந்தால் நேரில் கிளம்பி வந்து அழைத்துக் கொண்டு போய்விடுவார்கள். ஆகவேதான் கடிதமும் போடவில்லை'' என்று தனக்கே திருப்தியளிக்காத சமாதானம் ஒன்றைப் புனைந்து கூறினான்.

"அபார யோசனை உன்னுடையது! அதற்கு இப்படியா திருடன் மாதிரி ஓடி வருவது? அங்கே எல்லாரும் புலம்புகிறார்கள்! உன் அத்தை பெண் ரமாவோ உன்னையே நினைத்து ஏங்குகிறாள்! 'ராமு போன இடந்தான் தெரியவில்லை! அவன் சமீபத்தில் திரும்பி வருவான் என்றும் தெரியவில்லை. வேறு எங்காகிலும் வரன் பார்க்கலாம்' என்று அவள் பெற்றோர்கள் கூறியதற்கு அவள் ஒப்புக்கொள்ளவில்லை. 'ராமுவுக்காக எவ்வளவு வருஷங்கள் வேண்டுமானாலும் காத்திருக்கத் தயார். வேறு வரன் வேண்டியதில்லை' என்று ஒரே பிடிவாதமாகக் கூறிவிட்டாளாம் அவள். நீ என்னடா வென்றால் அவர்களுடைய உணர்ச்சியையும் துயரத்தையும் பற்றிக் கவலையில்லாமல் குஷியாக இங்கே ஒளிந்து கொண்டிருக்கிறாய். உடனே கிளம்பி ஊருக்குப்போ!'' என்றான் குருசாமி.

குருசாமி கூறிய விஷயங்கள் உண்மையில் ராமுவை அதிர்ச்சியடையச் செய்து அவன் மனத்தைக் கலக்கிக் குழப்பமடையச் செய்து விட்டன. ரமா அவனுக்காக எவ்வளவு வருஷங்கள் வேண்டுமானாலும் காத்திருக்கத் தயாரா? இது உண்மைதானா? அல்லது அவன் கண்டது கனவா? உண்மையாயிருந்தால் அன்று அவள் தன் தாயாரிடத்தில் ராமுவைக் கல்யாணம் செய்து கொள்ள முடியாது என்று தெளிவான வார்த்தைகளில் மறுப்பானேன்? ஒருவேளை அவனை ஊருக்குத் திரும்பிப் போகச் செய்வதற்காகக் குருசாமி புனைந்து கூறிய கதையோ? இருக்காது. குருசாமி அப்படிப்பட்டவனல்ல!

பலவாறாக யோசித்த ராமு நேரிலேயே போய் உண்மையைத் தெரிந்து கொண்டு வருவது என்ற முடிவுக்கு வந்தான்.

ராமுவைக் கண்ட அத்தை ருக்மணி 'கோ' வென்று கதறி விட்டாள். அவள் கணவர் கண்களில் துளிர்த்த நீரைப் பிரயாசைப்பட்டுச் சமாளித்துக் கொண்டார். ரமா ஆனந்தக் கண்ணீர் பெருக்கியபடி விம்மினாள்.

ருக்மிணி, "ராமூ! எப்படியடா இப்படிச் செய்ய உனக்கு மனசு வந்தது? என்ன வருத்தம் உனக்கு?" என்று சற்றுப் பொறுத்துக் கேட்டாள். அவர்களது அன்பு அவனை உருக்கிக் கண்களில் நீர் கசியச் செய்து விட்டது. ராமூ சற்றுத் தயங்கினான். பிறகு தைரியத்தைத் திரட்டிக் கொண்டு, "அத்தை, மறைப்பானேன்? உண்மையைக் கூறிவிடுகிறேன். அன்று மாலை நான் ஆபீஸிலிருந்து வரும்போது நீயும் ராமாவும் உள்ளே பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டேன். 'ராமூவைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறாயா?' என்று நீ கேட்டதற்கு அவள் மறுத்தாள். அவற்றைப் பொறுக்க முடியாமல்தான் போய் விட்டேன்!" என்றான். அதைக் கேட்டதும் அத்தையும் ராமாவும் பெரிதாகச் சிரித்தார்கள்!

"அட, பைத்தியமே! கோடி விட்டுக் கோமணம் தன் பின்னே ராமூவுக்காக ராமாவைக் கேட்டான். ராமாவைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன் என்று ஒற்றைக் காலால் நிற்கிறான் என்று அவன் கூறினான். அவனுக்கோ படிப்பும் கிடையாது. ஒன்றும் கிடையாது. சும்மா விளையாட்டுக்காக ராமாவை 'அவனைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறாயா?' என்று கேட்டேன். அதைக் கேட்டு விட்டா ஊரை விட்டு ஓடினாய்? நல்ல சமர்த்து!" என்றாள் ருக்மிணி.

"ஒட்டுக் கேட்பது தப்பு என்று உணர்ந்து கொண்டேன், அத்தை! என் அவசர புத்திக்காக வருந்துகிறேன்" என்றான் ராமூ முகத்தில் அசடு வழிய.

"யாரையோ அசடு என்றதற்காக கோபித்துக் கொண்டு ஊரை விட்டு ஓடியது முதல் நம்பர் அசட்டுக்காரியமில்லையா?" என்று கேலியாகக் கூறினாள் ராமா.

ராமூ இப்போது, அதாவது ராமா தனக்கு அசட்டுப் பட்டம் கட்டியபோது கோபங் கொள்ள வில்லை. கோபித்துக் கொள்வதற்கு அவனுக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது? அவளைப் பார்த்து அர்த்த புஷ்டியுடன் ஒரு புன்னகைதான் புரிந்தான்.

பயம் தெளிந்தது!

சம்பந்தம் அன்று அவசர ஜோலியாகப் பரங்கிமலைக்குப் போக வேண்டியிருந்தது. உடனே காரைக் கொண்டு வரச் சொல்லிப் புறப்பட்டான்.

கார் மவுண்டு ரோடு வழியே சென்று கொண்டிருந்தது. கொஞ்ச தூரம் சென்றதும் தற்செயலாகப் பின்புறத்துக் கண்ணாடி வழியே திரும்பிப் பார்த்தான். அவன் காரை ஓட்டினாற்போல வேறு ஒரு காரும் வந்து கொண்டிருந்தது. அந்தக் காரை ஓட்டி வந்தவன் ஒரு போலீஸ்காரன்.

சம்பந்தம் எப்பொழுதுமே சற்றுப் பயந்தாங்கொள்ளிப் பேர்வழி. பின்னால் போலீஸ்காரனின் கார் தொடர்ந்து வரவே அவனுக்குப் பயமாகப் போய் விட்டது. ஏன்! குலை நடுக்கமே எடுத்து விட்டது என்றுகூடச் சொல்லலாம்.

ஆகவே, தன் டிரைவரைப் பார்த்துக் காரை இன்னும் வேகமாக விடச் சொன்னான். காரின் வேகம் அதிகரித்தது. சம்பந்தம் மிரண்ட விழியுடன் பின்னால் திரும்பிப் பார்த்தான். போலீஸ்காரனின் காரின் வேகமும் அதிகரித்திருந்தது. 'இது ஏதடா இது சனியன்!' என்று எண்ணிய சம்பந்தம் காரை இன்னும் கொஞ்சம் வேகமாக ஓட்டச் சொன்னான். அவன் காரின் வேகம் அதிகரிக்க அதிகரிக்கப் பின்னால் வந்த போலீஸ்காரனின் காரின் வேகமும் அதிகரித்தது.

சம்பந்தத்துக்கு, 'நாம் இன்று போலீஸ்காரனின் கையில் மாட்டிக் கொண்டே விட்டோம்!' என்று தோன்றியது. இருந்தாலும் கடைசி வரை தப்புவதற்கு வழி பார்க்க வேண்டாமா!


டிரைவருக்குக் காரை மெதுவாகவே ஓட்டுமாறு உத்தரவிட்டான், போலீஸ்காரனின் கார் மாறி முன்னால் போய் விடக் கூடாதா என்ற சபலத்தில்! திரும்பிப் பார்த்தால் அந்தக் காரும் வேகம் குறைந்து மெதுவாக வந்து கொண்டிருந்தது. சம்பந்தம் தன் காரின் வேகத்தை இன்னும் குறைக்கச் சொன்னான். பின்னால் வந்த காரின் வேகமும் அதற்கேற்றவாறு குறையவே, 'சரி, நம் ஜபம் சாயாது போலிருக்கிறது' என்று எண்ணிக் காரை மெதுவாகக் கொண்டு போய் ஓரிடத்தில் நிறுத்தச் சொன்னான். டிரைவர், 'தன் எஜமானருக்குப் பைத்தியம் கியித்தியம் பிடித்து விட்டதா!' என்ன என்றுகூட ஒரு கணம் யோசித்தான். இருந்தாலும் அவன் எஜமானரின் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து தானே ஆக வேண்டும்! ஆகவே அவன் எஜமானரின் உத்தரவைச் செயலாக்குவதில் முனைந்தான்.

சம்பந்தத்தின் கார் மெதுவாக ஓடி ஒரு ஓரப் புறமாக நின்றது. சம்பந்தம் திரும்பிப் பார்த்தான். போலீஸ் காரும் பின்னால் வந்து நின்றிருந்தது.

போலீஸ்காரன் தன் தலைக் குல்லாவைச் சரி செய்து கொண்டு கீழே இறங்கினான். அதைக் கண்ணுற்ற சம்பந்தத்துக்குச் சப்த நாடியும் ஒடுங்கி விட்டது.

சம்பந்தமும் உடல் வியர்க்க விறு விறுக்க மெதுவாக இறங்கியவாறே, போலீஸ்காரனைப் பார்த்து, "என்மேல் என்ன தவறு! எதற்காக என்னைப் பின் தொடர்ந்து வருகிறாய்!" என்று பயத்தினால் உதடுகள் துடி துடிக்கக் கேட்டான்.


"காரை நிறுத்தச் சொல்லி எவ்வளவோ நான் சமிக்ஞை செய்தும் நீங்கள் திரும்பிக்கூடப் பார்க்கவில்லையே! என் காரின் 'ஹாண்டில்' உங்கள் வண்டியின் பின் பக்கத்தில் மாட்டிக் கொண்டு விட்டது. நிறுத்தினால் அல்லவா நீங்கள்! உங்களால் அநாவசியமாக இவ்வளவு தூரம் வரும்படியாகி விட்டது!" என்றான் போலீஸ்காரன்.



போலீஸ்காரனின் பேச்சையும் வண்டியின் பின் புறத்தையும் பார்த்தபின் தான் சம்பந்தத்துக்குப் போன உயிர் திரும்பி வந்தது. —அஷய ஏ.


மார்புச்சளி
'பெப்ஸ் அருந்துங்கள்'
என்று டாக்டர்
சொல்லுகிறார்
இருமல், ஜலதோஷம்; தொண்டைப்புண், மார்புச்சளி, இன்புளுயன்ஸா மற்றும் தொண்டை, மார்பு சம்பந்தமான நோய்கள் அபாயகரமானவை. இந்நோய்களை எல்லாம் பெப்ஸ் மூலம் நிவர்த்தி செய்துகொள்ளுங்கள். பெப்ஸ் மூச்சு விடுவதை சுலபமாக்குகிறது. பெப்ஸிலிருக்கும் செழிப்பான மருந்துச் சத்துக்கள் மார்புக்குள்ளும் சுவாச கோசங்களிலும் ஊடுருவிச் செல்லுகிறது. அதனால் தான் பெப்ஸ் துரிதமாகவும் நிச்சயமாகவும் இருமலைத் தடுக்கிறது; புண்ணை குணப்படுத்துகிறது; ஆபத்து விளைவிக்கும் நோய்க்கிருமிகளைக் கொல்லுகிறது; சுவாச கோசத்திற்கும் தொண்டைக்கும் இதமளிக்கிறது. தொண்டை, மார்பு நோய்களுக்குகந்த நிதிக்கும் சுவையுள்ள மாத்திரைகளான பெப்ஸையே டாக்டர்கள் சிபார்சு செய்கிறார்கள்.
பெப்ஸ் நன்கு அருந்துங்கள்
PEPS
தொண்டை, மார்பு வலி நிவாரண மாத்திரைகள்.
மதராஸிற்கு ஸோல் ஏஜெண்டுகள்: தாதா & கம்பெனி, பார்க் டவுன்.


ஆரோக்கியமான
வெண்மையான
பற்களுக்கு
COLGATE
COLGATE
RIBBON DENTAL CREAM
ஒளிவீசும் புன்னகைகள் கோல்கேட் புன்னகைகள்



பரிசுக் கதை: டி. ஜே. ஓசுலிவான் (அயர்லாந்து) மொழிபெயர்ப்பு: வாஞ்சி

கடற்கரையிலே எண்ணூறு அடி உயரம் ஓங்கி வளர்ந்திருந்த குன்றின்மீது இடைவிடாமல் அலைகள் மோதிப் பேரொலியை உண்டாக்கிக்கொண்டிருந்தன. கருமையான அந்தப் பிரம்மாண்டமான குன்றின் பொந்து ஒன்றில் கிடந்த சுத்த வெண்மையான ஒரு சிறிய முட்டை பார்ப்பவர்களின் கவனத்தைக் கவர்வதாக இருந்தது. நாலு வாரங்களுக்கு முன் பெண் கடற் கிளி இட்ட அந்த முட்டை அப்போது உயிர் பெற்றெழும் தறுவாயில் இருந்தது!

முதலில் அந்த முட்டையிலே நீளமாக ஒரு வெடிப்பு உண்டாயிற்று. பிறகு குறுக்காக மற்றொரு வெடிப்பு ஏற்பட்டு, சிலுவையைப் போல் காட்சி அளித்தது. அதன் பின் மேலும் இரண்டு மூன்று வெடிப்புகள் தென்பட்டன. அப்போது உண்டான இடைவெளி வழியாக விசித்திரமான சிறிய மூக்கு தெரிந்தது. அந்த மூக்கு அப்படியும் இப்படியும் திருப்பி முட்டையைக் கொஞ்சம் கொஞ்சமாக நொறுக்கியது.

மேற்படி முட்டை முழுதும் நொறுங்குவதற்குச் சில மணி நேரம் ஆயிற்று! கடைசியாக அந்தச் சிறையைத் தகர்த்துக் கொண்டு ஒரு சிறிய கடற் கிளி வெளி யுலகத்துக்கு வந்து சேர்ந்தது!

அது வெகு நேரம் அந்த இடத்திலேயே அசைவற்று மயங்கிக் கிடந்தது. காலையில் சூரிய வெளிச்சம் அதன் மேல் பட்ட பிறகுதான் அதற்கு உயிர் வருவது போல் தோன்றியது. பிறகு அது 'முணுக் முணுக்' என்று மெல்லிய குரலில் தத்துக் கிளியைப் போல் கத்தத் தொடங்கியது. அதற்குப் பசி உண்டாகி விட்டது போலும்!

சிறிது நேரத்தில் தாய்க் கிளி விர் என்ற சப்தத்துடன் அந்தப் பொந்துக்கு மேலே வந்து உட்கார்ந்து கொண்டு தன் அருமைக் குழந்தையைப் பெருமிதத்துடன் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தது. அதன் மூக்கில் வரிசையாக ஆறு சிறிய மீன்கள் இருந்தன. ஒரு மீனைக் கொத்திய பின் அது கீழே விழாமல் மற்ற மீன்களை அது எப்படிக் கொத்திப் பிடித்ததோ தெரியவில்லை. அவ்வாறு ஒன்றன் பின் ஒன்றாக ஆறு மீன்களைக் கொத்திப் பிடிக்கும் இரகசியம் அந்தக் கடற் கிளிக்கும் அதைச் சிருஷ்டித்த கடவுளுக்கும் மாத்திரம்தான் தெரியும்!

தாய்க் கிளி தன் குழந்தையைச் சிறிது நேரம் அன்புடன் பார்த்துக் கொண்டிருந்தது. சாதாரணமாக விசித்திரமான மூக்கையுடைய கடற் கிளியின் மேற்புறம் கருமையாகவும், அடி வயிற்றுப்புறம் சுத்த வெண்மையாகவும் இருக்கும். ஆனால் மேற்படி கிளிக் குஞ்சுவின் உடல் முழுதும் வெண்மையாக இருந்ததே தாய்க் கிளியின் தயக்கத்துக்குக் காரணம்.

அது தன் குஞ்சுதானா, அல்லது வேறு ஏதாவது பட்சியின் குஞ்சா என்ற சந்தேகம் அதற்கு ஏற்பட்டு விட்டது போலும்! எனினும் கிளிக்குஞ்சு மிகவும் மெல்லிய குரலில் ஒரு விதமாகச் சப்தம் செய்யவே, தாய்க் கிளிக்கு இருந்த சந்தேகம் எல்லாம் பறந்தோடிவிட்டது போல் தோன்றியது. உடனே அது தன் மூக்கில் இருந்த மீன்களை மெல்



லாம் இரை வைத்து விட்டு 'கிரீச், கிரீச்' என்று கத்தித் தன் மகிழ்ச்சியையும் பெருமையையும் தெரிவித்துக் கொண்டது.

சிறிது நேரம் கழித்து ஆண் கடற்கிளியும் அந்த இடத்துக்கு வந்து சேர்ந்தது. அதுவும் மூக்கில் ஒரு பெரிய மீனைக் கொத்திக்கொண்டு வந்திருந்தது. குஞ்சைப் பார்த்தபோது ஆண் கிளிக்குப் பெண் கிளியைப் போல் அவ்வளவு உற்சாகமும் மகிழ்ச்சியும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

இவ்வாறாக, ஒன்றிரண்டு வாரங்கள் சென்றன. தாய்க் கிளி தன் குஞ்சுக்குத் தினந்தோறும் யாதொரு குறைவுமின்றி உணவு கொண்டு வந்து கொடுத்துக் கொண்டிருந்தது. இதற்குள் எந்தெந்த மீன்கள் எந்தெந்த வர்க்கத்தைச் சேர்ந்தவை, எவை அதிக ருசியானவை என்பதையெல்லாம் குஞ்சு தெரிந்து கொள்ளத் தொடங்கியது.

* * *

அது ஜூலை மாதம் ஆதலால் அக்னி நட்சத்திரம் ஆரம்பமாயிற்று. பிரதி வருஷமும் அந்த நாட்களில்தான் அந்தத் தீவைச் சேர்ந்தவர்கள் கடற் கிளிகளைப் பிடிக்கச் செல்வது வழக்கம்.

அவர்கள் கைக்கு அகப்பட்ட கிளிகளையெல்லாம் இரக்க மின்றிப் பிடித்து விடுவார்கள். குஞ்சுகள் உள்பட எல்லாவற்றையும் பிடித்து விடுவார்கள். மனிதர் எளிதில் செல்ல முடியாத இடத்தில் உள்ள ஒரு சில கடற் கிளிகளைத் தவிர வேறு எதுவும் அவர்களுடைய கையிலிருந்து தப்ப முடியாது. அவர்களுக்குக் கடற் கிளி மிகவும் ருசியான உணவாகும். அதைத் தவிர அதன் இறகுகளைத் தலையணைகளுக்கும் மெத்தைகளுக்கும் பஞ்சாக உபயோகித்துக் கொள்வதற்காக விற்று விடுவார்கள். அந்த இறகுகள் அவ்வளவு மிருதுவாக இருக்கும்.

ஒரு நாள் திடீரென்று கடற்கிளிகள் எல்லாம் திகில் கொண்டு கத்துவது மேற்படி வெள்ளைக் கிளிக் குஞ்சுக்குக் கேட்டது. உடனே அதுவும் பயந்து கத்தியது. தீவில் உள்ளவர்கள் கண்ணி வைத்துக் கடற்கிளிகளைப் பிடிக்கிறார்கள் என்பது அதற்குத் தெரியாது அல்லவா?

அதே சமயம் ஒரு மனிதனின் கை தன் பொந்துக்குள் வருவது அதற்குத் தெரிந்தது. மிகுந்த பீதியினால் கத்துவதற்குக் கூட அதனால் முடியவில்லை. அது பாறையுடன் ஒட்டிக் கொண்டதால், வந்த மனிதன் அதில் ஒன்றுமில்லை என்று திரும்பிச் செல்ல யத்தனித்தான். ஆனால் தன் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக அவன் பொந்தில் எட்டிப் பார்த்தபோது, மேற்படி கிளியின் வெண்மை நிறம் அதைக் காட்டிக் கொடுத்து விட்டது.

அவ்வளவுதான்! வந்த மனிதன் மீண்டும் அதற்குள் கையை விட்டு அதை வெளியே எடுத்து விட்டான். அப்போது அந்தக் கடற் கிளி கீச்சுக் கீச்சென்று கத்தியது. உடனே நெருப்புத் தணலைக் கையில் எடுத்தவனைப் போல், அவன் துடி துடித்துப் போய் அந்தக் கிளியை மறுபடியும் அந்தப் பொந்துக்குள்ளேயே விட்டு விட்டான்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த அவன் நண்பன் பெடிக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை. "மைக்கேல்! ஏன் அப்பா அதை மறுபடியும் பொந்துக்குள்ளேயே போட்டு விட்டாய்? அது உன் கையைக் கடித்து விட்டதா?" என்றான் பெடி ஏளனமாக.

"இல்லை. இது வெண்மை நிறமாக இருக்கிறது அல்லவா? வெள்ளைக் கடற் கிளி அபூர்வம் என்றாலும், அதைப் பிடிப்பவனுக்கு நிச்சயமாக ஏதாவது ஆபத்து நேரும். அதனால்தான் திகில் அடைந்து அதை விட்டுவிட்டேன்" என்று பதில் அளித்தான் மைக்கேல்.

"உனக்கு உண்டான திகில் வெறும் மனப் பிரமைதான். பேசாமல் அதை எடுத்துக் கொண்டு போய் மியூசியம் அதிகாரிகளிடம் கொடுத்தால் உனக்கு ஏதாவது தொகை கொடுப்பார்கள். அந்தத் தொகையை வைத்துக் கொண்டு நீ ஒரு வாரம் வரையில் நிம்மதியாகக் காலம் தள்ளலாம்" என்றான் பெடி.

மைக்கேலுக்குச் சிறிது சபலம் ஏற்பட்டது. இருந்தாலும் அவன் தன் ஆசையை அடக்கிக் கொண்டான். வெள்ளைக் கடற் கிளிகளைப் பிடித்தவர்களுக்கு ஏற்பட்ட ஆபத்தைக் குறித்து அவன் பல கதைகள் கேட்டது உண்டு. ஏன், ஒரே ஒரு தடவை அத்தகைய பயங்கர சம்பவத்தை மைக்கேலே தன் கண்ணால் பார்த்திருக்கிறான். அதைப் பற்றி மைக்கேல் தன் நண்பனை பெடியிடம் கூறத் தொடங்கினான்.

"முன்பு ஒரு தடவை ஜிம்மி இதே போன்ற ஒரு வெள்ளைக் கடற் கிளியைப் பிடித்துத்



தன் பையில் போட்டுக் கொண்டான். அதே சமயம் திடீரென்று ஒரு பருந்து பறந்து வந்து யாதொரு காரணமு மின்றி அவன் முகத்தைக் கொத்தியது. அதனால் ஜிம்மியின் கைப்பிடி குன்றிலிருந்து நழுவிவிட்டது. அவ்வளவு உயரத்திலிருந்து அவன் கீழே விழுந்து செத்துப் போனான். ஆகையால், இந்த வெள்ளைக் கிளி நமக்கு வேண்டவே வேண்டாம், அப்பா!'' என்றான் மைக்கேல்.

இதையெல்லாம் அப்பால் நின்று கேட்டுக் கொண்டிருந்த நீல், "உங்களுக்குப் பயமாக இருந்தால், அந்தக் கிளியை என்னிடம் கொடுத்து விடுங்கள் !'' என்றான்.

உடனே மைக்கேலுக்குப் பொல்லாத கோபம் வந்து விட்டது.

"நான்தான் முதலில் அதைப் பிடித்தேன். எனவே, இனி அதை ஒருவரும் தொடக் கூடாது! அதை இனி யார் தொட்டாலும், அது இருக்கும் இடத்தை முதலில் கண்டு பிடித்த எனக்குத்தான் ஆபத்து வரும்'' என்றான் மைக்கேல் கண்டிப்பாக.

அவன் இவ்விதம் கூறிய பின், மூவரும் அந்த இடத்தை விட்டுச் சென்று விட்டனர்.

வெள்ளைக் கடற்கிளி அன்று அவ்விதம் அதிர்ஷ்ட வசமாகத் தப்பியது.

சிறிது நேரம் கழித்துத் தாய்க் கிளி பறந்து வந்தது. கண்ணி வைத்தவர்களிடமிருந்து தப்பிய ஒரு சில கடற் கிளிகளில் அதுவும் ஒன்று. அந்தப் பொந்தில் தன் குழந்தை உயிருடன் இருப்பதைப் பார்த்ததும் அந்தக் கிளிக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. அது சிறிது நேரம் அங்கு மிங்கும் பறந்து ஓடித் தன் குதூகலத்தைத் தெரிவித்துக் கொண்டது!

* * *

சில நாட்கள் சென்றன. ஒரு நாள் தாய்க் கிளி வெகு நேரம் வரையில் திரும்பி வரவில்லை. குஞ்சுக் கிளிக்குப் பசி தாங்க முடியாததால், அது மெதுவாகப் பொந்துக்கு வெளியே வந்து, தாய்க் கிளியை எதிர்பார்த்துக் கொண்டு நின்றது. சிறிது தூரத்தில் தாய்க் கிளி மூக்கில் ஒரு மீனைக் கொத்திக் கொண்டு நின்றதைப் பார்த்ததும், குஞ்சுக் கிளி கத்தத் தொடங்கியது. தாய்க் கிளி இரக்கம் கொண்டு, பறந்து வந்து அந்த மீனைத் தன் குழந்தைக்குக் கொடுத்தது.

குஞ்சுக் கிளி தானாக இரை தேடும் 'வயதை' அடைந்து விட்டதால் தான் தாய்க் கிளி வழக்கம் போல் உற்ற காலத்தில் மீனைக் கொத்திக் கொண்டு உணவு கொடுக்க வரவில்லை.

மறு நாள் தாய்க் கிளி பொந்துக்கு வெளியே குஞ்சுக் கிளிக்குத் தெரியாமல் மறைவாக நின்று கொண்டிருந்தது. வெகு நேரம் தாய் வராததால் பசி தாங்க முடியாமல் குஞ்சுக் கிளி அன்றும் பொந்துக்கு வெளியே ஓரத்தில் வந்து நின்றது. உடனே தாய்க் கிளி சட்டென்று அதன் அருகில் வந்து அதை மூக்கினால் கீழே கடலில் தள்ளி விட்டது.

அவ்வளவுதான்! குஞ்சுக் கிளி திகிலுடன் கத்திக் கொண்டு நூற்றுக் கணக்கான அடி உயரத்தி லிருந்து உருண்டு உருண்டு தண்ணீரில் வந்து விழுந்தது. அதே சமயம் தாய்க் கிளியும் கீழே வந்து அதன் சிறகை மூக்கினால் மெதுவாகக் கவ்விய வண்ணம் குஞ்சுக் கிளிக்கு நீந்தக் கற்றுக் கொடுத்தது.

குஞ்சுக் கிளி, சிறிது நேரத்தில் பயம் தெளிந்து தத்தித் தத்தித் தானாக நீந்தத் தொடங்கியது! பிறகு அது தண்ணீரில் மூழ்கி விளையாடவும் ஆரம்பித்தது.

கடற் கிளிகள் கடலில் பல மைல்கள் தூரம் செல்லும் சக்தியுடையவை. அவை தண்ணீரின் மேல் ஊர்ந்து செல்லும், மூழ்கியும் செல்லும், பறந்தும் செல்லும். எனவே, கரையில்லாத அந்த அகண்ட சமுத்திரத்தில் மிகச் சிறியவையான அந்த இரு கிளிகளும் ஆனந்தமாகச் சென்ற காட்சி அற்புதமாக இருந்தது. சில மணி நேரத்தில் குஞ்சுக் கிளி தானாக மீனைக் கொத்தித் தின்னவும் கற்றுக் கொண்டு விட்டது.

சில நாட்களில் அவ்விரண்டு கிளிகளும் கரையிலிருந்து சுமார் நாற்பது மைல் தூரத்துக்கு அப்பால் சென்று விட்டன!

ஒரு நாள் இரு கிளிகளும் சிறிய மீன்களைக் கொத்திக் கொண்டும் நீந்திக் கொண்டும் இருக்கையில் தாய்க் கிளி, சிறிது தூரத்தில் கடல் தண்ணீரில் வட்டமாகத் தெரிந்த ஓரிடத்துக்கு அதிவேகமாகச் சென்றது. குஞ்சுக் கிளி மீன்களை மும்முரமாகப் பிடித்துக் கொண்டிருந்ததால் அது தாய்க் கிளியைப் பின் தொடரவில்லை.

அப்படி யிருக்கையில் திடீரென்று தாய்க் கிளி அலறியது. சில நிமிஷ நேரம் அது அந்த இடத்திலிருந்து நகர முடியாமல் தவித்தது. பிறகு தண்ணீருக்குள் மூழ்கி மறைந்து விட்டது. அவ்வழியாகச் சென்ற ஒரு கப்பலிலிருந்து கொட்டியிருந்த கனமான எண்ணெயில் மேற்படி கிளி சிக்கிக்கொண்டு விட்டதே அதன் மரணத்துக்குக் காரணம்.

தாயை இழந்த வெள்ளைக் கிளி சிறிது நேரம் ஒன்றும் தெரியாமல் தவித்தது. பிறகு அது தன்னந் தனியாகக் கரைக்குத் திரும்பி வர மூற்பட்டது.

சில மாதங்களில் வெள்ளைக் கிளி பெரிதாகி, கப்பலிலும் மோட்டார்ப் படகுகளிலும் செல்வோரின் கவனத்தை இழுக்கலாயிற்று. ஏனெனில் அவ்வளவு சுத்த வெண்மையான கடற் கிளியை அதற்கு முன் அந்தப் பிராந்தியத்தில் யாருமே பார்த்ததில்லை.

* *

அந்தப் பிரதேசத்தில் கடற்கிளிகளையும் மீன்களையும் பிடிப்பதில் கைதேர்ந்த மூவர் படகில் மீன் பிடிப்பதற்காகக் கடலில் நாலு ஐந்து மைல் தூரத்துக்கு அப்பால் சென்று கொண்டிருந்தனர். அப்போது திடீரென்று மூடு பனி வந்து சூழ்ந்து கொண்டது. அப்பிரதேசத்தில் சிற்சில சமயங்களில் பல நாட்கள் வரையில் கூட மூடுபனி கலையாமல் இருப்பது உண்டு. அந்த மூடுபனியில் சிக்கிக் கொண்ட படகுகளோ, கப்பல்களோ தெய்வாதீனமாகத்தான் கரை வந்து சேர முடியும். இல்லாவிடில் திக்குத் திசை தெரியாமல் பல நாட்கள் தவிக்கும்படி நேரும். அத்தகைய மூடுபனியினால் திசை தெரியாமல் படகுகளில் நடுக் கடல் சென்று மாண்டவர்களும் உண்டு. எனவே, மூடு பனி சூழ்ந்துகொண்டதும், அம் மூவரும் நடுங்கி விட்டார்கள்.

அவர்கள் கரையிருக்கும் திசையைக் கண்டு பிடித்து வர மூன்று நாட்கள் வரையில் எவ்வளவோ கஷ்டப்பட்டார்கள். கடைசியில் கரையைக் காணாமல் கைசோர்ந்தனர். அவர்கள் கையில் எடுத்துக்கொண்டு சென்ற உணவும் தீர்ந்து விட்டதால் அவர்களுடைய உடல்களும் சோர்ந்தன. கடைசியாக அவர்களுடைய மனமும் சோர்ந்து விட்டது.

அவர்களில் ஒருவன் அரை மயக்கத்துடன் படகிலேயே படுத்துக் கொண்டான். மற்ற இருவரும் கடலில் மிதந்து கொண்டிருந்த மரக்கட்டைகளைப் பிடித்துக் கொண்டு தங்களுடைய மரணத்தை எதிர் நோக்கிக் கொண்டிருந்தனர்.

அச் சமயத்தில் அந்தகாரத்தில் மின்னல் தோன்றுவது போல் அவர்களை உராய்ந்து கொண்டு ஒரு பட்சி சென்றது.

"அதோ வெள்ளைக் கடற்கிளி!" என்று மூச்சைப் பிடித்துக் கொண்டு கத்தினான் மைக்கேல். பெடி, நீல் இருவரும் ஏககாலத்தில் தலையைத் தூக்கி அந்தக் கிளியை ஆச்சரியத்துடன் பார்த்தனர்.

அதைக் கண்டதும் போன உயிர் திரும்பி வருவது போல இருந்தது மைக்கேலுக்கு.

"இந்தக் கிளி போகும் திசையில்தான் நமது ஊர் இருக்கிறது" என்றான் அவன்.

உடனே மைக்கேலுக்கு எங்கிருந்தோ புதிய பலமும் உற்சாகமும் உண்டாயின. அவனது நம்பிக்கை மற்றவர்களுக்கும் உற்சாகத்தை ஊட்டியது. இருவரும் மறுபடியும் படகில் ஏறிக் கொண்டு வெள்ளைக் கடற் கிளியைப் பின் தொடர்ந்து செல்லத் தொடங்கினர்.

சில மணி நேரத்தில் அவர்கள் கரைக்கு அருகில் வந்து விட்டார்கள்.

"இந்த வெள்ளைக் கிளியை அன்று நான் கொன்றிருந்தால் இன்று நம் கதி என்ன ஆகியிருக்கும்?" என்றான் மைக்கேல் உணர்ச்சி வசப்பட்டவனாய்.

"நிச்சயமாக மூழ்கி மாண்டிருப்போம்!" என்றனர் பெடியும் நீலும் ஏககாலத்தில்.

மூவரும் கண்ணீர் ததும்ப அந்த வெள்ளைக் கிளியையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

"அன்று என் உயிரை நீங்கள் காப்பாற்றினீர்கள். அதற்குப் பிரதியாக இன்று உங்கள் மூவருடைய உயிரையும் நான் காப்பாற்றி நன்றிக் கடன் செலுத்தி விட்டேன்" என்று அந்தக் கிளி சொல்லுவது போலத் தோன்றியது அந்த மூன்று நண்பர்களுக்கும்!



கணவன்:—இப்பொழுதே புத்தி கொண்டு ஒழுங்காய் நடந்தால்தான் பெரியவனாகப் போன பிறகு என் மாதிரி ஆகலாம்.

மனைவி:—நன்றாயிருக்கிறது. குழந்தையிடம் அப்படி எல்லாம் சொல்லிப் பயமுறுத்தாதீர்கள்!


இந்த
விதம்
துவைப்
பாய்
SWASTIK
777
Superfine
SOAP

சிரிக்கும் காந்தி

எம். எல். எஸ்.

சரித்திரத்தில் புகழ்பெற்ற பல மகாத்மாக்களும் ஞானிகளும் சிரித்துத் தமாஷாகப் பேசியதாக நாம் கேள்விப்பட்டது அபூர்வம். பொதுவாக, சிரிப்புக்கும் அவர்களுக்கும் வெகு தூரமாகவே இருக்கும். ஆனால் காந்தி இதற்கு ஒரு விதிவிலக்காக விளங்கினார். அவரிடம் நகைச் சுவை அதிகமாயிருந்தது. அவருடைய சிறப்பியல்புகளில் அதுவும் ஒன்று என்று கூடச் சொல்லலாம். அவ்வப்போது ஏதாவது ஒரு தமாஷைக் கூறி, சுற்றிலுமிருப்பவர்களைச் சிரிக்க வைத்துக் கொண்டேயிருப்பார். எவ்வளவு நெருக்கடியான சமயத்திலும் நகைச் சுவையைக் கை விட்டதேயில்லை. வாழ்க்கையில் சிரிப்புக்கு அதிக இடம் கொடுக்க வேண்டுமென்பது அவர் கருத்து. ஒரு முறை அவர் தம்மைப் பற்றிக் குறிப்பிடும்போது, "என்னிடம் ஹாஸ்ய உணர்ச்சி இல்லையானால், நான் எப்போதோ தற்கொலை செய்து கொண்டிருப்பேன்" என்று கூடச் சொல்லியிருக்கிறார்.

காந்தியின் நகைச் சுவைக்கு உதாரணமாகச் சில சம்பவங்களைத் தொகுத்துக் கீழே கொடுத்திருக்கிறேன்.

1

1942-ம் ஆண்டு காந்தி மகாத்மா இந்தியாவின் இறுதி சுதந்திரப் போராட்டத்தை நடத்திய போது, பிரிட்டிஷ் அரசாங்கம் அவரையும் மற்றும் பல காங்கிரஸ் தலைவர்களையும் கைது செய்து ஆகாகான் மாளிகையில் சிறை வைத்தது. அங்கு அவர்களுக்குப் பொழுது போவதே கஷ்டமாயிருந்தது. ஒரு நாள் ஸ்ரீமதி சரோஜினி தேவி மகாத்மாஜியிடம் சென்று, "பாட்மின்டன் பந்து விளையாடலாம், வருகிறீர்களா?" என்று அழைத்தார். காந்தி மிக்க மகிழ்ச்சியுடன், "ஓ, அதற்கென்ன? விளையாடுவோம்" என்றார்.

"உங்களுக்கு அது விளையாடத் தெரியுமோ?" என்று சந்தேகத்துடன் கேட்டார் ஸ்ரீமதி சரோஜினி.

"இதுவரை நான் பாட்மின்டன் மட்டையைத் தொட்டதேயில்லை. ஆனாலும், விளையாடத் தொடங்கினால், உங்களை நிச்சயமாக ஜயித்து விடுவேன்" என்றார் காந்தி.

"அப்படியா? எங்கே பார்ப்போம்!" என்றார் ஸ்ரீமதி சரோஜினி.

சிறையதிகாரிகள் பந்து, வலை முதலியவற்றைக் கொடுத்து, மேற்படி ஆட்டத்துக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் செய்து கொடுத்தார்கள்.

காந்தியும் சரோஜினியும் மட்டைகளைக் கையில் எடுத்துக் கொண்டார்கள். ஸ்ரீமதி சரோஜினி தேவிக்கு வலது கை சுளுக்கிக் கொண்டிருந்தது. ஆகையால், அவர் மட்டையை இடது கையில் பிடித்துக் கொண்டிருந்தார். காந்தியும் அப்படியே இடது கையில் மட்டையைப் பிடித்தார். ஸ்ரீமதி சரோஜினி அதைப் பார்த்துச் சிரித்துவிட்டு, "மட்டையை எந்தக் கையில் பிடிப்பதென்பதுகூட உங்களுக்குத் தெரியவில்லையே, நீங்கள் எப்படி என்னை ஜயிக்கப் போகிறீர்கள்?" என்று கேலி செய்தார்.

காந்தி சற்று நேரம் யோசித்து விட்டு, "ஏன், நீங்களும் அதை இடது கையில் தானே பிடித்திருக்கிறீர்கள்?" என்றார்.

"ஆம், என் வலது கை சுளுக்கியிருக்கிறது. அதனால்தான் இடது கையில் மட்டையைப் பிடித்திருக்கிறேன்" என்றார் ஸ்ரீமதி சரோஜினி.

காந்திக்கு மிக்க வெட்கம் உண்டாகி விட்டது. ஆனாலும் அதை அவர் வெளியே காட்டிக் கொள்ளாமல், மீண்டும் இடது கையிலேயே மட்டையைப் பிடித்துக் கொண்டு ஆடினார்.

"இன்னமும் உங்கள் பிசகைத் திருத்திக் கொள்ளவில்லையே, ஏன்?" என்று கேட்டார் ஸ்ரீமதி சரோஜினி.

"முன்பு அது பிசகாயிருக்கலாம், இப்போது அது பிசகு அல்ல. நீங்கள் இடது கையில் மட்டையைப் பிடித்துக் கொண்டு சிரமத்துடன் ஆடும்போது, நான் மாத்திரம் அதை வலது கையில் பிடித்துக் கொண்டு ஆடினால், அது ஆண்மையாகுமா? ஜயித்தாலும் அது ஒரு வெற்றியாகுமா? ஒரு பெண்மணியின் அசௌகரியத்தை எனக்குச் சாதக



கான்ஸ்டேபிளின் மனைவி (தூங்கும் தன் கணவனை எழுப்பி):—பக்கத்து அறையில் திருடன்! பிடியுங்கள்!

கான்ஸ்டேபிள்:—என்ன, திருடனா? நான் இப்பொழுது அவனை எப்படிப் பிடிப்பேன்? நான் தான் 'ஸ்டிரைக்' செய்திருக்கிறேனே!

மாய்ப் பயன்படுத்திக் கொள்ள நான் சிறிதும் விரும்பவில்லை. தெரிந்ததா?'' என்று சிரித்துக் கொண்டே கூறினார் காந்தி.

2

எடுத்ததற்கெல்லாம் மருந்துகளையும் மாத்திரைகளையும் விழுங்கும் வழக்கம் காந்திஜிக்குப் பிடிக்காது. ஊசி போடுவதையும் அவர் வெறுப்பார். இயற்கை வைத்தியத்தில் தான் அவருக்கு நம்பிக்கை அதிகம்.

ஒரு முறை சிறையில் இருந்தபோது அவருக்குக் கடுமையான சளி பிடித்துக் கொண்டது. சிறை டாக்டர் அவர் உடல் நிலையைப் பரிசோதித்துவிட்டு, ''ஒரு பெனிஸிலின் ஊசி போட்டுக் கொண்டீர்களானால், மூன்றே நாளில் சளி ஓடிப் போகும்; இல்லாவிடில், குணமாவதற்கு மூன்று வாரங்களாவது ஆகும்'' என்றார்.

''ஊசி என்னத்துக்கு? மெதுவாய்க் குணமாகட்டும். எனக்கு ஒரு அவசரமும் இல்லை'' என்றார் காந்தி.

''உங்களுக்கு அவசரமில்லாதிருக்கலாம். ஆனால், உங்கள் சளி மற்றவர்களுக்குப் பரவலாம் அல்லவா?'' என்றார் டாக்டர்.

''அப்படியானால் அவர்களுக்குப் பெனிஸிலின் ஊசி போடுங்கள்!'' என்றார் காந்தி.

3

இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டுக்காக காந்தி லண்டனுக்குச் சென்றிருந்த போது, பிரிட்டிஷ் மன்னர் ஐந்தாம் ஜார்ஜ் அவரை ஒரு தேநீர் விருந்துக்கு அழைத்தார். இந்தச் செய்தி பத்திரிகைகளில் வெளியானதும் லண்டன் முழுவதும் அதைப் பற்றியே பேச்சாயிருந்தது. எதற்காக? காந்தி அந்த விருந்துக்கு எப்போதும் போல, வெறும் வேட்டி மாத்திரம் அணிந்து கொண்டு போவாரா, அல்லது வேறு உடை அணிந்து கொண்டு போவாரா என்பதற்காகத்தான்.



''இந்தப் பொங்கலுக்கு எனக்கு 300 ரூபாயில் ஒரு புடவை வாங்கித்தாங்கோ, வருஷத்திலே ஒரு நாள்தானே?''

''வாங்கித்தரலாம். உனக்கு வருஷத்தில் ஒரு நாளைப் பார்த்து வாங்கிக் கொடுத்து விட்டுப் பாக்கி 364 நாளும் அதற்குப் பணம் எப்படிக் கொடுப்பது என்று நான் அல்லவா யோசிக்கும்படியாக இருக்கும்!

குறிப்பிட்ட நாளில் விருந்து நடந்தது. காந்தியும் அதற்குப் போய் வந்தார்.

மறுநாள் ஒரு பத்திரிகை நிருபர் அவரைப் பார்த்து, ''தாங்கள் நேற்று நடந்த விருந்துக்கு என்ன உடை தரித்துச் சென்றிருந்தீர்கள்?'' என்று கேட்டார்.


''ஏன்?—எப்போதும் அணியும் உடைதான் உடுத்திக் கொண்டு போயிருந்தேன்.''

''வெறும் வேட்டி மாத்திரமா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டார் நிருபர்.

''ஆம், அது போதாதா?—எனக்கும் சேர்த்துத்தான் அரசர் வேண்டிய உடைகள் அணிந்திருந்தாரே!'' என்றார் காந்தி தம் பொக்கை வாயைத் திறந்து கொண்டு.

4

காந்தி சபர்மதி ஆசிரமத்தில் வாழ்ந்து வந்த காலம். அப்போது அங்கே பல குழந்தைகளும் இருந்தார்கள். அவர்கள் ஒவ்வொரு வாரமும் காந்தியைச் சில கேள்விகள் கேட்பதுண்டு. அவற்றிற்குக் காந்தி சிரமத்தைப் பொருட்படுத்தாமல் பதில் சொல்லி வந்தார். ஆனால், பதில் மிகச் சுருக்கமாக – வெகு வெகு சுருக்கமாக—இருக்கும். சில சமயம் 'ஆம்' 'இல்லை' யென்ற அளவிலேயே விடையை முடித்து விடுவார். இது அந்தக் குழந்தைகளுக்குப் பிடிக்கவில்லை. ஒருநாள் காந்தி அவ்விதம் பதில் சொல்லிக் கொண்டிருந்த போது, ஒரு பையன் தைரியமாக முன் சென்று, ''பாபுஜி, தாங்கள் அடிக்கடி கீதையைப் பற்றி எங்களுக்குச் சொல்லி வருகிறீர்கள். அதில் அர்ஜுனன் சுருக்கமாக—ஒரு வரியில் அடங்கக்கூடிய விதமாக—ஒரு கேள்வி கேட்கிறான். அதற்குக் கிருஷ்ண பரமாத்மா அளிக்கும் பதில் ஓர் அத்தியாயத்துக்கு வந்து விடுகிறது. ஆனால், தாங்களோ, அதற்கு முற்றிலும் மாறாக இருக்கிறீர்கள். ஒரு பக்கத்துக் கேள்விக்குக் கூட ஒரு வரியிலேயே பதில் சொல்லி விடுகிறீர்கள். இது நியாயமா?'' என்றான். காந்தி சிரித்துவிட்டு, ''நீ சொல்லுவது ஒரு வகையில் உண்மைதான். ஆனால் அதற்கு நான் என்ன செய்வது? கிருஷ்ண பகவானுக்கு ஒரே ஓர் அர்ஜுனன்தான் இருந்தான். எனக்கோ, அறுபது—எழுபது அர்ஜுனர்கள் இருக்கிறார்களே! ஒவ்வொருவருக்கும் நீண்ட பதில் சொல்லுவதென்றால் என்னால் முடியுமா?'' என்றார். இதைக் கேட்டு எல்லாக் குழந்தைகளுமே சிரித்து விட்டார்கள்.



பருவங்களுடனும் பகல் - இரவின் குறிப்பிட்ட காழிகைகளுடனும் இசைந்து வருவது இந்திய ராகங்களின் தனிச் சிறப்பு. ஒவ்வொரு ராகமும் அந்தந்த வேளையின் ரஸம் அல்லது பாவத்தை வெளியிடும் சாதனமாகும்.

தினசரி இரவிலும் பகலிலும் அந்தந்த காழிகைக்கு ஏற்ப ராகங்கள் உருவகப்படுத்தப்படுகின்றன. அகாலத்தில் பாடும் ராகங்களுக்கு ஜீவன் போய்விடுமாம்.

தேனீர்

இரவு பகல் எந்த வேளையிலும், எந்த சீஸனிலும் தேனீர் உற்சாகம் அளிக்கிறது.

பைரவி

காலை வேளைக்குரிய பைரவிராகத்தின் உருவகப்படத்தை மேலே காணலாம். இது கணவனை சிவனைச் சேருவதற்கு ஏங்கி, சோர்வடைந்த பார்வதியினுடையது. சேர்க்கை நிச்சயமென்று தெரியுமாதலால் மிக அடக்கமும் சாந்தமுமான மனோபாவத்தைக் காண்பிக்கிறது.

அழகன் என்னும் உழவன்

ஆர்னா ஸா. குஞ்சிதபாதம்

மார்கழி மறைந்தது; தை பிறந்தது. உழவர் தம் கடும் உழைப்புக் கைமேல் பலனளிக்கும் நாட்களை உவகையுடன் எதிர் நோக்கி யிருந்தனர். கழனிகளில் கதிர்கள் முதிர முதிரப் பயிர்கள் பொன்னிறமாக ஆரம்பித்திருந்தன. மந்தமான காற்றிலே அவை சல சலக்க அலைகள்மேல் அலைகளாகப் பாய்ந்து கொண்டிருந்தன.

பச்சைமா மலைபோலக் குளத்தின் தென் கரையிலே வளர்ந்தோங்கி யிருந்த தாழைப் புதரிலிருந்த உதிர்ந்து காய்ந்து கிடந்த ஓலைச் சருகுகளைச் சேகரித்துக் குவியலாக்கிக் கொளுத்தினான் அழகன். நாரையின் அலகு போன்ற பனங்கிழங்குகளை ஒவ்வொன்றாக அனலிலே வாட்டிக் கவைத்துத் தின்று கொண்டிருந்தான் அவன்.

"என்னடா பச்சைப் பிள்ளை மாதிரி பனங்கிழங்கு சுட்டுத் தின்கிறே! வீட்டிலே சோறு கூறு சாப்பிட வில்லையா!" என்ற வார்த்தைகளைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான் அவன். பின்னாலே நின்று கொண்டிருந்தான் மாரி. என்னவோ செய்யத் தகாத காரியம் செய்து விட்டது போல வெட்கி கைகளைப் பிசைந்து கொண்டு எழுந்து நின்றான் அழகன்.

மாரி வேக வைத்த கிழங்கு ஒன்றை யெடுத்துக் கடித்துக் கொண்டு, "சம்பங்கி வாங்கிக் கொண்டு போறானோ!" என்று கேலியாகக் கேட்டான்.

"ஆமாம், சாலையிலே வரும் போது பார்த்தேன். 'கண்ணும்பு கொடு அத்தான்' என்று கேட்டாள். கொடுத்து விட்டு 'கூடையிலே என்ன, பசளை மடத்திலே ஏன் அப்படிச் சண்டை!' என்றேன். கிழங்கு என்று ஒரு கட்டுக் கொடுத்தாள்," என்று சொன்னான் அழகன்.



மாரி கண்களைச் சிமிட்டினான். "அது கிடக்கு விடு. ஊரிலே எல்லாருக்கும் ஒரு வழியானால் உனக்கு மாத்திரம் தனி வழி. நேற்று இராவிலே போடலே! சரிபாதி வாரம் கொடுத்தாத்தான் இந்த வருஷம் அறுவடைக்கு வயலிலே இறங்கலாம் என்று தீர்மானித்தது தீர்மானித்ததுதான். ஊர் போன வழியிலே ஒக்குமத்தாத்தானே நாமும் போவணும்!" என்றான் மாரி.

"உங்கள் காரியத்தை நீங்க பார்த்துக்குங்க. நான் எப்பவும் போல சாகுபடி செய்து கொள்கிறேன்" என்றான் அழகன்.

"தெரியும் எல்லாம்! உன் கல்யாணத்துக்குக் கடன் வாங்குவதற்கு மிராசுதாரைக் காக்கா பிடிக்கிறே, அதுதானே!" என்று சொல்லி விட்டு, மீதியைத் தூர எறிந்து வீட்டுப் போனான் மாரி.

அழகன் இலுப்பைத் தோப்பிலே மேய்ந்து கொண்டிருந்த கிடைப் பசுவை ஓட்டி வந்து குளத்திலே தேய்த்துக் குளிப்பாட்டி விட்டான். பசு தெருவை நோக்கி நடந்தது. அழகனும் அதனுடன் போனான். வெளியிலே சென்றிருந்த பறவைகள் இலுப்பைப் பொந்துகளுக்குத் திரும்பி வந்து கத்திக் கொண்டிருந்தன. வானத்தில் வர்ண ஜாலங்கள் இயற்றிக் கொண்டிருந்த சந்திரவன் மறையும் தருணம் வந்து விட்டது. கூரைகளிலிருந்து புகை யெழுந்து கொண்டிருந்தது. திரௌபதையம்மன் கோயிலுக்கு முன்னுள்ள மைதானத்தில் மக்கள் திரளாகக் கூடி யிருப்பதைக் கண்டான் அவன். வாட்ட சாட்டமாக வளர்ந்திருந்த ஒருவர் கம்பீரமாகச் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார். அவன் வேடிக்கை பார்க்கக்கூட நிற்கவில்லை. அவர் என்ன பிரசங்கம் செய்கிறார் என்பது அவனுக்குத் தெரியும்.

2

திருமுல்லைப்பாடி, காவேரியின் ஒரு கிளையான முல்லையாற்றின் கரையிலே அமைந்த அழகான கிராமம். ஆயிரம் ஏக்கர் நன்செயும் புன்செயும் அங்கு உண்டு. மாந்தோப்புகளும் தென்னந் தோப்புகளும், ஆற்றுப் படுகையிலே வாழை தோட்டங்களும் நிரம்பிக் கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருக்கும். அந்தக் கிராமத்தில் ஒரு முக்கியஸ்தர் ஸ்ரீ புன்னைவனநாத முதலியார் தான்.

புன்னைவனநாத முதலியாருக்கு முந்நூறு ஏக்கர் நிலம் உண்டு. சிவ பக்தியில் ஈடுபாடு உள்ளவர். கோயில் திருப்பணிக்கும், பள்ளிக்கூடத்துக்கும், குளம் வெட்டுவதற்கும் தாராளமாக உதவி புரிந்தவர். ஆடம்பரம், அகம்பாவம் முதலிய குணங்கள் அவரைத் தீண்டவில்லை. வயது அறுபதுக்கு மேல் ஆனவர். தங்கக் கவசம் போட்டிருந்த சிறு சிறு ருத்திராக்ஷங்களின் மாலையொன்று அவர் மேனியில் இலங்கும். சிவந்து பழுத்த அவருடைய உடல் இன்னும் தளர்ச்சியடையவில்லை. தொந்தி மட்டும் சற்று முன் வந்திருக்கும். வெள்ளை வெளேரென்ற துணியைக் கச்சம் வைத்துக் கட்டிக் கொண்டிருப்பார். இடுப்பில் ஒரு புறம் வெள்ளிப் பொடி டப்பி செருகப்பட்டும், இன்னொருபுறம் கட்டம் போட்ட சிவப்புஉருமாலைக் கைக்குட்டை தொங்கிக் கொண்டு மிருக்கும். வழுக்கை ஒதுக்கிக் கொண்டு போய்த் தலைக் கோடியில் தள்ளி யிருக்கும் வெள்ளித் தலைமயிரைச் சிறிய அளவில் முடிந்து கொண்டிருப்பார். கச்சிதமாகத் தங்க வரம்பிட்ட மூக்குக் கண்ணாடியும் அவர் முகத்தை அலங்கரிக்கும்.

புன்னைவனநாதருக்கு இரண்டு பையன்கள். பெரிய பிள்ளை கோயமுத்தூரில் ஒரு பாங்கியின் ஏஜண்டாக இருக்கிறார். இன்னொரு பையன் கிராமத்திலேயே இருந்து கொண்டு நிலபுலன்களைக் கவனிக்கிறான். ஒரே ஒரு பெண்; அகிலாண்டேசுவரி என்று பெயர்; மருமகப்பிள்ளை தில்லை முன்சீப். மிகவும் அமைதியான பண்பாடுள்ள நல்ல குடும்பம் முதலியாருடையது.

இருபது வருஷங்களுக்கு முன்பு முதலியாருடைய செல்வ நிலை இப்போழுது உள்ளது போல இல்லை.

அப்போது லட்ச ரூபாய் வரையில் கடன் இருந்தது. நிலமும் கூட இருந்தது; ஏழு நூறு ஏக்கர் வரையிலும். ஆனாலும் வருமானத்துக்கும் செலவுக்கும் ஒத்து வரவில்லை. கலம் ஒரு ரூபாய் ஒன்றரை ரூபாய் வீதம் நெல் விற்ற போது எவ்வளவு விளைச்சல் இருந்தாலும் கடனுக்கு வட்டி கொடுத்தது போக மிகுந்தது வருஷாந்தரச் செலவுக்குப் போதவில்லை. வரவு செலவு ஆகிய இரு முனைகளையும் கூடச் செய்யவே முடியவில்லை. அக்காலத்தில் பர்மா நெல் இந்தியாவிலே வந்து போட்டி போட்டுக் கொண்டிருந்தது. பர்மாவிலிருந்து வரும் நெல்லுக்கு வரி விதிக்க வேண்டும் என்று பத்திரிகைகளுக்கு எழுதினார் முதலியார். தஞ்சை ஜில்லா பிராகுதார் துயரம்பற்றி எத்தனை எத்தனையோ கடிதங்கள் அவர் எழுதியவை தினப் பத்திரிகைகளில் பிரசுரம் ஆகியிருந்தன.

கடையில் சலித்துப்போய், கடன்காரர்களிடம் முகவாயைப் பிடித்துக் கெஞ்சாத விதமாக நிலங்களில் சரி பாதியைச் சாசனம் செய்தார் அவர். சென்னை அரசாங்கக் கல்லூரியில் அப்போது படித்துக் கொண்டிருந்த தம் மூத்த மகன் ஜயராமனுக்கு மாதா மாதம் கடிதம் வந்தவுடன் பணம் அனுப்புவதற்கு முடியாதபடி நிலைமை இருந்தது. பெரிய மாடி வீடுதான், பெரியதனக்காரர் என்றுதான் எல்லோரும் நினைத்துக் கொண்டிருப்பார்கள். புரையோடிய பூவரச மரம் அவர் நிலைமை என்பது எல்லாருக்குமா தெரியும்!

விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் கூட அவரைக் கைதூக்கி விடவில்லை. அப்போதும் கடன் உபத்திரவம் நீங்கியபாடு இல்லை. மளிகைக் கடைக்காரனோ, ஜவுளிக் கடைக்காரனோ ஆள் அனுப்பினால் மானம் போய் விடுமே என்று பயந்து கொண்டேயிருந்தார் அவர். மூன் பணமாகக் கொடுத்தே தான் எதையும் வாங்குவது அவர் வழக்கம். எவ்வளவோ செலவுகள் செய்வார். பரம்பரையாகப் பெரிய தோரணையிலேயே நடைபெறும் குடும்பத்திலே சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது எளிதான காரியமாக இல்லைதான். அகிலாண்டேசுவரியின் கல்யாணத்தைக் கூடச் சுமாரான ரீதியிலேயே செய்து முடித்தார். படித்து முன்னுக்கு வரக் கூடிய பிள்ளை என்று அவர் ஊகித்ததும் வீண் போகவில்லை. மாப்பிள்ளை சந்தான கோபால முதலியார் படிப்படியாக உத்தியோக உயர்வு பெறக் கூடிய யோக்யதை உள்ளவராக இருப்பதிலே அவருக்கு மகிழ்ச்சி சொல்லத் தரமன்று. அவருடைய மூத்த மகன் ஜயராமனும் கலாசாலைப் படிப்பை முடித்ததும் பாங்கி உத்தியோகத்துக்குப் போனான். இரண்டாவது பையன் ஹைஸ்கூலிலே படித்ததனால் அவனால் அவருக்குச் சிரமம் ஏற்படவில்லை. கௌரவம் இழந்து போகாத நிலைமையைவிடப் பிரமாதமான ஒரு சௌபாக்யவானாக அவர் இருக்கவில்லை.

அப்புறம்தான் அவரால் நிமிர்ந்து உட்கார்ந்து கவலையின்றி மூச்சுவிட முடிந்தது. தென்ன மரத்திலே தேள் கொட்டப் புளிய மரத்திலே நெறி ஏறினது போல எங்கோ ஐரோப்பாவிலே யுத்தம் மூளவும் அவருக்குப் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டது. நெல் விலை விறுவிறு' என்று ஏறி உச்சத்துக்கு வந்தது. கடன் பேச்சே இல்லாமல் ஒழிந்தது. ரொக்கமாக இரண்டு லட்ச ரூபாய் கணக்கு மேலே தேறியது. இரண்டாவது புதல்வன் சிவசங்கரன் பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளைக்கு வேண்டிய அம்சங்களில் ஒன்றுவும் குன்றாமல் கலாசாலையில் படித்துக்கொண்டிருந்தான். ஆனால் படிப்பு மட்டும் ஏறவில்லை.

ஜயராமனுக்கும் கல்யாணம் ஆகி இரண்டு குழந்தைகள் பிறந்து விட்டன. ஜயராமன் குடும்பம் கோயமுத்தூரிலேயே அவன் உத்தியோகத்தில் இருந்த இடத்திலேயே இருந்தது. இந்தப் பிள்ளையாவது வீட்டில் இருக்கட்டும் என்று அவன் தாயார் அங்கயற்கண்ணி ஆச்சி சொல்லிக் கொண்டிருந்தாள். சிவசங்கரனுக்கும் உத்யோகத்துக்குப் போக ஆசை இல்லை. தனிப்பட்ட முறையில் ஏதாவது ஒரு நல்ல தொழில் செய்ய வேண்டுமென்று தான் எண்ணம்.

3

கிராமத்தில் குடியானவர்கள் வசிக்கும் தெருவுக்குப் புதிய புதிய மனிதர்கள் சைக்கிளிலும், மோட்டாரிலும் வந்து கொண்டிருந்தார்கள். பொதுக் கூட்டங்கள் போட்டுச் சொல்மாரி பொழிந்த வண்ணமாக இருந்தது. சிவசங்கரன் பண்ணையாட்கள் வைத்து நேர் பார்வையிலேயே பயிரிட்ட நிலங்களில் அறுவடை செய்து விட்டான். அழகன் வார சாகுபடிக்கு ஒப்புக் கொண்ட நிலத்தில் அறுவடை செய்து மிராசுதாருக்குச் சேர வேண்டிய பாகத்தை வழக்கம் போல அளந்து விட்டான். மற்ற வார சாகுபடிக்காரர்களின் நிலங்களில் கதிர்கள் முற்றி, தான்யம் உதிர்ந்து விடும் நிலையிலிருந்தது.

திடீரென்று அவசரப்பட்டு எந்தக் காரியமும் செய்து விடாமல் தீர்க்காலோசனை செய்தார் முதலியார். காலச் சக்கரம் சுழன்று வருவதை உணராதவர் அல்லர் அவர். மிராசுதார்களின் நிலைமை முன்னேறி யிருக்கும்போது பாட்டாளி மக்கள் பாதாளத்திலேயே அழுந்திக் கிடப்பது நியாயமில்லை தான். கள்ளுக்கடை ஒழிந்த பிறகு மக்கள் கையிலே பணம் கொஞ்சம் குலுங்கிக் கொண்டிருப்பது வாஸ்தவம்தான். இருந்தாலும் அவர்கள் சௌக்கியமாகக் காலட்சேபம் செய்வதற்குப் போதிய அளவு சம்பாதிக்கும்படி நிலச்சொந்தக்காரர்களும் விட்டுக் கொடுக்க வேண்டும். புரட்சி மனப்பான்மை ஏற்படாமல் சௌஜன்யமான முறையையே இரு சாராரும் கையாள வேண்டும் என்பதே அவர் எண்ணம்.

திருமுல்லைப் பாடிக்கு அக்கம் பக்கம் கிராமங்களில் அறுவடையாகி விட்டது. திருமுல்லைப் பாடியிலுள்ள விபரீதமான நிலையைக் கண்டு அஞ்சி வெளியூர் ஆட்கள் அறுவடைக்கு வர





"அதோ ஸ்டாண்டில் மாட்டியிருக்கிறதே ஷர்ட்!.........எனக்கு நன்றாயிருக்குமா?"

"நன்றாயிருக்கும். ஆனால் ஸ்டாண்டில் தொங்குகிற அழகு அப்போது வருமா என்பது எனக்குச் சந்தேகந்தான்!"

மறுத்தனர். சிவசங்கரன் தன்னுடைய தகப்பனாரின் சரணகுணம் எங்கேயாவது ஆட்களின் பிடிவாதத்துக்கு விட்டுக் கொடுத்து இணங்கி விடுமோ என்று சந்தேகித்துக் கொண்டிருந்தான். ஊரில் உள்ள மற்ற மிராசுதார்களிடம் முறையிட்டான்; 'விட்டுக் கொடுத்து விடாதீர்கள். நாம் அப்புறம் மானமாக இந்தக் கிராமத்திலே காலந்தள்ள முடியாது. நஷ்டம் ஏற்பட்டால் நான் தருகிறேன். நாம் இப்பொழுது ஒற்றுமையாக இருக்கவேண்டும். இந்தப் படிப்பினையைக் கூடப் படிக்காத குடியானவர்களிட மிருந்து கற்றுக்கொள்ளா விட்டால் நம்முடைய நிலம் நமக்கு இராமலே போய்விடும்' என்றெல்லாம் கதறிக் கேட்டுக் கொண்டான்.

சிவசங்கரன் கடும் போராட்டத்துக்குத் தயாராக இருந்தான். மூலைக்கு மூலை காரியஸ்தர்களை அனுப்பினான். ஏராளமான பொருட் செலவில் இரண்டு லாரிகளில் நெடுந் தொலைவிலிருந்து அறுவடைக்கு ஆட்களைத் தருவித்தான். கழிகளும், அரிவாள்களும் இரு சாராரிடையேயும் தலைக் காட்டின. தகப்பனார் பேச்சைக் கொஞ்சமேனும் லட்சியம் செய்யாமல் உதறித் தள்ளினான் சிவசங்கரன். 'பகவானே, என்ன சோதனையோ!' என்று உருக்குலைந்தார் முதலியார். மற்ற மிராசுதார்களும் வேறு ஒரு வழியும் புரியாமல் அப்படியே நிலைகுலைந்து நின்று கொண்டிருந்தனர்.

வெளி ஆட்கள் அறுவடைக்கு வயலில் இறங்கி விட்டனர். அங்கயற் கண்ணியம்மாள் அழமாட்டாத குறையாகச் சிவசங்கரனை வீட்டை விட்டு வெளியிலே இன்றுமட்டும் போக வேண்டாம் என்று கேட்டுக் கொண்டாள். நெற்றியைப் பிடித்துக் கொண்டு சாய்வு நாற்காலியிலே மௌனமாக உட்கார்ந்து விட்டார் புன்னைவனநாத முதலியார். ஒன்றையும் காதிலே போட்டுக் கொள்ளாமல் போய்விட்டான் சிவசங்கரன். அழகன் தன் எஜமானனுடன் சென்றான். வயல் கரையிலே காரியஸ்தர் வையாபுரிப்பிள்ளை நின்றார். வாய்க்கால்களிலும் வரப்புகளிலும் ஊர்க் குடிபடைகள் நின்றனர். தூரத்திலே யிருந்தே ஏதோ சச்சரவு ஏற்பட்டது என்பதைத் தெரிந்து கொண்டு விட்டான் சிவசங்கரன். மள மள வென்று போனான் சிவசங்கரன். "எஜமான் அங்கே போகவேண்டாம்" என்று மன்றாடினான் அழகன்.

"வையாபுரிப் பிள்ளை! இங்கு என்ன கூட்டம்!" என்று கேட்டான் சிவசங்கரன். வயலில் இறங்கிய ஆட்கள் கொஞ்சம்தான் கதிர் வெட்டியிருந்தார்கள். மிராசுதார் வந்ததும் அந்த அறுப்பு இல்லை. அரிவாளும் கையுமாக அப்படியே நின்று வேடிக்கை பார்த்தார்கள்.

"உம், உம், நடக்கட்டும்!" என்றார் வையாபுரிப் பிள்ளை.

ஊர் நாட்டாண்மைக்கார வீரமுத்து வன்னியர் "ஏதோ ஏழை, பாழைங்க நாங்க பயிர் வைத்ததை இன்னொரு ஊர்க்காரன் வந்து எங்க இஷ்டத்துக்கு விரோதமாகத் தொடுவது நல்லா இருக்குங்களா, எஜமான்!" என்று கேட்டார்.

"எல்லாம் நீங்களாகச் செய்து கொள்வது தான்! பொதுக்கூட்டம் போடுகிறது. அமளி துமளி செய்கிறது. என்ன கேலிக்கூத்து! ஒழுங்காகச் சாகுபடி செய்கிறது, வழக்கம்போல வாரம் வாங்கிக் கொள்கிறது. நிலம் நீச்சு என்னது என்று தெரியாதவன் எல்லாரும் பிதற்றுகிறது உங்களுக்கு வேதவாக்காகப் போய் விட்டது என்றால் நாங்களும் எங்கள் வழியிலே காரியத்தை நடத்திக் கொள்கிறோம்" என்றான் சிவசங்கரன்.

வீரமுத்து சிவசங்கரனை வியப்புடன் பார்த்தான். சின்னஞ் சிறு பிள்ளையாக இருக்கும்போது சிவசங்கரனை எவ்வளவு நாள் தோள் மேலே சாத்திக் கொண்டு தட்டித் தூங்க வைத்திருக்கிறான்; தொட்டிலிலே போட்டு ஆட்டியிருக்கிறான்! ஆட்டுக்குட்டி பிடித்து விளையாடக் கொடுத்திருக்கிறான்! பள்ளிக்கூடத்துக்கு வண்டியோட்டிப் போயிருக்கிறான்! ஒவ்வொரு அங்குலமாகச் சின்ன எசமான் வளர்வதைப் பார்த்திருக்கிறான். வீரமுத்து பேசவில்லை.

"செய்யிங்க! சுயராச்சியம் வந்ததிலே ராசா மகராசா எல்லாரும் போன இடம் புல் முளைத்துப் போச்சு. மிராசுதாரு ராச்சியம் நடக்குது. வேலைசெய்யற உழவன் குடிக்கக்கூடக் கஞ்சியில்லாம வாயிலே விரல் வைச்சுக்கிட்டு நிப்பான்! உழறவனுக்கே நிலம் சொந்தம் என்று சட்டம் வரப்போவுதாம்! நூத்துக்கு ஐம்பது வாரம் கொடுக்கிறதுக்கு அய்யா அழுவுறாங்க!" என்றான் சிவப்பு பனியன் போட்டிருந்த கட்டுமஸ்தான இளம் காளை ஒருவன். அவன் கையிலே பத்திரிகைப் பிரதி இருந்தது!

'சும்மா இரு தம்பி!' என்றான் சிரித்துக் கொண்டு வீரமுத்து. வீரமுத்து கெட்டிக்காரன். நேருக்கு நேராகப் பேசக்கூடாது என்று இந்த மாதிரி வாலிபர்களைத் தயார் செய்து வம்பு வளர்க்க சமயம் தேடுகிறானோ என்றுகூடச் சந்தேகித்தான் சிவசங்கரன்.

"தம்பி, இந்தப் பசங்களிடம் பேசவந்திலே பிரயோசனமே இல்லை. சாத்வீகமான முறையிலேதான் பேச்செல்லாம் இருக்கும். அப்படியே நீறுபூத்த நெருப்பு" என்றார் வையாபுரிப் பிள்ளை.

சற்று நேரம் நின்றான் சிவசங்கரன். அறுப்பு வேலை ஜரூராக நடந்து கொண்டிருந்தது. மற்ற ஆட்களும் நின்றுவிட்டு மெல்ல ஒருவர் பின் ஒருவராக நழுவலாயினர். தனக்கு வெற்றியேற்பட்டது என்ற சிறிது இறுமாப்புடன் கூடச் சிவசங்கரன் வீடு திரும்பினான்.

அவன் திரும்பி வீட்டுக்கு வந்த சற்று நேரத்திலேயே செய்தி வந்து விட்டது. காரியஸ்தர் வையாபுரிப் பிள்ளைக்கும் சாகுபடியாளருக்கும்

நீங்கள் இன்று உங்கள் பற்களை மக்ளீன் செய்தீர்களா?



"...பற்களை விகாரமாகத்தோன்றும்படி செய்யும் மஞ்சள்நிறத்தை அகற்றிப்பளபளப்பாக்கும் ஒரே பற்பசை மக்ளீன்ஸ் தான். என்றும் எனக்கு உகந்தது மக்ளீன்ஸ் பற்பசையே."

அவள் மக்ளீன் செய்திருக்கிறாள் என்பதை நீங்கள் பார்க்கலாம். மக்ளீன்ஸ் 'பெரோக்ஸைட்' பற்பசை உங்கள் பற்களை சுத்தமாகவும், வெண்மையாகவும் விளக்கி, பழுதாவதினின்றும் தடுத்து, ஈறுகளைப் பலப்படுத்தி, சுவாசத்தையும் நறுமணமுள்ளதாகச் செய்கிறது. இவை எல்லாம் ஒரே சமயத்தில்தான். தினந்தோறும் மக்ளீன்ஸ் பெரோக்ஸைட் பற்பசையை இரு முறை உபயோகியுங்கள்.

இப்போது பெரிய அளவிலும், சிக்கனமான மாபெரும் அளவிலும் கிடைக்கிறது



பற்களை அதிக வெண்மையாக்குகிறது

வர்த்தக விபரங்களுக்கு:-

ஜே. எல். மாரிஸன், ஸன் அண்ட் ஜோன்ஸ் (இந்தியா) லிட்.,
தபால் பெட்டி 6327, பம்பாய் 26. தபால் பெட்டி 387, கல்கத்தா
தபால் பெட்டி 1370, மதறாஸ்.

MTY 17 TAM

தகராறு வளர்ந்து விட்டது. வையாபுரி ஒராளை அடிக்கப்போக அவன் அவரைத் திருப்பியடிக்க ரகளையாயிற்று. வையாபுரி ஓடினார். தடுக்கி வாய்க்காலிலே விழுந்தார். தலைக்குத் தலை அவரை அடிக்க ஆரம்பித்தார்கள். அடிபட்டுப் பிரக்ஞையில்லாமல் விழுந்துவிட்ட அவரை வெளியூர்க் கூலியாட்கள் சிலர் தூக்கிக்கொண்டு வந்தனர். அழகன் சிவசங்கரனுடன் வந்ததனால் அவன் தப்பினான். வண்டி கட்டி வையாபுரியை ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போகச் சொன்னான் சிவசங்கரன். போலீஸ்காரர்கள் வந்தார்கள். டிமிலோகப் பட்டது. சில நாட்களுக்குப் போலீஸ்காரர்கள் தலைமையில் எல்லா நிலமும் அறுவடையாயிற்று, ஒன்றுக்குப் பாதியாக. இரண்டொரு வைக்கோல் போர்களும் பற்றி யெரிந்தன. குழப்பமான நிலை சமாளிக்க முடியாததாயிற்று. போலீஸ் டெபுடி சூபரின்டென்டும் இன்ஸ்பெக்டர்களும் முகாம் போட்டனர். அமைதி மேலும் குலைவதை விரும்பாத புன்னைவன நாதர் யாரையும் கைது செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். போலீஸ் அதிகாரிகளின் மேற் பார்வையில் மாமூல்படியும் இல்லாமல் குடியானவர்களின் கோரிக்கைப்படியும் இல்லாமல் நடுவாக ஒரு பகுதியை வாரமாக அளந்துவிட்டு மிகுதியைச் சேர்கள் கட்டக் கொணர்ந்தார்கள். ஊரிலே மற்ற மிராசுதார்களுக்கும் இதே திட்டப்படியே அறுவடை முடிந்தது. அந்த வருஷத்திலே ஏராளமான நஷ்டம்; அதிகச் செலவு. யாரிடமும் மனம் கோணாது பேசும் முதலியார் தன் பையன் சிவசங்கரனிடம் சற்றுக் கடிந்து பேசி மனஸ்தாபப் பட்டுக் கொண்டார்.

4

அழகனுக்கு ஊரிலே குடிகள் அனைவரும் விரோதமாயினர். ஐந்தாம்படை, ஐந்தாம்படை என்று அவனுக்குப் பெயர் சூட்டி எல்லோரும் தூஷித்தனர். அவனுடைய வயதான தாயுடனும், பிரசவிக்க வந்திருந்த தமக்கையுடனும் ஊர்ப் பெண்கள் பேசவில்லை. எஜமானனிடம் விசுவாசமாக நடந்து கொண்டதிலே கடாலமும் மாரி சொன்னதுபோல் ஒளிந்திருந்தது. சம்பங்கிக்கும் அவனைக் கல்யாணம் செய்து கொள்வதிலே விருப்பம்தான். ஆனால் சம்பங்கி வீட்டிலே அவனுக்குப் பெண் கொடுக்க இஷ்டப்படவில்லை. மிராசுதாருடன் சேர்ந்து கொண்டு ஊரைப் பகைத்துக் கொண்டவனுக்கு எப்படிப் பெண் கொடுப்பது! அழகன் இரண்டு மாதமாக ஊரில் இல்லை. எங்கு போய் விட்டான் என்பதும் விவசாயிகளுக்குத் தெரியவில்லை.

"அடுத்த வருஷம் சாகுபடிக்கு என்ன அப்பா செய்வதாக உத்தேசம்?" என்றான் சிவசங்கரன்.

"எனக்கென்ன வயது ஆகிவிட்டது. 'சிவ சிவ' என்று சொல்லிக் காலம் தள்ளுகிறேன். சாவிக்கொத்தைத் தான் உன்னிடம் ஒப்படைத்து விட்டேனே. உன் இஷ்டம் போலச் செய். முழுவதும் பண்ணையிலேயே வைத்துச் சாகுபடி செய்வதானாலும் செய். இன்னும் உழவு மாடுகளை வேண்டுமானாலும் வாங்கிவிடு இப்போதே!" என்றார் புன்னைவன நாதர்.

"அப்பா, உங்களுக்குத் தெரியாததற்குச் சொல்லவில்லை நான். வெளி நாடுகளில் விவசாயம் எவ்வளவு அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்று நீங்கள் அந்த நாளிலே எழுதியிருக்கிறீர்கள். கத்தரித்துக் கத்தரித்து நோட் புஸ்தகத்திலே நீங்கள் ஒட்டி வைத்திருக்கிற கட்டுரைகளை யெல்லாம் படித்திருக்கிறேன். அப்பொழுது உங்களுக்கு வசதி இல்லை. வசதி இருக்கிற போது இப்பொழுது நடத்தித்தான் பார்ப்போமே மேல் நாடுகளில் உள்ள முறைகளை."

"பேஷாகச் செய், உனக்குப் பூரணமாக அனுமதி தருகிறேன்."

மணியக்காரர் திருவடியா பிள்ளை சிவசங்கரன் செய்வதை ஒப்புக் கொள்ள வில்லை.

"என்ன தம்பி! கேட்டலாக்கிலேயும், பேப்பரிலும் பார்த்துவிட்டு வயலில் டிராக்டர் விடணும் என்கிறாய். மேல் நாட்டிலே உழும் தம்பி டிராக்டர். தஞ்சாவூர் நஞ்சையிலே உழுமா?"

"உழுதுதான் ஆகவேணும். இல்லாவிட்டால் சரிபாதி வாரம் கேட்கிறவர்கள் முக்கால் பங்கு வாரம் கேட்க ஆரம்பித்து விடுவார்கள். நம் நாட்டுக்குத் தேவையான உணவையும் உற்பத்தி செய்ய முடியாது."

"வழக்கமில்லாத புதுப் பழக்கம் ஆயிற்றே என்று யோசிக்கிறேன்."

"அதுதான் பார்க்க வேண்டும். நமக்குத்தான் பழைய சோடைகளை விட்டு மாறிப் போகிறது என்றால் தயக்கம் தானே! பண்டைநாள் தொட்டு வந்த வழியை விடக்கூடாது என்றே பிடிவாதம் கூட இல்லை; பேதைமை. மூத்தப் பேட்டையிலே ஒரு பண்ணைக்காரர் ஊக்கத்துடன் நூதனமான முறையிலே பயிரிட்டாரே அதைப்பற்றி நாம் யாராவது சிரத்தை யெடுத்துக் கொண்டோமோ! ஆள் உயரம் பயிர் வளர்ந்திருந்தது. கதிர் ஒரு முழமும், கட்டு முக்கலமும் காணும்படி அமோகமான விளைவு. பத்திரிகைகளிலே படம் பார்க்க வில்லையா நாம்! நாற்றுப் பறித்து நடாமல் வளர்ந்த பயிர். புன்செய்ப் புழுதி உழவுபோல நிலத்தை உழுது விதைத்துத்தான் சாகுபடி நடந்தது. அப்படித்தானே, மணியக்காரரே!"

"வாஸ்தவம்தான். உன் இஷ்டம்போல் செய் சிவசங்கரா! நான் என்னால் ஆன காரியம் உன்னுடன்கூட இருந்து செய்கிறேன்" என்றார்.

5

இந்து தேச சரித்திர புத்தகத்தைக் காணும் போதே தலைவலி ஏற்படுகிற பையன்களில் எவ்வளவோ பேர்கள் எந்த எந்தச் சினிமாவில் யார் யார் நடித்திருக்கிறார்கள், என்று சிறிதளவும் பிசகில்லாமல் ஒப்பிக்கக்கூடிய திறமை உள்ளவர்களாக இருக்கிறார்கள். அவசியத்தை விட ஆசையே அறிவு விசாலத்தை உண்டாக்குகிறது என்று சொல்லலாம்.

சிவசங்கரன் நவீன விவசாயம் பற்றிய புத்தகங்களில் ஒன்று விடாமல் படித்தான். அனவரதமும் படிப்பிலே மூழ்கியிருந்த அவன் கலாசாலையில் இவ்வளவு அபிருசியுடன் படித்திருந்தால் அமெரிக்காவுக்குப் போய் 'அக்ரானமி'யில் பட்டம் பெற்று வந்திருக்கலாமே என்றுகூடப் பச்சாத்தாபமடைந்தான். அவனுடைய அபிருசி இந்தச் சிறு விஷயங்களைக் கற்றுத் தேர்வதற்காக எவ்வளவு வருஷங்கள் மற்றவர்கள் பிரயாசைப்படுகிறார்கள் என்று நினைத்து வியப்படையச் செய்தது. 'ஹெருவி பண்டிட்' ஆவதற்குச் சுலபமான வழி கூசாமல் பணத்தை அள்ளி நிலத்திலே இறைப்பதுதான் என்று உத்ஸாகமடைந்தான்!

* * *

ஏழை இந்திய விவசாயிகளுக்கு எமன்போன்ற இயந்திரக் கலப்பை வந்துவிட்டது. அதை ஓட்டிச் செல்ல வந்து விட்டான் அழகன். டிராக்டர் ஓட்டப் பயிற்சியடைந்து வருவதற்காகத்தான் அவனைப் பெங்களூருக்கு அனுப்பியிருந்தான் சிவசங்கரன்.

அழகன் சட்டையும் தொப்பியும் அணிந்து அவன் ஷோக்கு நடைபோட்டுச் செல்லும்போது பஞ்சாயத்துக் கிணற்றிலே குடங்களில் தண்ணீர் நிரப்பிக் கொண்டு இருந்த பெண்கள் சிரித்துக் கொண்டிருப்பதைக் கண்டான். "என்ன டிரைவர் அய்யா! சம்பங்கியை விட்டுட்டு மண்வெட்டி மிஷினைக் கட்டிக்கிட்டியா!" என்று ஏகத்தாளம் செய்தான் மாரி. சம்பங்கி அவனைப் பார்க்கும் போதெல்லாம் உதட்டைப் பிதுக்கிப் புறங் கைகளைத் தன் நெற்றிப் புறங்களிலே மடக்கிச் சொடுக்கிக் கொண்டாள். அவள் வீட்டிலே தமக்கைக்கு ஆஸ்பத்திரி நர்ஸ் வந்து பார்த்துப் பிரசவம் நடந்தது. கூரை வீடு மாடி வீடாகா விட்டாலும் பசியாறச் சோறும், உடுக்க நல்ல துணியும் பஞ்சமில்லாமல் வீட்டிலே இருந்தன.



இளம் மனைவி (ரயிலிலிருந்து இறங்கியதும்):— நமக்குப் புதிதாக விவாகம் ஆகியிருக்கிறது என்று யாருக்கும் தெரிய வேண்டாம். உடனே நம்மை எல்லோரும் பார்க்க ஆரம்பித்து விடுவார்கள். நமக்கு விவாகம் ஆகி ரொம்ப நாட்கள் ஆகிவிட்டது போல் நடந்து கொள்ளவேண்டும். என்ன, நான் சொல்லுவது தெரிகிறதா?

கணவன்:—ஆகா, அப்படியே! ஆனால் நீ ஒரு காரியம் செய்ய வேண்டும். இந்தப் பெட்டியையும் கூஜாவையும் எடுத்துக் கொண்டு நீ என் பின்னால் சங்கோஜப்படாமல் வர வேண்டும்.

வயல் வரப்புகளையெல்லாம் வெளியூர் ஆட்கள் வெட்டும்போது குடியானவர்களுக்குத் தங்கள் அங்கங்களையெல்லாம் துண்டு போடுவதுபோலிருந்தது. தடக் தடக் என்று டிராக்டர் வயலில் ஓடும்போது அவர்கள் நெஞ்சமும் தடக் தடக் என்று அடித்துக் கொண்டது. வாய் பிளந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள் மாடில்லாமல் உருளைகள் ஆழ உழுவதை. நெல்லுக் குத்தின கைகளும், மாவிழுத்த கைகளும் வேலை இழந்தது போல ஏர் பிடித்த கைகளும் ஏங்கிப் போகிற காலம் வந்ததோ என்று மதி யிழந்து மலங்கிப் போனார்கள் ஊர்க்காரர்கள்!

சட்டை போட்டுக் கொண்டு வேலை செய்யாமல் ஓரணாப் பத்திரிகையினுள்ளே உலகமே அடங்கி விட்டது போலக் கொக்கரித்துக் கொண்டிருந்த முற்போக்கு இளைஞர்களின் புரட்சி மனப்பான்மை பிசுபிசுத்துக் கொண்டிருந்தது. வண்டி, வாசி மாடு, கன்றுகள் உள்ள குடியானவர்கள் பழைய ஸ்திதிக்கும் கேடு வந்து விடக்கூடாதே என்று மிராசுதார்களுடன் இணங்கி வரத் தயாராகச் சந்தர்ப்பம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஏழாயிரம் ரூபாய்களுக்கு வாங்கிய இருபத்து நாலு குதிரை சக்தியுள்ள இயந்திரக் கலப்பை எவ்வளவு ஜோராக மாடுகளுடையவும், ஆட்களுடையவும் வேலையைச் செய்து முடிக்கிறது என்று ஆச்சரியப் பட்டுப் போனார் மணியக்காரர் திருவடியா பிள்ளை. நல்ல விதைகளும், நிறைய உரமும், போதுமான தண்ணீருமே உணவு உற்பத்திக்கு அத்தியாவசியமே தவிர ஆட்கூட்டமும், மாட்டு மந்தைகளும் வேண்டாம் என்பதைப் பிரத்யட்சமாக நிரூபித்தான் அவருக்குச் சிவசங்கரன். ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பி வந்த வையாபுரிப் பிள்ளையைப் பார்க்கும்போதே இளைஞர்களுக்குக் குலை நடுக்கம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. அவருடைய கெடுபிடி ஒருபடி தூக்கலாகவே இருக்கத் தலைப்பட்டது. உள்ளூர் ஆட்கள் விரலைச் சப்பிக் கொண்டிருக்க, வெளியூரிலிருந்து, அதுவும் எங்கோ கண்காணாத மானம் பார்த்த சீமையிலிருந்து வந்த கூலியாட்கள் நின்று கொழுத்துக் கொண்டிருந்தார்கள். அழகன் சர்வாதிகாரியாக விளங்கினான். மற்றக் குடியானவர்களைப் படுத்துப் போகச் செய்கிற இயந்திரத்தை இயக்குவிக்கிற 'டிரைவர்' அல்லவா அவன்! பயிர்கள் எல்லா வருஷங்களையும் விடச் செழுமையாக வளர்ந்திருந்தன.

6

காவியங்களுக்கு நடுநாயகமாக விளங்கும் காதல் நமது வாழ்க்கையிலே இல்லாததல்ல. ஏர் பிடித்த அழகனின் மனத்திலே பிறந்த காதல் அவன் இயந்திர விசை பிடிக்கும் போதும் மாறவில்லை. இழைந்து பேசினாலும் சரி, சிணுங்கி முகம் திருப்பினாலும் சம்பங்கி அவன் இதயத்தைப் பீடமாக்கியமர்ந்து அரசு செலுத்தும் அதீச்வரி

முதன்மை ஸ்தானம்—நம் புராதன கௌரவம்.



இணையற்ற அண்டானிக்

நாகரீக உலகத்தில் பண்டைக்காலம் முதற்கொண்டு பிரசித்தி பெற்றது இந்திய எஃகு. வியாபாரம் தழைத்தோங்கிய இடங்களில் மேம்பாடடைந்த இவ்இந்திய எஃகே ஆவலுடன் விரும்பப் பட்டது. டமாஸ்கஸின் இணைக்கப்பட்ட இரும்புக் கவசங்கள் 'லெவன்டில்' பெயர்பெற்ற 'ஊட்ஸிலிருந்து' தயாரிக்கப் பட்டவைகளே. அவைகள் அழகுக்கு நிகரற்றவை—பலத்திற்குப் பெருமை பெற்றவை. 13ம் நூற்றாண்டில் ஐரோப்பிய வீரர்களால் அணியப்பட்டவை போன்றே இருந்த பாலஸ்திய முகம்மதியர்களின் பளபளப்பான கவசங்கள், வளைந்த கொடுவாள்கள் இவைகள் எல்லாம் பிரசித்திபெற்ற இவ்உலோகத்திலிருந்து நம் இந்திய தொழிலாளிகளின் வார்ப்படங்களிலேயே தயாரிக்கப்பட்டவை.

மார்க்கோபோலோவால் குறிக்கப்படும் 'அண்டானிக்' ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த 'அல்ஹின்ட்', 'ஆல்பிந்த்' இவ்வார்த்தைகள் எல்லாம் இந்திய எஃகின் 'ஹுண்ட்வானிஜ்' என்ற இந்திய-பாரஸீக வார்த்தையைத் தழுவியவைகளே. இன்று இந்தியத் தொழிலாளிகளின் திறமையும் சாதுர்யமும் புத்துயிர் பெற்றிருக்கிறது. அப்புராதன காலத்திறனும் இக்கால இயந்திர சாதனங்களுமாகச் சேர்ந்து நம் தொழிற் செழிப்பை உன்னதமாக்குவதுடன் நமக்கு மேன்மேலும் முதன்மை ஸ்தானத்தை அடைவிக்கின்றது. இவ்விந்திய மறுமலர்ச்சியில் டாடா எஃகு இன்றியமையாத வஸ்து என்பதை எல்லோரும் அறிவோம்.

தி டாடா அயர்ன் & ஸ்டீல் கம்பனி லிமிடெட்.

TN.3012

இந்த உபகண்டத்தில் நாலுபேரில் ஒருவர் மலேரியாவினால் பீடிக்கப்படுகிறார்கள்

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். எண்ணிக்கையில் சொல்லப் போனால் ஒவ்வொரு வருடமும் கிட்டத்தட்ட பத்துகோடி ஜனங்கள் மலேரியாவினால் வருந்துகிறார்கள்.

அலட்சியம் செய்யாதீர்கள்—மலேரியா ஜனங்களை பலஹீனப் படுத்தி, வீழ்த்தக்கூடிய ஓர் கொடிய நோய். அது ஆரோக்கியத்தையும், சக்தியையும் அழித்து, உற்சாகத்தையும் அறிவையும் மழுங்கச் செய்து விடுகிறது.

ஆதலால் தான் நீங்கள் இன்றே மலேரியாவிலிருந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ள 'பாலுட்ரின்' உட்கொள்ளும்படி நாங்கள் வற்புறுத்துகிறோம். 'பாலுட்ரின்' உட்கொள்ளுவதற்கு அபாயமற்றது, சுலபமானது, மலிவானது, மலேரியாவைத் தடுக்கத் தகுதியானது. உங்களை காப்பாற்றிக் கொள்ளுவதற்கு சிறந்த வழி ஓரே அணா விலையுள்ள ஒரு 'பாலுட்ரின்' மாத்திரையை பிரதிவாரமும் ஒரு முறை சாப்பிடுவதுதான். அளவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அபாயத்தின் சின்னங்களைக் கவனியுங்கள்:

முதலில் குளிரால் நடுக்கம் உண்டாகும். ஜுரம் ஆரம்பமாகும். இதனால் உடம்பு முழுவதும் வியர்க்கும். தேகம் முழுவதும் வலி உண்டாகும். இந்த அறிகுறிகளை ஒரு பொழுதும் அலட்சியம் செய்யாதீர்கள்—உடனேயே டாக்டரின் ஆலோசனையைக் கேளுங்கள். மலேரியா கண்டிருந்தால், 'பாலுட்ரின்' எப்படி உங்களுடைய ஜுரத்தை சில நாட்களில் நீக்குகிறது என்பதையும் எதிர்காலத்தில் மலேரியா உங்களை அணுகாமல் எப்படி பாதுகாப்பை அளிக்கிறது என்பதையும் அவர் சொல்லுவார்.

நம்பிக்கைக்குகந்த 'பாலுட்ரின்' மாத்திரைகள் சுத்தமான, தெளிவாகத் தெரியும் காகித உறைகளில் சுற்றப்பட்டு வருகின்றன. ஒரு மாத்திரை விலை ஓரே அணா தான்.



'பாலுட்ரின்'

மலேரியாவை வீழ்த்துகிறது

அளவுமுறை



சிகிச்சைக்கு: வயதானவர்களுக்கும் 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் ஒரு மாத்திரை. 6லிருந்து 12 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு அரை மாத்திரை. 6 வயதிற்கு கீழ்ப்பட்ட குழந்தைகளுக்கு கால் மாத்திரை வீதம் தினந்தோறும் ஜுரம் குணமடையும் வரை கொடுக்கவும்.

பாதுகாப்பிற்கு: மேலே குறிக்கப்பட்ட அளவுகளை அனுசரிக்கவும். ஆனால் வாரம் ஒருமுறை அதே தினத்தில் சாப்பிட வேண்டியது.

எப்பொழுதும் 'பாலுட்ரின்' சாப்பாட்டிற்குப் பிறகு அதிக அளவு தண்ணீருடனோ அல்லது பாலுடனோ உட்கொள்ள வேண்டும் என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள்.

இம்பீரியல் கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லிமிடெட்.

ICF 73

யாகவே அவனுக்கு விளங்கினான். எவ்வளவோ சந்தர்ப்பங்களிலே அவனைச் சந்தித்துப் பேச முயன்றான். சம்பங்கிக்குத் தாய் இல்லை, தகப்பன் கிழவன், மாற்றாந்தாய் கொடுமைக்காரி. வீட்டிலே வறுமை தாண்டவமாடியது. நடவு நட்டுப் பிழைக்கவும் வகையில்லாது ஊர் உருமாறி விட்டது. ஆனால் அவன் தன்னுடைய வர்க்கத்துக்கே துரோகமிழைத்தவன் அழகன் என்று அவனிடம் கோபமுள்ளவளாயிருந்தாள். ஆனால் அவள் கோபத்திலே வெறுப்பு இல்லை; வருத்தமே மேலிட்டிருந்தது. அழகனுடைய வனப்புக்கு நிகர் கிராமத்திலே இல்லையே! விசாலமான தோள்களும், உறுதியான புஜங்களும் வேறு யாருக்கு உண்டு! அவன் தலை மயிர் வாரிவிட்ட போது நெளி நெளியாக எவ்வளவு நேர்த்தியாக இருக்கும்! அவனுடைய கரு விழிகளிலேதான் எவ்வளவு சோபை! அவள் பெண்ணுள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அக்கட்டழகன் மக்களையிலிருந்து விலகிப் போகும் ஆளாக விட்டானே! அவள் மனமும் நிலை கொள்ளாமல் தடுமாறியது.

அழகனைக் கொள்ளுவதா, தள்ளுவதா! அவள் கெஞ்சினால் அவன் அவளுக்காக வேலையை விடுவான். உடனே இன்னொரு ஆள் அவன் ஸ்தானத்துக்கு வருவான். ஊர் மக்களும் நன்றாக இருக்க வேண்டாமா! அந்த எண்ணம்தானே அவளுக்கும் அழகனுக்கும் குறுக்கே நின்றது! திடீரென்று ஓரெண்ணம் அவள் மனதிலே உதித்தது. மகாலக்ஷ்மிபோல் விளங்கும் அங்கயற்கண்ணி ஆச்சி ஊர்ப் பெண்கள் மனதிலே புழுங்கிக் கொண்டிருப்பதை உணரவில்லையா! அவளுக்குத் துணிவு வந்து விட்டது. புழக்கடை வழியே முதலியார் வீட்டுக்குள் போனாள். ஆச்சியைக் கண்டாள். "எங்கே வந்தாய் சம்பங்கி!" என்று கேட்டாள் ஆச்சி. பேச நாவெழாது தயங்கி நின்றாள். "என்ன வேணும், சொல்லு!" என்று அதட்டிச் சொன்னாள் ஆச்சி. சிறிது தயக்கமடைந்தாள் சம்பங்கி.

"அம்மா!" என்றாள் சம்பங்கி. அழுகை வந்து விட்டது அவளுக்கு.

"என்னடி விஷயம்!" என்று சிறிது குரலைத் தாழ்த்தி வினவினாள் ஆச்சி.

"நாங்கள் படற சிரமம் அம்மாவுக்குத் தெரியாதது இல்லே. ஏதோ ஏழை மக்கள் அவர்களைப் பட்டினியிலேயே சாக விடாமல் பாத்துக்க வேண்டியவங்க நீங்கள்தான். எனக்கு அதுக்கு மேலே சொல்லத் தெரியவில்லே."

திடுக்கிட்டாள் அங்கயற்கண்ணி, தன்னுடைய பொறுப்பு இன்னது என்று இதுவரை தெரிந்து கொள்ளாதவள் போல. சில நேரம் யோசித்தாள். இந்தியப் பண்பாட்டின் பிரதான குணமான அனுதாபம் அவள் மனதிலே விசுவரூபம் எடுத்தது. "சே! ஓர் ஏழைப் பெண் வந்துதானா தன் கடமையை நினைவூட்ட வேண்டும்! தனக்காகத் தெரிந்து கொள்ள வேண்டாமா!" சஞ்சலம் அடைந்தது அவள் மனம்.

"போ சம்பங்கி!" என்றாள்.

"நான் போறேன் அம்மா! புண்ணியமெல்லாம் உங்களுக்கு! இன்னும் கொஞ்ச நாள் இப்படியே ஓடினால் குழந்தை குட்டிகள் எல்லாம் என்னவாகும்! எங்களுக்கு மச்சு வீடு வேணும், பட்டுப் புடவை வேணும். பசியாற ஜீவிக்க முடியுமா என்கிற கவலைதான். அந்தக் கவலையைத் தீர்த்து வைக்கிறது யாரு!" என்று கேட்டாள் சம்பங்கி தழுதழுத்த தொனியில்.



கணவன்: உனக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது? ஒரே சினிமாப் படத்துக்கு நாலு தடவை போய்விட்டு வந்துவிட்டாய்! மறுபடியும் இன்றைக்கு அந்த படத்தைப் போய்ப் பார்க்கணும் என்கிறாயே!

மனைவி :— வாஸ்தவம்தான்! ஆனால் இந்த பெங்கால் ஸில்க் புடவையைக் கட்டிக் கொண்டு ஒரு தடவை கூடப் போகவில்லையே!

"சரி போ" என்று சொல்லிவிட்டு உள்ளே திரும்பினாள் ஆச்சி.

நேரே தன் கணவரிடம் வந்தாள் ஆச்சி. "நம் கிராமத்து மக்களை இப்படி நாமே கொடுமைப் படுத்துவது நன்றாக இல்லை. இத்தனை காலமும் அவர்கள் உழைப்பினால்தானே நிலம் உழவு நடந்து அறுவடையால் நமக்கு நெல் கிடைத்து வந்தது. அதையெல்லாம் மறந்து விடலாமா! கிராமத்து மக்கள் எல்லாம் பட்டினியும் பசியோடு கிடக்கும் போது நாம் நெல்லைக் கொண்டு வந்து நம் வீட்டுக் களஞ்சியத்தில் கொட்டிக் கொண்டால் தெய்வத்துக்குக் கூடத் தாங்காது. இதற்கு உடனே ஏதாவது வழி செய்துதான் ஆகணும்" என்று உணர்ச்சியோடு கூறினாள்.

எதிலுமே பட்டுக் கொள்ளாமல் ஒதுங்கியிருந்த ஆச்சி சொன்னதைக் கேட்ட புல்லவனாத முதலியார் ஆச்சரியமடைந்தார். "உன்னைப் போலத் தான் நானும் இருக்கிறேன். கிசான் இயக்கம் என்று அவர்கள் கூத்தாடுகிறதும் எனக்குப் பிடிக்கவில்லை. அவர்களுக்கு ஒன்றுமே கொடுக்கிறதில்லை என்று இவர்கள் கபளீகரம் செய்வதும் எனக்குப் பிடிக்கவில்லை. அப்பொழுதே சொல்வது போலத்தான் இப்பொழுதும் சொல்கிறேன். எனக்கு ஒன்றும் தெரியாது. அவனிடம் சொல்லேன்" என்று சொன்னார்.

சிவசங்கரன் மாடியிலிருந்து கேட்டுக் கொண்டு தானிருந்தான். ஒவ்வொரு படியாக மெல்ல மெல்ல இறங்கி வந்தான். அவனைக் கண்டதும் அங்கயற்கண்ணி ஆச்சி, "என்னுடைய உயிர் உள்ள வரையில் இந்த ஜனங்கள் பசியினால் வாடுவதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. நமக்கு வருகிற லாபத்திலே அவர்களுக்கும் கொஞ்சம் கொடேன். கால நிலையை உத்தேசித்துக் கொஞ்சம் விட்டுத்தான் கொடுப்போமே!" என்றாள்.

சிவசங்கரனுக்கு அவள் வார்த்தைகளை உதற முடியவில்லை. "எனக்கு எந்த ஆட்சேபமும் இல்லை. அவர்கள் துடுக்குத் தனத்தைத்தான் அடக்க வேண்டுமென்று எண்ணினேனே தவிர அவர்களைக் கசக்கிப் பிழியும் எண்ணமே எனக்குக் கிடையாது" என்றான்.

அந்த ஆண்டு டிராக்டர் இயந்திரம் பயிரிட்டதைக் கிராமத்து மனிதர் அறுவடை செய்தனர். உழவன் அழகனுக்குச் சம்பங்கி கிராம மக்களின் நல்லாசியுடன் மாலையிட்டாள்.

வேலை இருக்கிறது!

கடகம்



ஆமாம். என் வேலையைப் பற்றித்தான் சொல்லப் போகிறேன்.

என் வேலை காசு சம்பாதிக்கும் வேலை தான். மாதம் முப்பது நாளும் எனக்கு வேலையிருந்து கொண்டே யிருக்கும்.

எனக்கு என் காரியாலய வேலைதான் பெரிசு. சோறுபோடும் வேலை இல்லையா? மனைவி மக்களைப் பற்றி நினைப்பதற்கும் எனக்கு நேரம் கிடைப்பதில்லை.

என்ன இப்படிச் சொல்கிறேனே என்று நினைக்கிறீர்களா? எப்பொழுதுமே உண்மையைப் பேசுவது தான் நல்லது. உண்மையை மறைத்து மறைத்து வைத்துப் பேசுவதால் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ள வேண்டியிருக்குமே தவிர வேறு ஒன்றுமில்லை. அதில் யாருக்கு என்ன லாபம்?

அதிலும் உழைத்துத் தான் சாப்பிட வேண்டும் என்ற கட்சியைச் சேர்ந்தவன் நான். நாம் வாழ உழைக்கிறோம். உழைப்பதில் தான் இன்பம் இருக்கிறது; மனவளர்ச்சி இருக்கிறது. உழைத்தால் தான் நாமும் உயரலாம்; நமது நாடும் உயரும்.

அதனால்தான் காரியாலயத்தில் நான் செய்யும் வேலையைச் சோறுபோடும் வேலை என்று சொல்லுகிறேன். பார்க்கப் போனால் எல்லாருமே சாப்பாட்டுக்காகத்தான் உழைக்கிறார்கள். அதில் ஏற்றத் தாழ்வு வைத்துக் கொண்டிருக்கிறோமே அதுதான் மன்னிக்க முடியாத குற்றம்.


எதையோ சொல்ல வந்தவன் என்னென்னவோ சொல்லுகிறேன். எல்லாவற்றுக்கும் காரணம் இப்போது எனக்குக் கொஞ்சம் ஓய்வு இருப்பதுதான். அது கிடக்கட்டும். நான் ஏன் இந்தக் காரியாலய வேலைக்குப் போனேன்? என் மனைவி மக்களோடு கூடக் கொஞ்சிக் குலாவ நேரமில்லாமல் ஏன் பாடு படுகிறேன் தெரியுமா?

"மாதச் சம்பளத்தில் வேலையில் இருக்கிறோம். முதல் தேதி தவறாமல் சம்பளம் கிடைக்கும். அதை அப்படியே வாங்கிப் போய் மனைவியின் கையில் கொடுத்து விட்டால், குடும்பத்தைப் பற்றிய நம் வேலையும் முடிந்து விடுகிறது; கவலையும் விட்டது" என்று இந்த ரீதியிலேயே என் வாழ்க்கை கழிந்து கொண்டிருக்கிறது.

என் காரியாலய வேலைகளிடத்திலும், காரியாலய தஸ்தா வேஜுகளிடத்திலும், நான் அன்பாய், ஆசையாய் உறவாடுவது போல், என் அருமைக் குழந்தைகளை என்றைக்காகிலும் நான் எடுத்து வைத்து அன்பொழுகக் கொஞ்சியிருப்பேனா? இல்லவே இல்லை. இதுபற்றி என் மனைவிக்கு என்மீது குறை தான். நான் என்ன செய்வது?

எனக்கும் குழந்தைகளிடத்தில் சிரித்துப் பேசி, விளையாட வேண்டுமென்று கொள்ளை ஆசைதான். என் குழந்தைகளின் அழகிய முகத்தை ஆசை தீரப் பார்க்க வேண்டும் என்று எத்தனையோ நான் நினைத்திருக்கிறேன். என் பெரிய மகனின் அழகிய கண்கள் அப்படியே என் மனக் கண் முன் வரும். ஒரு கணம் வேலை ஓடாது. ஆனால் அதை நினைத்துப் பார்த்தால் முடியுமா? காரியாலய வேலைகளைக் காலத்தில் முடிக்க வேண்டாமா?

ஆனால் அப்படி முடிப்பதுதான் சாத்தியப் படுவதில்லையே! நான் காரியாலயத்திலிருந்து வீட்டுக்கு வரும்போதே, ஒரு பெரிய மூட்டை, காரியாலய தஸ்தாவேஜுகளையும் கொண்டு வர வேண்டி யிருக்கிறது. அவைகளை யெல்


3 வாசனைக் கலாரத்னங்கள்
கம் கம் ஜவாஜ்
அகர்பத்திகளில் அதி உயர்ந்தது
கம் பால்
கிருமி நாசினியாக உபயோகிக்கும் மட்டிப்பால் அகர்பத்திகள்
கம் அகர்
பூஜைகளுக்குரிய புனிதமான அகர்பத்தி
டி. எல். சுகந்தாலயா, வாசனைத்திரவிய வியாபாரிகள், பெங்களூர்-2


NOURISHING
ஜே. பி. மங்காராமின்
பிரசித்திபெற்ற
பிஸ்கோத்துகள்
● மிருதுவானது
● ருசியுள்ளது
● மொறுமொறுப்பானது
ஜே. பி. மங்காராம் & கம்பெனி, குவாலியர்
ஏஜண்டுகள்: மெஸர்ஸ். ஜி. ஜேதாநந்த் நந்த்லால் & கோ.
1/94, ராமசாமி தெரு, மண்ணடி, மதராஸ்


ASPRO
தொண்டைப் புண்ணா?
விரைவில் 2 ஆஸ்ப்ரோ வில்லைகள் சாப்பிடவும்.



அறிவாளி!
ஸெவன் ஓ' கிளாக்
ஸ்லாட்டெட்
பிளேடுகளினால்
தினசரி முகத்தை
க்ஷவரம் செய்து
கொள்கிறார்.



ஸெவன் ஓ' கிளாக்
ஸ்லாட்டெட் பிளேடுகள்

முகத்தைச் சுத்தமாக க்ஷவரம் செய்திருப்பது முன்னேற்றத்தின் அறிகுறியாகும். ஆனால் தினசரி க்ஷவரம் செய்து வருதல் அவசியம் நாவிதனைக் கொண்டு க்ஷவரம் செய்வதால் அதிகச் செலவு நேரிடும்.

ஆனால், தினமும் சிக்கனமான முறையில், சுத்தமாக க்ஷவரம் செய்து கொள்வதற்கு ஸெவன் ஒ' கிளாக் பிளேடுகள் கிடைத்திருப்பது ஓர் அதிர்ஷ்டமே. ஸெவன் ஒ' கிளாக் பிளேடுகள் அதி கூர்மையானவை, சுத்தமாக க்ஷவரம் செய்பவை, நெடுநாள் உழைப்பவை, உண்மையான சிக்கனம் வாய்ந்தவை.

வெற்றியடைந்த, வசீகரத் தோற்றமுடைய, மனிதர்களோடு சேர்ந்து கொள்ளுங்கள்! தினசரி ஸெவன் ஒ' கிளாக் பிளேடுகளினால் க்ஷவரம் செய்யுங்கள்.

7 o'clock

ஸெவன் ஒ' கிளாக் ஸ்லாட்டெட் பிளேடுகள்



10 ப்ளேடுகள் கொண்ட
பாக்கெட் ரூ 1

57(1) TAM.

லாம், இரவோடு இரவாக எழுதி முடித்து, மறுநாள் தபாலிலேயே கண்டிப்பாகச் சேர்த்தாக வேண்டும்.

இந்த வேலையைக் காரியாலயத்திலேயே முடித்துவிட்டு வரவேண்டுமென்றுதான் பார்க்கிறேன். அதுதான் முடியவில்லை.

காலையில் நான் காரியாலயத்துக்குப் போய்ச் சேருவதற்கு முன்பே, என் மேல் அதிகாரி எனக்கு முன்வந்து உட்கார்ந்து விடுகிறார். அவர் இழுத்த இழுப்புக்கு நான் ஆடத்தான் பொழுது சரியாக இருக்கிறது. அவர் காரியாலயத்தில் இருக்கும் வரை, என் எழுத்து வேலையை என்னால் கவனிக்க முடியாது. அப்படியாவது அவர் சீக்கிரத்தில் எழுந்து வீட்டுக்குப் போனாலும் தேவலையே. இரவு எட்டு மணிக்கு அவர் கிளம்புவதற்கும் நான் எல்லாவற்றையும் மூட்டை கட்டிக்கொண்டு, வீட்டுக்குக் கிளம்புவதற்கும் சரியாக இருக்கிறது. தினமும் இப்படித்தான்.

இப்பொழுது சொல்லுங்கள்! எனக்கு இந்த வேலையில் எப்படி ஓய்ச்சல் ஒழிவிருக்கும்! வேலை, வேலை, வேலைதான்!

வேலை செய்து பிழைப்பதற்கென்றே பிறந்துவிட்ட நான், சம்பளம் தரும் வேலையைப் புறக்கணித்துவிட முடியுமா?

என் மனைவி ஆசைப்படுகிறபடி, அவள் அன்புடன் சீராட்டி, பாராட்டி வளர்க்கும் குழந்தைகளை நானும் வீட்டில் வைத்துக் கொஞ்சி விளையாடிக் கொண்டு இருந்து விடலாம். அல்லது என் குடும்பத்தைப் பற்றிய இதர வேலைகளில் என் கவனத்தைச் செலுத்திவிடலாம். ஆனால், நான் வீட்டில் செய்து முடிக்க வேண்டுமென்று கொண்டு வந்திருக்கிற காரியாலய வேலையை யார் பார்ப்பது? நாளைக்கு ஏதாவது தாமதமோ, தவறுகளோ நேர்ந்து விட்டால், நான் தப்பமுடியாதே! என் வேலையை நான் காப்பாற்றிக் கொள்ள வேண்டாமா?

நான் காரியாலயத்திலிருந்து வீட்டுக்குத் திரும்பியதும், தந்தையின் முகம் நோக்கி என் குழந்தைகள் ஏங்கிய முகத்தோடு, என்னருகே வந்து நிற்கத்தான் செய்கின்றனர். அவர்களைக் கட்டியணைத்து, உச்சி முகர்ந்து, முத்தமிடத்தான் என்னால் முடியவில்லை. அவர்கள் என்னிடம் எதிர்பார்க்கும் அளவு அன்பைச் சொரிந்து, அவர்கள் விரும்பியபடியே ஒவ்வொன்றும் செய்து, அவர்களின் சின்னஞ் சிறிய உள்ளத்தின் ஆசையை என்னால் தணிக்க முடியவில்லையே! நான் வீட்டில் செய்ய இருக்கும் காரியாலய வேலை இதற்குத் தடையாயிருக்கிறது.

குழந்தைகள் முகத்தில் உள்ள ஏக்கத்தை என் முகம் கூடத்தான் பிரதிபலிக்கச் செய்கிறது. நான் அவர்களைக் கண்ணால் பார்ப்பதோடு நின்றுவிடுகிறேன். இது எனக்கு அரை குறை திருப்தியாகக்கூட இருக்கலாம். ஆனால், அந்தச் சின்னஞ் சிறு குழந்தைகளுக்கு, இது திருப்தியளித்திருக்க முடியாதே! இந்தப் பரிதாபக் காட்சியைக் காண என் மனைவியும் வந்து சேர்ந்து விடுகிறாள். அவள் அன்பு நிறைந்த முகத்திலும் ஏமாற்றக் குறி தான்.

"காரியாலய வேலை என்றைக்கும் இருக்கிறது. இந்தக் குழந்தைகளைக் கொஞ்சம் பாருங்களேன். அவர்கள் 'அப்பா, அப்பா' என்று இத்தனை நாழி உங்களுக்காகக் காத்துக் கொண்டு இருந்தார்கள். நீங்கள் என்னடா என்றால், குழந்தைகளை முகம் எடுத்தும் பார்க்க மாட்டேன் என்கிறீர்கள். அதோ பாருங்கள், சின்னப் பாப்பா கையை ஆட்டிக் கொண்டு உங்களைத் தூக்கச் சொல்லித் தவழ்கிறது, பாருங்கள்" என்று எனக்குப் போதனை செய்ய வந்துவிடுகிறாள் என் மனைவி!

"வேலை கெட்டாலும், கெடட்டும், அவள் சொல்லுகிறாளே" என்று சின்னக் குழந்தையைக் கொஞ்சம் தூக்கி வைத்திருப்போமென்றாலும் முடிவதில்லை. சுற்றி நிற்கும், மற்றக் குழந்தைகள்; "என்னைத் தூக்கப்பா, என்னைத் தூக்கப்பா" என்று போட்டி போட்டுக் கொண்டு என்னை நெருக்கிக் கொண்டு விடுகின்றனர். அவர்களை ஒவ்வொருவராகத் தூக்கி இறக்கி விட்டு "போதும், போய் விளையாடுங்கள்" என்று அவர்களைத் தட்டிக் கொடுத்து விட்டுக் காரி





பத்திரிகை ஆசிரியர்:—'குண்டு' என்ற புனை பெயரில் பத்திரிகைகளுக்குக் கதை எழுதி வந்தாரே அவர் ஒரு சாஸ்திரிகளைப் பிடித்து வேதாந்த விஷயங்களைப் பிரசாரம் செய்யச் சொல்லியிருக்கிறாராம். அவருக்கு என்ன திடீர் என்று அப்படித் தோன்றிவிட்டது?

வந்தவர்:—அதில் ஆச்சரியம் என்ன? எல்லாம் தொழில்தான். பத்திரிகைக்கு எழுதுவதை விட்டுவிட்டு ஒரு இன்ஷூரன்ஸ் கம்பெனியில் ஏஜென்ஸி எடுத்திருக்கிறார். அதனாலே 'வாழ்வு அநித்தியம். இன்றைக்கு இருப்பார் நாளைக்கு இருப்பதில்லை' என்கிற விஷயத்தை ஜனங்களுக்கு எடுத்துச் சொல்ல அவரை உபயோகித்துக் கொண்டிருக்கிறார். அவ்வளவுதான்!

யாலய தஸ்தாவேஜுகளை அவிழ்த்துக் கவனிக்கத் தொடங்கி விடுவேன்.

இந்த வேலைகளில் பாதிக்கு மேல் என் மேல் அதிகாரி கவனித்து முடிவு செய்ய வேண்டியதாய்த்தான் இருக்கும். இருந்தாலும் அவற்றை யெல்லாம் பார்த்து அதன் விஷயங்களைச் சுருக்கி எழுதி அதற்கு இந்த மாதிரி செய்யலாம் என்று அபிப்பிராயமும் எழுதிவைக்க வேண்டும். அப்படிச் செய்ய வேண்டும் என்பதும் என்னுடைய மேல் அதிகாரியின் உத்தரவுதான்.

மேல் அதிகாரியின் உத்தரவுக்குக் கீழ்ப்படியா விட்டால் ஏற்படும் தொல்லைகளைச் சொல்லி முடியாது. அதாவது நான் செய்ய வேண்டிய வேலைக்கு அல்ல. அவர் செய்ய வேண்டிய வேலைகளை நான் செய்து முடிக்காமல் இருந்து விடும்படியான நிலைமையே கீழ்ப்படியாத குணமாகத் தோன்றிவிடும் என் மேலதிகாரிக்கு.

அதனால்தான் இரவு வேளைகளிலும் வீட்டுக்கு என் காரியாலய தஸ்தாவேஜுகளை எடுத்து வந்து அத்துடன் போராட வேண்டியிருக்கிறது. என் அருமை மனைவியையும் சின்னஞ் சிறு குழந்தைகளையும் பார்த்துச் சிறிது நேரம்கூட அவர்களுடன் சந்தோஷமாக இருக்க முடிவதில்லை.

அப்படிக் கஷ்டப்பட்டு எழுதி வைக்கும் என் குறிப்புகளுக்குச் 'சபாஷ்!' பட்டமும், அந்தஸ்தும் இன்னும் அதிக சம்பளமும் என் மேல் அதிகாரிக்குத்தான். அந்த மாதிரி சமயங்களில் என் மனத்தை முற்றும் துறந்த முனிவரின் மனத்தைப் போல மாற்றிக் கொண்டு விடுவேன்.

காரியாலய வேலை இரவு பகல், எந்நேரமும் என்னை அழுத்திக் கொண்டிருப்பதனால், வீட்டுக்கு வேண்டிய அரிசி பருப்பு வாங்குகிற வேலையில் நான் ஈடுபட்டுக் கொள்வதில்லை.

"இந்தாடியம்மா. சம்பளப் பணம் அப்படியே முழுசாக இதோ இருக்கு. நீயாச்சு. உன் மாமி, மாமனாராச்சு. எப்படிச் செலவு செய்வீர்களோ, எனக்குத் தெரியாது. என் காரியாலய வேலைக்கு இடைஞ்சல் இல்லாமல் இருந்தால் சரிதான்" என்று ஒவ்வொரு முதல் தேதியும் நான் இதே பல்லவியைத் தான் பாடிக் கொண்டிருக்கிறேன்.

"நன்றாய்ச் சொன்னீர்கள்! என்னதான் ஆயிரமாயிரமாகக் கொண்டு வந்து கொட்டுகிற வேலையாயிருந்தாலும், உங்களுக்கு இப்படிக் குடும்பப் பொறுப்பு இல்லாமல் இருக்கக் கூடாது, போங்கள்" என்று ஒரு அனுபல்லவியையும் என் மனைவி விடாமல் பாடிக் கொண்டுதான் இருக்கிறாள்.

"நீ மகா புத்திசாலிதான். உன் பேச்சைக் கேட்டுக் கொண்டு இருந்துவிட்டால், இப்படி கலை கலையாகப் பணம் (அப்படி ஒன்றும் அதிகமில்லை. ஒரு நூற்று ஐம்பது ரூபாய் காசுதான்) வந்து விடுமாக்கும்" என்று அவளைத் தொடர்ந்து நானும் சரணம் பாடிக் கொண்டிருக்கிறேன்.

இப்படியாக என் காரியாலய வேலையைக் கருத்துடன் செய்து வருகிறேன். அதனால் காரியாலயத்திலாவது ஏதாவது நல்ல பெயர் உண்டா? அது ஒன்றும் கிடையாது. நான் இரவு பகல் பாடுபட வேண்டியது மேல் அதிகாரியின் கோபத்துக்கு உள்ளாக வேண்டியது. மாதம் பிறந்தால் நூற்று ஐம்பது ரூபாய் சம்பளம். இதையும் அவர் ஏதோ தருமத்துக்குக் கொடுப்பது போல நினைத்துக் கொண்டு என்னைப் பார்த்து அடிக்கடி திட்டுவது, மிரட்டுவது.

சும்மா தூங்கி விட்டுக் காலம் தள்ளும் சில புண்ணிய ஆத்மாக்களுக்கு எங்கள் காரியாலயத்தில் இருக்கத்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு மாதம் முந்நூறும் நானூறும் சம்பளம். இதைப் பற்றிக் கேட்பதற்கு நியாயமில்லை.

இப்படியெல்லாம் இல்லாமல் வேலைக்குத் தகுந்த ஊதியம் என்று கிடைக்குமோ! எட்டு மணி நேரம் காரியாலயத்தில் வேலை செய்தது போக மற்ற வேளைகளில் என் குடும்பத்தாருடன் மகிழ்ச்சியாக இருக்கும் நாள் கிடைக்காதா என்று ஏங்குகிறேன்.

அடாடா! மணி ஒன்பது அடித்து விட்டதே! ஏதேதோ நினைத்துக் கொண்டிருந்து விட்டேனே! எனக்குக் காரியாலயத்தில் வேலை இருக்கிறது. நான் போகிறேன்.

எப்படி என்னுடைய வேலை?

Edited Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116 - 119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras

உங்கள் குஜராத்தி ஜடைச்சிங்காரத்தின்



அழகை பூர்த்திசெய்ய

நீடித்து நிற்கும் பரிமளத்தோடுகூடின

கலிபோர்னியன் பாப்பி

ரெஜிஸ்டேர்ட் டிரேட் மார்க்

★ கூந்தல் தைலம் உபயோகியுங்கள்

இனம்!

இந்த ஜடைச்சிங்காரத்தைப் பற்றிய தகவல்களைத்தரும் துண் டுப்பிரசுரம் நெ. 5க்கு விளம்பர இலாகா, தபால்பெட்டி நெ. 822, பம்பாய் 1க்கு எழுதுங்கள். எந்த பாஷையில் வேண்டுமென் பதை குறிப்பிடவும். மற்ற ஜடைச் சிங்காரங்களை விவரிக்கும் துண் டுப்பிரசுரங்களுக்கு வரவிருக்கும் விளம்பரங்களை கவனிக்கவும்.

இன்னுமொரு
நேர்த்தியான
இராஸ்மிக்
தயாரிப்பு



ராஸ்மிக் கம். லிட., லண்டனுக்காக இந்தியாவில் தயாரித்தது

CBP. 12-X30 TM

Regd. No. M. 4392
Registered as a newspaper in Ceylon